

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 11 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 03 – ஞாயிற்றுக்கிழமை 20 ஆகஸ்ட் 2023 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 11 : Thiruvalluvar Year - 2054 - Aavani 03 - Sunday 20 August 2023 - Kovai ★★ 16 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2023) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மற்றும் மீனவ சங்கங்கள் இணைந்து நடத்தும் மீனவர் நல மாநாடு மற்றும் 14,000 மீனவப் பயனாளிகளுக்கு ரூ.88.90 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் பாக்–வளைகுடா பகுதி மீனவர்களுக்கு 70 சதவிகித மானியத்தில் ஆழ்கடல் மீன்பிடி படகு வாங்குவதற்கான நிதியுதவியை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த விழாவில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், அமைச்சர் பெருமக்கள், கனிமொழி கருணாநிதி எம்.பி., கே.நவாஸ்கனி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ.முருகேசன், இராம. கருமாணிக்கம், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மீன்வளத்துறை ஆணையர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ சங்கங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2023) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மற்றும் மீனவ சங்கங்கள் இணைந்து நடத்தும் மீனவர் நல மாநாடு மற்றும் மீனவர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்கங்களை பார்வையிட்டார். உடன் மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

## மீனவர்களுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு அளித்த எந்த உறுதி மொழியையும் நிறைவேற்றவில்லை!

**பிரதமர் மோடி ஆட்சியில், இலங்கை கடற்படையினரால்**

# மீனவர் கைது - படகுகள் பறிமுதல் - துப்பாக்கிச் சூடு; குறையவே இல்லை!

## இராமேஸ்வரத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு!

**இராமேஸ்வரம், ஆக. 20 -**

**இராமேஸ்வரத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மீனவர்களுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு அளித்த எந்த உறுதி மொழியையும் நிறைவேற்றவில்லை என்றும் பிரதமர் மோடி ஆட்சியில் இலங்கை கடற் படையினரால் மீனவர் கைது - படகுகள் பறிமுதல் - துப்பாக்கிச் சூடு; குறையவே இல்லை என்றும் குற்றம் சாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2023) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மற்றும் மீனவ சங்கங்கள் இணைந்து நடத்தும் மீனவர் நல மாநாடு மற்றும் மீனவர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியில் மீனவர்கள் நல மாநாட்டை நடத்த இருப்பதாகவும் - அதில் நீங்கள் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு அவர்களும், அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களும், ராஜ கண்ணப்பன் அவர்களும், அதேபோல் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கமும் விடுத்த அன்பான அழைப்பை ஏற்று நான் இங்கே வந்திருக்கிறேன்.

தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையமும், மீனவ சங்கங்களும் இணைந்து இந்த மாநாட்டை நடத்துகிறார்கள். பொதுவாக அரசு நிகழ்ச்சிகளில் மீனவ சங்கங்களை இணைத்துக் கொள்ள மாட்டார்கள். மீனவர்கள் மாநாடாக இருந்தால், அதில் அரசு அதிகாரிகள் இடம்பெற மாட்டார்கள். ஆனால், இங்கே இரண்டு தரப்பையும் இணைத்து இந்த மாநாட்டை அமைச்சர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

### தாலமியின் நிலவியல் கையேட்டின் தகவல்!

1076 கிலோ மீட்டருக்கு மிக நீளமான கடற்கரையைக் கொண்ட மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. நமது கப்பல்கள் பல்வேறு உலக நாடுகளுக்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே சென்றிருப்பதை தாலமியின் நிலவியல் கையேடு சொல்கிறது.

கட்டுமரம், நாவாய், தோணி, வத்தை, வள்ளம், மிதவை, ஓடம், தெப்பம், டிங்கி, பட்டுவா, வங்கம், அம்பி, திமில் என்று வகை வகையாக கலம் செலுத்தியவர்கள் தமிழர்கள்.

நம்மைச் சூழ்ந்துள்ள அனைத்துக் கடல்களிலும் தமிழர்கள் கலம் செலுத்தியிருக்கிறார்கள். உலகப் பயணிகள் எல்லோரும் தமிழ்நாட்டுக் கடலோரத்தை நோக்கி வந்தார்கள். அந்த வகையில், தமிழ்நாட்டை உலகத்தோடு இணைத்தது கடல். கடல் ஆழமானது மட்டுமல்ல, வளமானது. மீன்பிடி தொழிலில் இந்தியாவில் ஐந்தாவது பெரிய மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. அந்தளவுக்கு தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மீனவர்கள் பங்களிக்கிறார்கள்.

“கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது? கடல் கடந்து போன தமிழனின் கண்ணீரால்” என்று எழுதினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

### தி.மு.கழக அரசின் ஏராளமான திட்டங்கள்!

கடல் கடந்து போன தமிழனின் கண்ணீரால் மட்டுமல்ல - கடலோரத்தில் வாழும் தமிழனின் கண்ணீராலும் தான் உப்பாக இருக்கிறது என்பதை உணர்ந்த நம்முடைய கழக அரசு, தனது ஆட்சிக்காலத்தில் ஏராளமான திட்டங்கள தீட்டி வந்திருக்கிறது.

* மீனவர் நல வாரியம்

* மீன்பிடி தடைக்கால நிவாரணம்

* கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி மாவட்ட மீனவர்களுக்கு மானிய விலையில மண்ணெண்ணெய் வழங்குவது போன்றவை கலைஞர் ஆட்சியில்தான் செய்யப்பட்டது.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் கடந்த இரண்டு வருஷமாக ஏராளமான திட்டங்கள் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் துறையைக் கவனித்து வரும் நம்முடைய அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் துறை அமைச்சராக மட்டுமல்ல, மீனவ நண்பனாகவே அவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்த இரண்டு ஆண்டுகாலத்தில் இந்தத் துறையில் மட்டுமே நம்முடைய ஆட்சி செய்திருக்கின்ற சில சாதனைகளை உங்களிடத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

உங்களுக்கு இது நன்றாகவே தெரிந்திருக்கும், ஏற்கனவே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள் என்றாலும், ஊடகத்தினர் மற்றும் பொதுமக்களும் தெரிந்திருக்கவேண்டும் என்பதற்காக இதை நான் சொல்ல விரும்புகிறேன்.

* மீன்வளத் துறையின் பெயரை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை என்று மாற்றினோம்.

* மீன்பிடி குறைவுக் கால நிவாரணத்தை 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 6 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, 1 லட்சத்து 80 ஆயிரம் குடும்பங்கள் இதனைப் பெற்று வருகிறார்கள்.

* தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் மீன்வள இளங்கலைப் படிப்பில் மீனவ மாணவர்களுக்கான இடஒதுக்கீட்டை 5 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக உயர்த்தி இருக்கின்றோம்.

* காணாமல் போகும் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் தினசரி உதவித் தொகையை 250 ரூபாயிலிருந்து 350 ஆக உயர்த்தி வழங்கி வருகிறோம்.

> **மீனவர்களின் நலனைக் காப்பதாக, என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கும். எனவே, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அப்படித்தான் செயல்படுவான் என்ற உறுதியைக் கூறிக் கொண்டு, அதற்கு மீனவ சமுதாயம் எப்போதும்போல எங்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.**

* இயற்கை மரணமடையும் மீனவர் நல வாரிய உறுப்பினர் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம்.

* மீனவ கிராமங்களில் கடல் அரிப்பைத் தடுத்திடவும், மீன்பிடி படகுகளை பாதுகாப்பாக நிறுத்திடவும், கடல் அரிப்பு தடுப்புச் சுவர்களையும், மீன்பிடி இறங்கு தளங்களையும், தூண்டில் வளைவுகளையும் அமைத்துக் கொடுத்திருக்கின்றோம்.

### 2,07,000 மீனவர்களுக்கு ரூ.62.19 கோடி நிவாரணம்!

* மீன்பிடித் தடைக்கால நிவாரண உதவியாக மீனவக் குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட மீனவர் குடும்பங்கள் இதனால் பயனடைகிறார்கள்.

* கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். 14 கடலோர மாவட்டங்களைச் சார்ந்த 2 இலட்சத்து 7 ஆயிரம் மீனவர்களுக்கு மாநில அரசின் பங்களிப்பு நிவாரணமாக 62 கோடியே 19 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

* கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. இதன் மூலமாக 2 லட்சம் மீனவ மகளிர் பயன்பெற்று வருகிறார்கள்.

* மீனவர்களுக்கு மிக முக்கியமான தேவை டீசல் எரிபொருள். மீன்பிடி விசைப் படகுகளுக்கு ஆண்டொன்றிற்கு 18,000 லிட்டர்; நாட்டுப் படகுகளுக்கு ஆண்டொன்றிற்கு 4,000 லிட்டர் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட டீசலை நம்முடைய அரசு வழங்கி வருகிறது.

* அதேபோல் தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களுடைய இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

* நாட்டுப் படகுகளுக்கு இயந்திரங்கள் வாங்குவதற்கு 40 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது.

* 10 மீட்டர் நீளமுள்ள கண்ணாடி நாரிழைப் படகு, இயந்திரம், வலைகள் மற்றும் பனிக்கட்டி பெட்டி ஆகியவற்றை வாங்குவதற்கு மானியம் வழங்கப்படுகிறது.

* புதிய தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலை சூரை மீன்பிடி படகு கட்டிட 50 விழுக்காடு மானியம் தரப்படுகிறது.

### புதிய இறால் வளர்ப்பு பண்ணை அமைக்க நிதி!

* தமிழ்நாட்டில் கடற்பாசி வளர்ப்பை ஊக்கு விக்க 127 கோடியே 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு கடற்பாசி பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது.

* இராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களை சேர்ந்த 1,311 மீனவ மகளிருக்கு கடற்பாசி வளர்ப்பு மேற்கொள்ள கடற்பாசி வளர்ப்பு மிதவைகள் மற்றும் கயிறுகளை 1 கோடியே 42 லட்சம் ரூபாய் மானியத்தில் வழங்கியுள்ளது.

* திருவள்ளூர், இராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்களைச்சார்ந்த மீனவர்களுக்கு கடலில் மிதவை கூண்டுகளை அமைக்க மானியம் வழங்கப்பட்டிருக்கிறது.

* திருவள்ளூர், செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களில் கடல் மிதவை கூண்டுகள் அமைக்கப்பட்டு வருகிறது.

* தமிழ்நாட்டில் இறால் வளர்ப்பை ஊக்குவிக்க, மொத்தம் 100 ஹெக்டேர் பரப்பளவுகளில் புதிய இறால் வளர்ப்பு பண்ணைகள் அமைக்க 14 கோடி ரூபாய் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

* நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, குறைந்த அளவு நீர்ப் பயன்பாட்டில் இறால் வளர்ப்பு மேற்கொள்ள ஏதுவாக மொத்தம் 25 உயிர்க்கூழ் இறால் வளர்ப்பு அலகுகள் அமைக்க 4 கோடியே 50 லட்சம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

* மயிலாடுதுறை, இராமநாதபுரம் மாவட்டங்களில் தலா ஒரு கடல் மீன்குஞ்சு பொரிப்பகம் அமைக்க மொத்தம் 30 இலட்சம் ரூபாய் மானியம் வழங்க அரசு ஒப்புதல் வழங்கியிருக்கிறது. பணிகளும் வேகமாக நடைபெற்று வருகிறது.

* உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்க ஏராளமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

* மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்கள் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுகளில் வெற்றிபெற 6 மாத சிறப்புப் பயிற்சியை நடத்தி இருக்கிறோம். இதில் 41 மாணவர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

* மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்கள் கடல்சார் படிப்புகளை பயில தமிழ்நாடு அரசு 88 பேருக்கு மொத்தம் 27 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கி யிருக்கிறது.

* மீனவ சமுதாயத்தைச் சார்ந்த 1000 நபர்களுக்கு கடலோர உயிர் பாதுகாப்புப் பயிற்சி 47 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவுகளில் வழங்கப்பட்டிருக்கிறது.

* தமிழ்நாடு மீனவர் நலவாரியம் மூலம் 9,547 பயனாளிகளுக்கு நிவாரண உதவியாக 12 கோடியே 43 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 20-08-2023

# ஜெயலலிதாவின் நாடகங்கள் 2

★ 1989 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் தி.மு.க. ஆட்சி அமைந்தது. ஜானகி காலத்தைப் போலவே வன்முறையை உருவாக்கி, தி.மு.க. அரசையும் கலைக்க வைக்க ஜெயலலிதா நினைத்தார். அதனால் திட்டமிட்டு வன்முறை நாடகத்துக்கு ஒத்திகை பார்த்தார்.

1989 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதி நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும் முதலமைச்சர் கையில் இருந்து பட்ஜெட் புத்தகத்தைப் பறிப்பதும், அவரைத் தாக்குவதும் ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் வீட்டில் போடப்பட்ட சதித் திட்டம் என்பதை, அப்போது அவருடன் இருந்த எஸ்.திருநாவுக்கரசர் பின்னர் ஒப்புக் கொண்டார். பிற்காலத்தில் சட்டமன்றத்திலேயே இந்தக் காட்சிகளை விவரித்து எஸ்.திருநாவுக்கரசர் பேசிப் பதிவு செய்துள்ளார். எனவே, 'ஜெயலலிதாவின் நாடகம் இது' என்பதில் துளியும் மக்களுக்குச் சந்தேகமில்லை.

சம்பவம் நடந்த அன்றே பேட்டி அளித்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 'அ.தி.மு.க.வினர் இன்று காலையில் இப்படித் திட்டமிட்டு இருப்பது எங்களுக்குத் தெரிய வந்தது. அதனால் சபையில் எது நடந்தாலும் தி.மு.க. உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்று கட்டளை யிட்டிருந்தேன்' என்று சொன்னார்கள். 'அரசாங்கத்தைக் கலைக்க நடந்த சதி' என்றே அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் பேட்டி அளித்தார்கள்.

★ இது மட்டுமல்ல; தன்னைக் கொலை செய்ய அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திட்டமிட்டதாகவும் பேட்டி அளித்தார் ஜெயலலிதா. "மருத்துவ மனைக்கு என்னைப் பார்க்க வருபவர்கள் கோவில் பிரசாதமாக சர்க்கரைப் பொங்கலும், கேசரியும் கொடுக்கிறார்கள். அதில் விஷம் இருக்கலாம் என்பதால் நான் எந்தப் பிரசாதத்தையும் சாப்பிடவில்லை" என்று பேட்டி நாடகம் நடத்தியவர்தான் ஜெயலலிதா. 1989 ஏப்ரல் 5 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் உரிமை மீறல் பிரச்சினையாகவே கொண்டு வந்து விவாதம் நடந்தது.

★ 24.2.1990 அன்று அதிகாலை 5 மணிக்கு மீனம்பாக்கம் விமான நிலையம் அருகே ஜெயலலிதாவின் கார் மீது லாரி ஒன்று மோதியது. இது தற்செயலாக நடந்த விபத்து. பசுமாடு குறுக்கே வர, லாரியைத் திருப்பினார் லாரி டிரைவர். அது ஜெயலலிதாவின் காரில் மோதி விட்டது. ஆனால், அவரது காரை கருப்பு கார் ஒன்று பின்தொடர்ந்து வந்ததாகவும், வயர்லெஸ் மூலமாக ஒரு லாரிக்கு தகவல் சொல்லப்பட்டதாகவும், அந்த லாரி திடீரென வந்து ஜெயலலிதா காரை இரண்டு முறை மோதியதாகவும் கதை சொன்னார்கள். அந்த லாரியில் 'உதயசூரியன்' வரையப்பட்டு இருந்தது என்று சொன்னது தான் ஹைலைட்.

இப்படி மோதும் நோக்கத்தோடு வந்ததாகச் சொல்லப்பட்ட டிரைவர் எங்கும் ஓடவில்லை. அங்கேயே வண்டியை நிறுத்திவிட்டு, வண்டிக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து இருந்தார். கிளீனரும் அங்கேயே நின்று கொண்டிருந்தார். காரில் இருந்தது ஜெயலலிதா என்ற வி.ஐ.பி. என்பதால் டிரைவர் பயந்து போய்விட்டார். அந்த லாரி உரிமையாளருக்குத் தகவல் சொல்லி, அவரும் வந்துவிட்டார். மூவரும் அவர்களாகவே காவல் நிலையத்துக்கு வந்தார்கள். ஜெயலலிதாவின் தாக்குதல் பழி நாடகம், விடிவதற்குள் பல்லிளித்தது.

★ தி.மு.க. ஆட்சியைக் கலைக்க 'விடுதலைப்புலிகளுக்கும் தி.மு.க. அரசுக்கும் நேரடித் தொடர்பு' என்ற பொய்யைக் கிளப்பிக் கலைக்க வைத்தார் ஜெயலலிதா. அதற்காகவே அன்றைய பிரதமர் சந்திரசேகரை தனது வீட்டிற்கு அழைத்து விருந்து வைத்தார்.

★ ஆளுநர் சென்னா ரெட்டிக்கும் ஜெயலலிதாவுக்குமான மோதல் அனைவரும் அறிந்தது ஆகும். அரசியல் – ஈகோ மோதல் அது. அதற்கு ஜெயலலிதா சொன்ன காரணம்தான் அவரது நாடகத்தன்மை எந்த அளவுக்குப் போகும் என்பதற்கு உதாரணம். "ஆளுநரைச் சந்திப்பதற்காக ஆளுநர் மாளிகைக்குச் சென்ற என்னிடம் ஆளுநர் சென்னாரெட்டி தவறாக நடந்து கொள்ள முயன்றார்" என்றார் ஜெயலலிதா.

★ வளர்ப்பு மகன் சுதாகரன் திருமணத்தை பல கோடியில் நடத்திய ஜெயலலிதாதான் அவரை வளர்ப்பு மகனே இல்லை என்றார். 'வளர்ப்பு மகன் திருமணத்துக்கு நான் எதுவும் செலவு செய்ய வில்லை' என்று பெங்களூரு நீதிமன்றத்தில் சொன்னார் ஜெயலலிதா.

★ கிண்டியில் இருக்கும் பொதுத்துறை நிறுவனமான டான்சியை; தான் பங்குதாரராக இருக்கும் ஜெயா பப்ளிகேஷன்ஸ், சசி எண்டர்பிரைசஸ்க்கு வாங்கினார். அரசு பதவியில் இருப்பவர் அரசு நிலத்தைப் பெறக் கூடாது என்பது விதி. வழக்கு வந்ததும், 'அதில் இருப்பது என்னுடைய கையெழுத்தே இல்லை' என்றார்.

★ 1996 தேர்தலில் படுதோல்வியை அடைந்தார் ஜெயலலிதா. அவரே தோற்றார். 'தேர்தல் தோல்விக்கு என்ன காரணம்?' என்று கேட்டு தொண்டர்களை கடிதம் எழுதச் சொன்னார். சசிகலா காரணம் என்று பலரும் கடிதம் எழுதினார்கள். உடனே சசிகலாவை நீக்குவதாக அறிவித்தார். 'சில தனிநபர்களை விட கட்சியின் எதிர்காலமே முக்கியம்' என்று அறிக்கை விட்டார். சசிகலா அப்போது சிறையில் இருந்தார். அவரை சிறைக்குள் சென்று பார்த்து விட்டு வந்துதான் இந்த நாடகத்தை அரங்கேற்றினார் ஜெயலலிதா.

1996 செப்டம்பரில் சசிகலாவை நீக்கி அறிக்கை விட்ட ஜெயலலிதா, 1997 ஜூலையில் அறிக்கை விடாமலேயே சேர்த்துக் கொண்டார். பத்து மாத நாடகம் முடிந்தது. சிறையில் இருந்து ஜாமீன் வாங்கிவிட்டு வெளியில் வந்த சசிகலா, நேராக போயஸ் கார்டன் வந்தார். அவரை வாசலில் நின்று தட்டு வைத்து ஆரத்தி காட்டி வரவேற்றார் ஜெயலலிதா.

★ தனக்கு எதிராக பெங்களூரில் உட்கார்ந்து பேசியதாக சசிகலா குடும்பத்தினர் அனைவரையும் 2012 இல் நீக்கினார் ஜெயலலிதா. மூன்றே மாதத்தில் சசிகலாவை மட்டும் போயஸ் கார்டனில் சேர்த்துக் கொண்டார் ஜெயலலிதா.

★ 1991 ஆம் ஆண்டு 2 கோடியாக இருந்த ஜெயலலிதாவின் சொத்து, ஐந்தே ஆண்டுகளில் 66 கோடியாக உயர்ந்ததுதான் அவர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கு ஆகும். பெங்களூரு நீதிமன்றம் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய நால்வருக்கும் நான்காண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. 'நான் மைசூர் மகாராஜா குடும்பத்தைச் சேர்ந்தவள். இவை பரம்பரைப் பணம்' என்று சொன்னார் ஜெயலலிதா.

★ 23 கிலோ தங்கம், 125 கிராம் வைரம், 1,116 கிலோ வெள்ளி ஆகியவை அவரது வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டன. 'இவை எதுவும் தன் நகை அல்ல' என்றார். 'விசாரணை அதிகாரியான நல்லமநாயுடு, கொண்டுவந்து வைத்த நகை இது' என்று சொன்னவர்தான் ஜெயலலிதா.

★ 'சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் போயஸ் கார்டன் வீட்டில் இருந்து என்ன செய்தார்கள் என்பது எனக்குத் தெரியாது' என்றும் சொன்னவர் ஜெயலலிதா. இதனை நீதிபதி ஏற்கவில்லை. 4 ஆண்டுகள் சிறைத் தண்டனையை உறுதிப்படுத்தினார்.

இப்படி மொத்தமாகவே நாடகங்களுக்கு மேல் நாடகங்கள் நடத்தியவர்தான் ஜெயலலிதா. எனவே, நிர்மலா சீதாராமன்கள் எச்சரிக்கையுடன் பேச வேண்டும். ஜெயலலிதாவைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் பேச வேண்டாம்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2023) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மற்றும் மீனவ சங்கங்கள் இணைந்து நடத்தும் மீனவர் நல மாநாடு மற்றும் 14,000 மீனவப் பயனாளிகளுக்கு ரூ.88.90 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் இராமநாதபுரம், இராமேஸ்வரம், கீழக்கரை, திருவாடானை, ஆர்.எஸ். மங்கலம் ஆகிய வட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். இந்த விழாவில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ.முருகேசன், இராம. கருமாணிக்கம், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மீன்வளத்துறை ஆணையர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா.விஷ்ணு சந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ சங்கங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.08.2023) இராமநாதபுரம் ஆய்வு மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறப்பாக பணியாற்றி சிறந்த சமூக சேவையாற்றிய அரசுத் துறையைச் சேர்ந்த 10 பணியாளர்கள் மற்றும் சிறந்த முறையில் சமூக தொண்டாற்றிய 5 தொண்டு நிறுவனங்களின் நிர்வாகிகள் ஆகியோரை பாராட்டி, நினைவுப் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இராமநாதபுரம் மாவட்டத்தில் 'பசுமை தமிழ்நாடு' இயக்கத்தின்கீழ்

# 1 கோடி மரக்கன்றுகள் நடும் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

இராமநாதபுரம், ஆக.20-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (18.8.2023) இராமநாதபுரம் ஆய்வு மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இராமநாதபுரம் மாவட்டத்தில் பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் ஒரு கோடி மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை பயனாளிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி தொடங்கி வைத்தார்.

அதன் விவரம் வருமாறு:

முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான பசுமை தமிழ்நாடு இயக்கம் மூலம் வனப் பரப்பினை அதிகரிக்கும் நோக்கத்தோடு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு கோடி மரக்கன்றுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு பல்வேறு துறைகளின் மூலம் மாவட்டம் முழுவதும் வளர்க்கப்பட்டு வருகிறது. பெருநெல்லி, வாகை, மூங்கில், ஆலமரம், அரசமரம், அத்தி, விளாம்பழம், ஆவிமரம், கொடுக்கப்புளி, புங்கன், வன்னி, கொய்யா, பூவரசு போன்ற மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு கோடி மரக்கன்றுகள் நடும் பணியினை தொடங்கிவைப்பதன் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கி, இராமநாதபுரம் மாவட்ட பசுமை தமிழ்நாடு இயக்கத்தினைத் தொடங்கி வைத்தார்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு கோடி மரக்கன்றுகள் நடவு செய்யும் பணி நிறைவு செய்யப்படும்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்து ராமலிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நிலங்களின் வழிகாட்டி மதிப்பை சீரமைக்க மதிப்பீட்டுக்குழு!

சென்னை, ஆக.20-

தமிழ்நாட்டில் வழிகாட்டி மதிப்புகள் விவசாய நிலங்களுக்கு ஏக்கரிலும், மனை நிலங்களுக்கு சதுரடியிலும் நிர்ணயம் செய்யப்படுகிறது. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்ட வழி காட்டி மதிப்புகள் பெரும்பாலான இடங்களில் வெளிச்சந்தை மதிப்பை விட மிக மிக குறைவாக உள்ளன. எனவேதான் 01.04.2023 முதல் ஏற்கனவே, அதாவது 08.06.2017 அன்று இருந்த வழிகாட்டி மதிப்பிற்கு மாற்றியமைக்கப்பட்டது.

மனையிடங்களின் வழிகாட்டி மதிப்பு மிக மிக குறைவாக இருந்ததால் வங்கிகளில் சொத்தின் மதிப்பிற்கு ஏற்றாற்போல் கடன் பெற முடியவில்லையென 27.07.2023 அன்று நடைபெற்ற பதிவுத்துறை கருத்துக் கேட்பு கூட்டத்தில் கட்டடம் கட்டி விற்போர் சங்கப் பிரதிநிதிகளும், மனைப்பிரிவு ஏற்படுத்தி விற்போர் சங்கப் பிரதிநிதிகளும் தெரிவித்தனர். எனவே, மனையிடங்களின் வழிகாட்டி மதிப்பு உயர்த்தப்பட வேண்டும் என்று ஏகமனதாக கோரிக்கை வைத்தனர். மேலும் விளைநில மதிப்பும் சில இடங்களில் மிக மிக குறைவாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்திய முத்திரைச்சட்டம் பிரிவு 47(AA)ன் படி பதிவுத்துறை தலைவர் தலைமையில் வழிகாட்டி மதிப்பை சீரமைக்க மைய மதிப்பீட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.



வன்முறையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள, மணிப்பூர் மாநிலத்தின் விளையாட்டு வீரர், வீராங்கனையர், தமிழ்நாட்டுக்கு வந்து பயிற்சி மேற்கொள்ள, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அழைப்பை ஏற்று, மணிப்பூரிலிருந்து 10 வாள்வீச்சு வீரர்கள் 5 வீராங்கனைகள் 2 பயிற்சியாளர்கள் தமிழ்நாடு அரசு ஏற்பாட்டில் சென்னை வந்துள்ளனர். அவர்களுக்கான தங்குமிடம் உள்ளிட்ட வசதிகளை தமிழ்நாட்டு விளையாட்டுத்துறை ஏற்பாடு செய்துள்ளது. நேரு உள் விளையாட்டு அரங்கில் பயிற்சி மேற்கொண்டு வரும் அவ்வீரர் வீராங்கனையரை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் சந்தித்து கலந்துரையாடினார். அவர்களின் பயிற்சி ஆட்டத்தை பார்த்து அவர் ஊக்கப்படுத்தினார்.

## இராமேஸ்வரம் மீனவர் நல மாநாட்டில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் அடுக்கடுக்கான அறிவிப்புகள்!

இன்றைய தினம் 14 ஆயிரம் பயனாளிகள் பயன்பெறும் வகையில் 88 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் இந்த விழாவின் மூலமாக கொடுக்கப்பட இருக்கிறது. அது மட்டுமல்ல, இங்கே, இத்தனை மீனவர்கள் வந்திருக்கிறீர்கள். இப்படி வந்திருக்கக் கூடிய நேரத்தில், அறிவிப்பு எதுவும் வெளியிடாமல் சென்றால் நன்றாக இருக்குமா? அதனால், நமது மீனவர்கள் எதிர்பார்த்து வரும் சில முக்கியமான அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்…

**முதல் அறிவிப்பு.**

★ மீனவர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 5 ஆயிரத்து 35 பேருக்கு வீடுகளுக்குப் பட்டா வழங்கப்படும்.

**2வது அறிவிப்பு.**

★45 ஆயிரம் பேருக்கு மீன்பிடி தொழிலுக்கான கூட்டுறவுக் கடன் வழங்கப்படும்.

**3வது அறிவிப்பு முக்கியமானது.**

★ மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை இதுவரை 5 ஆயிரம் ரூபாயாக இருந்தது. இனி 8 ஆயிரம் ரூபாயாக அது வழங்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில், கூறிய முக்கியமான அறிவிப்பு இது. இந்த நிவாரணத் தொகையை 1 லட்சத்து 79 ஆயிரம் பேர் பெற இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு,

★ 60 வயதுக்கு மேற்பட்ட மீனவர்கள் 15 ஆயிரம் பேருக்கு மீன்பிடி தடைக் காலத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும்.

**4வது அறிவிப்பு**

★ 1000 நாட்டுப் படகு மீனவர்களுக்கு, 40 விழுக்காடு மானியத்தில் இயந்திரங்கள் வழங்கப்படும்.

**5வது அறிவிப்பு**

★ தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் குமரி மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தற்போது மானிய விலையில் வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் அளவானது 3400 லிட்டரிலிருந்து 3700 லிட்டராக உயர்த்தி வழங்கப்படும்.

**6வது அறிவிப்பு**

★ மானிய விலையில் வழங்கப்படும் டீசல் எண்ணெய் அளவை உயர்த்தி வழங்கவேண்டும் என்று மீனவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, விசைப்படகுகளுக்கு 18 ஆயிரம் லிட்டரிலிருந்து 19 ஆயிரம் லிட்டராகவும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு 4 ஆயிரம் லிட்டரிலிருந்து 4 ஆயிரத்து 400 லிட்டராகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**7வது அறிவிப்பு**

★ தங்கச்சிமடம் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளும் பணி தொடங்கப்பட்டிருக்கிறது.

★ குந்துகால் மீன் இறங்குதளத்தை மேம்படுத்த ஆய்வுப் பணிகளையும் தொடங்கி இருக்கிறோம்.

★ பாம்பன் வடக்கு மீனவர் கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கும் பணிகள் தொடங்க உத்தரவிடப்பட்டிருக்கிறது என் பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**8வது அறிவிப்பு**

★ மீனவர் விபத்து காப்புறுதி திட்டத்தின்கீழ் 205 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

★ மீன் பிடிக்கையில் காணாமல் போகும் மீனவர்களுக்கு சுழல் நிதி 25 குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது.

**9வது அறிவிப்பு**

★ மீனவர்களுக்கான வீட்டுவசதி திட்டத்தின் கீழ் அலகுத் தொகையானது 1 லட்சத்து 70 ஆயிரம் ரூபாயிலிருந்து 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

**நிறைவாக 10வது அறிவிப்பு**

★ பல மீனவ கிராமங்களில் கடல் அரிப்பை தடுக்கவும், படகுகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தூண்டில் வளைவு அமைக்கப்படவேண்டும் என்று ஒரு கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது.

தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் இருக்கின்ற ஒரு வழக்கு காரணமாக இந்த பணிகளை உடனடியாக நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதற்கான கடலோர மேலாண்மை திட்டத்தை விரைவில் வகுத்து, உரிய ஒப்புதலை பெற்று தூண்டில் வளைவுகள் தேவைப்படும் இடங்களில் எங்கெங்கு சாத்தியமோ அங்கெல்லாம் பணிகளை விரைவில் தொடங்குவோம்.

இதுவரை நான் சொன்ன அறிவிப்புகள் மூலமாக 2 லட்சத்து 77 ஆயிரத்து 347 மீனவர்கள் பயனடைவார்கள். இதற்காக, மொத்தம் 926 கோடியே 88 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப் போகிறோம். ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் போகிறோம். மீனவர்களுக்கு அடுத்தடுத்து இது வழங்கப்பட இருக்கிறது.

**மீனவர் நல மாநாடு**
**முதல்வர் மு.க.ஸ்டாலின்**
**18.8.2023**

## ஒன்றிய பா.ஜ.க. அரசு

# கச்சத்தீவை மீட்டு மீனவர் நலனைக் காப்பாற்ற வேண்டும்!

2014 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக, பாம்பனில் பா.ஜ.க. சார்பில் 'கடல் தாமரை' என்ற போராட்டம் நடத்தப்பட்டது. நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். அப்போது, மறைந்த சுஷ்மா சுவராஜ் அவர்கள் இங்கே வந்திருந்தார்கள். ஒன்றியத்தில், பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் கச்சத்தீவு மீட்கப்படும். மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்று அவர் சொன்னார். இந்த 9 ஆண்டு காலத்தில் இது நடந்திருக்கிறதா?

இதே இராமநாதபுரத்தில்தான் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், மரியாதைக்குரிய பிரதமர் நரேந்திரமோடி என்ன பேசினார், "தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் துன்புறுத்தப்படுவதும் - கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதும் தினசரி நடந்து வருகிறது. இதற்கு காங்கிரஸ் அரசின் பலவீனம்தான் காரணம்" என்று சொன்னார். நாங்கள் கேட்கிறோம், பா.ஜ.க. ஆட்சியில் இருக்கும் இந்த ஒன்பது ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படவே இல்லையா?

மீனவர்கள் பாதுகாப்பாக வாழவேண்டும் என்றால், இந்தியாவில் வலுவான அரசு அமையவேண்டும். மீனவர்கள் வாழ்வு சிறக்க நான் ஒரு சபதம் எடுக்கின்றேன் என்று குமரிக்கு சென்று, 2014 ஆம் ஆண்டு ஏப்ரலில் பேசினார் மோடி அவர்கள். சபதத்தை போட்டார். அந்த சபதத்தை நிறைவேற்றி விட்டாரா?

"நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு மீனவர் கூட உயிரிழக்க மாட்டார். தமிழ்நாட்டு மீனவர்களுக்கு இலங்கையால் பிரச்சினை. குஜராத் மீனவர்களுக்கு பாகிஸ்தானால் பிரச்சினை. இரண்டு மாநில மீனவர்களையும் இணைத்துப் பேசி கூட்டு நடவடிக்கை எடுப்போம்" என்று சொன்னது யாரு? திரு. நரேந்திர மோடி அவர்கள்.

2014 முதல் தமிழ்நாட்டு மீனவர்கள் மேல் இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்தவில்லையா?

2015ஆம் ஆண்டும் தாக்குதல் நடந்தது. 2016ஆம் ஆண்டும் தாக்குதல் தொடர்ந்தது. 2017தங்கச்சிமடம் மீனவர் பிரிட்டோ கொலை செய்யப்பட்டார். தொடர்ந்து, நம் மீனவர்கள் மீது தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இன்றும் - இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க இந்திய அரசு பல்வேறு உதவிகளை செய்கின்ற நிலையிலும் நம் மீனவர்கள் மீதான தாக்குதல் தொடருகிறது. ஒவ்வொரு முறையும் ஒன்றிய அரசுக்கு நான் கடிதம் எழுதிய பிறகு தான் அவர்கள் ஏதோ நடவடிக்கை எடுக்கிறார்கள்.

2020ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பார்க்கிறோம், தமிழ்நாட்டு மீனவர்கள் மேல் இலங்கைக் கடற்படையினர் 48 தாக்குதல் சம்பவங்களை நடத்தியிருக்கிறார்கள். இதில் தமிழ்நாட்டு மீனவர்கள் 619 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

83 மீன்பிடி படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதில், 604 மீனவர்களையும், 16 படகுகளையும் இலங்கை அரசு விடுவித்திருக்கிறது. இந்த ஆண்டில் மட்டும் 74 மீனவர்கள் இலங்கைக் கடற்படை கைது செய்திருக்கிறது. அதில் 59 பேரை விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், 67 மீன்பிடி படகுகள் இலங்கையிடம்தான் இன்னமும் இருக்கிறது.

பிரதமர் மோடி ஆட்சியில் தாக்குதல் தொடரவே செய்கிறது என்றால் என்ன அர்த்தம், மோடி ஆட்சி பலவீனமான ஆட்சி என்று தானே அர்த்தம்?

இந்திய - இலங்கை அமைச்சர்கள் மீனவர்கள் பிரச்சினை பற்றி பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

அப்போதைய வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்தவர் சுஸ்மா சுவராஜ் அவர்கள். இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் துறை அமைச்சர் மங்கள சமர வீரவும் சந்தித்து பேசினார்கள். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மீன்பிடி மீதான கூட்டம் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. எந்த வகையிலும் உயிரிழப்பு ஏற்படக் கூடாது என்று அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இதை இரண்டு நாடுகளும் ஏற்றுக் கொண்டன. மறுநாள் இரு நாட்டு மீனவர்களும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இதை ஏற்று இலங்கை செயல்படவில்லை.

"எல்லைக்குள் அத்துமீறக்கூடிய எவர் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்த இலங்கைக் கடற்படையினருக்கு அதிகாரம் உண்டு" என்று இலங்கை அமைச்சர் சொன்னார். தமிழ்நாட்டு மீனவர்களின் படகுகள் இலங்கைக்கு நாட்டுடைமை ஆக்கப்படும் என்று இலங்கை அரசு அறிவித்தது.

மோடி அரசு வந்ததும் தமிழ்நாட்டு மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 122 படகுகளையும் நாட்டுடைமை ஆக்கியது இலங்கை அரசு. இப்போதும் கைது தொடருகிறது. படகுகளைத் தர மறுக்கிறார்கள். இதற்குப் பொறுப்பேற்க வேண்டியது யார்? பா.ஜ.க. அரசுதான். ஒவ்வொரு முறை மீனவர்கள் தாக்கப்படும்போதும் ஒன்றிய அரசின் கவனத்திற்கு நாம் எடுத்துக்காட்டு கிறோம். அவர்களும் இலங்கை அரசுக்கு சொல்லுகிறார்கள். ஆனால், மறுபடியும் கைதும், தாக்குதலும் நடக்கும். இதுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இதற்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால், அதற்கு கச்சத்தீவு மீட்கப்படவேண்டும். அதுதான் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக இருக்க முடியும்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் சென்னைக்கு வரும்போதெல்லாம் அவரிடம் இந்தக் கோரிக்கையை நான் வைத்திருக்கிறேன். உங்களிடம் கொடுத்திருக்கிறேன். ஏன்; கடந்த வாரம் இலங்கை அதிபர் இந்தியாவுக்கு வந்தபோது கூட 19.07.2023 அன்று பிரதமருக்கு இது தொடர்பாக நான் கடிதம் எழுதியிருந்தேன். ஆனால், இங்கே இருக்கக்கூடிய சிலர் என்ன சொல்கிறார்கள், இதற்கெல்லாம் காரணம் தி.மு.க. ஆட்சிக்காலத்தில்தான் கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டது என்று வரலாறு தெரியாமல் உளறிக் கொண்டிருக்கிறார்கள்.

1971ஆம் ஆண்டு இலங்கை அரசு கச்சத்தீவை சொந்தம் கொண்டாடியபோதே - அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 'கச்சத்தீவு நம்முடைய அரசுரிமை' என்பதற்கான ஆதாரங்களைத் திரட்டுவதற்கு சட்டப்பேராசிரியர் எஸ். கிருஷ்ணசாமி அவர்களுக்கு உத்தரவிட்டார்.

கச்சத்தீவானது, இந்தியாவுக்குத்தான் சொந்தம் என்பதற்கான அறிக்கையை 1973 டிசம்பரில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார். அதை மீறித்தான் 1974 ஜூன் 26ஆம் நாள் கச்சத்தீவு ஒப்பந்தம் இந்திய - இலங்கை பிரதமர்களால் போடப்பட்டது.

இது ஒப்பந்தம்தானே தவிர சட்டம் அல்ல! நன்றாகக் கவனியுங்கள், அப்படி எந்தச் சட்டமும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. அதைத் தி.மு.க.வும் ஆதரிக்கவில்லை. உடனடியாக, டெல்லி சென்று பிரதமர் இந்திரா காந்தி அவர்களை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்தார். கச்சத்தீவை தரக்கூடாது என்று வலியுறுத்தினார்.

கச்சத்தீவு நமக்குச் சொந்தம் என்பதற்கான ஆதாரங்களை பிரதமரிடம் கொடுத்தார். அன்றைய சட்ட அமைச்சர் செ.மாதவன் அவர்களும் முதலமைச்சரோடு உடன் சென்றார். சென்னை திரும்பியதும் இதே ஆதாரங்களை வைத்து மறுபடியும் தலைவர் கலைஞர் கடிதம் எழுதினார்.

கச்சத்தீவு என்பது இலங்கை அரசுக்கு உட்பட்ட தீவாக எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. டச்சு, போர்த்துகீசிய மன்னர் காலத்து வரைபடங்கள்கூட அப்படித்தான் சொல்கின்றன. 1954இல் இலங்கை என்று வெளியிட்ட வரைபடத்திலும் கச்சத்தீவு அவர்களுடையது என்று சொல்லப்படவில்லை. கச்சத்தீவுக்குச் செல்லும் பாதையிலும், கச்சத்தீவின் மேற்குப்பகுதிக் கரை ஓரத்திலும் சங்கு எடுக்கும் உரிமை ராமநாதபுரம் ராஜாவுக்கு தான் இருந்தது என்பதைக் காட்ட ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அங்கு சங்கு எடுத்ததற்காக, அவர் எந்தக் காலத்திலும் இலங்கை அரசுக்குக் கப்பம்கூட கட்டியது கிடையாது. எனவே கச்சத்தீவு இந்தியாவின் ஒரு பகுதிதான் என்பதை எந்த சர்வதேச நீதிமன்றத்திலும் நிரூபிக்க முடியும் என்பதற்கான அனைத்து ஆதாரங்களையும் திரட்டி இந்திய அரசுக்கு கொடுத்ததே நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஸ்வரன் சிங், வெளியுறவுத்துறை செயலாளர் கேவல் சிங் ஆகியோரை சந்தித்து இந்த ஆதாரங்கள் முதலமைச்சர் கலைஞர் கொடுத்திருக்கிறார்.

"இலங்கைக்குக் கச்சத்தீவை தாரை வார்த்ததன் மூலமாக இந்தியாவுக்கு அல்ல, தமிழ்நாட்டுக்குத்தான் முதல் ஆபத்து" என்று இதை தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன் அவர்கள் நாடாளுமன்றத்தில் முழங்கினார்.

**தி.மு.க. உறுப்பினராக இருந்த இரா. செழியன் நாடாளுமன்றத்தில் இருந்து எதிர்ப்பை பதிவு செய்திருக்கிறார். வெளி நடப்பு செய்திருக்கிறார். ஒப்பந்தம் கையெழுத்தான மூன்றாவது நாளே- அதாவது 29.6.1974 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூட்டினார்.**

**கச்சத்தீவு ஒப்பந்தத்தை ரத்து செய்தாக வேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டது. அனைத்துக் கட்சிகளும் ஆதரித்த அந்தக் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்த ஒரே கட்சி அ.தி.மு.க. தான்.**

அன்று முதல் இன்று வரை ஒரே ஒரு விஷயத்தை தெளிவாக செய்கிறார்கள். அது என்னவென்றால், தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்வது!

21.8.1974 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் கச்சத்தீவு ஒப்பந்தத்தை எதிர்த்து சிறப்புத் தீர்மானம் கொண்டு வந்தார் தலைவர் கலைஞர். கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டதற்கு எதிராக கண்டனக் கூட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. சார்பில் நடத்தப்பட்டது. ஜூலை 14ஆம் தேதி தொடங்கி 45 முக்கிய நகரங்களில் இந்தக் கூட்டங்களை நடத்துவதாக தி.மு.க. தலைமைக் கழகம் அறிவித்தது.

* தஞ்சையில் கலைஞர், சென்னையில் பேராசிரியர், அப்போது திருப்பெரும்புதூரில் இந்த அடியேன் தான் பேசினேன். இந்த வரலாறு எதுவும் தெரியாமல் மாநில அரசான தி.மு.க. இந்தியாவின் ஒரு பகுதியை தாரை வார்த்தது என்று அடிப்படை அறிவும் இல்லாமல், குறைந்தபட்ச நேர்மையும் இல்லாமல், சிலர் பேசி வருவது வெட்கக்கேடானது! கண்டிக்கத்தக்கது!

கச்சத்தீவுக்கு அனுமதி மறுக்கப்பட்டது நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மறுப்பது தாகும். எனவே இந்திய அரசு, இலங்கை அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கான முயற்சியில் இறங்க வேண்டும்.

ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்வதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை ஒன்றிய அரசு இப்போதாவது தொடங்கிட வேண்டும். பா.ஜ.க. அரசு இந்த முயற்சியில் இறங்கவில்லை என்றால், அடுத்து நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு அமைய இருக்கும் புதிய அரசு இதனை நிறைவேற்றும் வகையில் நமது அரசியல் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம்.

கச்சத்தீவை மீட்டெடுத்து - தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடி உரிமையைக் காப்போம்!

டெல்லி சென்று பிரதமர் இந்திரா காந்தி அவர்களை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்தார். கச்சத்தீவை தரக்கூடாது என்று வலியுறுத்தினார். கச்சத்தீவு நமக்குச் சொந்தம் என்பதற்கான ஆதாரங்களை பிரதமரிடம் கொடுத்தார். அன்றைய சட்ட அமைச்சர் செ.மாதவன் அவர்களும் முதலமைச்சரோடு உடன் சென்றார். சென்னை திரும்பியதும் இதே ஆதாரங்களை வைத்து மறுபடியும் தலைவர் கலைஞர் கடிதம் எழுதினார். கச்சத்தீவு என்பது இலங்கை அரசுக்கு உட்பட்ட தீவாக எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. டச்சு, போர்த்துகீசிய மன்னர் காலத்து வரைபடங்கள்கூட அப்படித்தான் சொல்கின்றன. 1954இல் இலங்கை என்று வெளியிட்ட வரைபடத்திலும் கச்சத்தீவு அவர்களுடையது என்று சொல்லப்படவில்லை. கச்சத்தீவுக்கு செல்லும் பாதையிலும், கச்சத்தீவின் மேற்குப்பகுதிக் கரை ஓரத்திலும் சங்கு எடுக்கும் உரிமை ராமநாதபுரம் ராஜாவுக்கு தான் இருந்தது என்பதைக் காட்ட ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அங்கு சங்கு எடுத்ததற்காக, அவர் எந்தக் காலத்திலும் இலங்கை அரசுக்குக் கப்பம்கூட கட்டியது கிடையாது. எனவே கச்சத்தீவு இந்தியாவின் ஒரு பகுதிதான் என்பதை எந்த சர்வதேச நீதிமன்றத்திலும் நிரூபிக்க முடியும் என்பதற்கான அனைத்து ஆதாரங்களையும் திரட்டி இந்திய அரசுக்கு கொடுத்ததே நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

**மீனவர் நல மாநாடு**
**முதல்வர் மு.க.ஸ்டாலின்**
**18.8.2023**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2023) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மற்றும் மீனவ சங்கங்கள் இணைந்து நடத்தும் மீனவர் நல மாநாடு மற்றும் 14,000 மீனவப் பயனாளிகளுக்கு ரூ.88.90 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மானிய விலையில் கடல் பாசி வளர்ப்பு மிதவை வாங்குவதற்கான நிதியுதவியை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த விழாவில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ. முருகேசன், இராம. கருமாணிக்கம், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மீன்வளத்துறை ஆணையர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா.விஷ்ணு சந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ சங்கங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை ... முதல் பக்கத் தொடர்ச்சி

★ கடந்த இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 42 மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் மொத்தம் 431 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு என்னால் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

★ 109 மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களின் கீழ் மீன்பிடி துறைமுகங்கள், மீன்பிடி இறங்கு தளங்கள், கடற்கரைப் பாதுகாப்பு, அரசு மீன்பண்ணை கட்டுமானம் மற்றும் அலுவலக கட்டுமானம் போன்ற பணிகள் நடந்து வருகிறது. இதன் மொத்த மதிப்பு 1,296 கோடியே 3 லட்சம் ரூபாய்.

இதுவரை செய்த சாதனைகள்; நிறைவேற்றிய திட்டங்களின் பட்டியலை நான் இப்போது சொன்னேன்.

இதர கோரிக்கைகளும் படிப்படியாக நிறைவேற்றித் தரப்படும். ஏனென்றால், எல்லோரும் சொன்னதுபோல, இது என்னுடைய அரசு மட்டுமல்ல, இது உங்களுடைய அரசு. உங்களுக்காக நடைபெறக்கூடிய அரசு! இது நம்முடைய அரசு! எனவே நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

மாநிலத்திற்குள் உள்ள தேவைகளை நாங்கள் நிறைவேற்றுவோம். ஆனால், கடலுக்குள் செல்லும் மீனவர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகள், இன்னமும் பிரச்சினைகளாவே இருக்கிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படுவதையும், கைது செய்யப்படுவதையும் இந்த மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. அந்த கண்டிக்கிற உணர்வை நீங்கள் கரவொலி மூலமாக நீங்கள் எழுப்பவேண்டும். தமிழ்நாட்டு மீனவர்களுக்கு இருக்கும் தீராத பிரச்சினையாக இது இருக்கிறது.

இலங்கையில் தமிழர்களின் உரிமைப் போராட்டம் எப்போது தொடங்கியதோ, அப்போதிருந்தே, தமிழ்நாட்டு மீனவர்களைத் தாக்குவதையும் இலங்கை அரசு வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறது. அதன் பிறகு வது தமிழ்நாட்டு மீனவர்க. நிம்மதியாக மீன்பிடிக்க முடியுமா என்றால் அதுவும் இல்லை. அதே தாக்குதல், கைதுகள், சிறைச்சாலை சித்திரவதைகள் தொடரத்தான் செய்கிறது. அதிலும் குறிப்பாக, 2014ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் நடந்து. பா.ஜ.க. ஆட்சி அமைந்ததற்குப் பின்னால்தான் அடக்குமுறைகள் இன்னும் அதிகம் ஆகியிருக்கிறது. கைது, தாக்குதல், சிறைச்சாலைகள் என்பதைத் தாண்டி, மீனவர்களுடைய பல லட்சம் ரூபாய் மதிப்பிலான படகுகளை இலங்கை அரசாங்கம் பறித்துச் செல்வது அதிகமாக இருக்கிறது.

மீனவர்களை விடுவித்தாலும் படகுகளைத் தருவது இல்லை. மீனவர்களுக்கு வாழ்வாதாரமே படகும், வலையும்தான். படகுகளை உடைப்பதும் வலைகளை அறுப்பதும் இலங்கை அரசாங்கத்திற்கு வழக்கமாக இருக்கிறது. 'இத்தகைய படகுகள் இலங்கை அரசாங்கத்தின் உடைமையாகும்' என்று அந்த நாட்டின் அதிபரே சொல்லும் அளவுக்கு நிலைமை இப்போது மோசமாயிருக்கிறது.

மீனவர்களின் நலனைக் காப்பதாக, என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கும். எனவே, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அப்படித்தான் செயல்படுவான் என்ற உறுதியைக் கூறிக் கொண்டு, அதற்கு மீனவ சமுதாயம் எப்போதும்போல எங்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று என்னுடைய வேண்டுகோளை இந்த நேரத்தில் எடுத்து வைத்து விடை பெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; "நான்தான் நிரந்தர முதல்வர்" என்று மு.க.ஸ்டாலின் சொல்லிக் கொள்ள வில்லையே; ஏனெனில், "பிரதமர் வேட்பாளர் வரிசையில் நானும் நிற்கிறேன்" என்று அவர் அதற்கு மறைமுகமாகக் காரணம் சொல்லிவிட்டதைப் போல, இன்று "தினமலர்" நாளேடு சரடு திரித்துள்ளதைப் பார்த்தீரா ?

**பெரியதம்பி :** **ஆமாம், பார்த்தேன். பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும் என்ற ஒற்றை நோக்கில், மிகப் பெரும்பான்மை எதிர்க்கட்சிகள் இணைந்து கூட்டணி அமைத்துள்ளன. அற்புதமானதும், ஆக்கப் பூர்வமானதுமான இந்த அரசியல் முன்னெடுப்பை, மலினப் படுத்த வேண்டும் என்று 'மார்பில் இருப்பதை' முறுக்கிக் கொண்டு, மதவாத சக்திகள் என்னென்னவோ சூழ்ச்சிகளைச் செய்து வருகின்றன. அந்த வரிசையில்தான் "தினமலரை" வைத்துப் பார்க்க வேண்டுமேயன்றி, அதீதமாக அர்த்தம் செய்து கொள்ளக் கூடாது; அலட்சியப் படுத்திட வேண்டும்.**

**இதே மாதிரி முன்னொரு முறை கலைஞரிடம் கேள்வி கேட்ட போது, "என்னுடைய உயரம் எனக்குத் தெரியும்" என்று 'பளிச்'சென்பதில் சொன்னார்.**

**எல்லா வகையிலும் கலைஞரை உயிரோட்டமுள்ள முன்மாதிரியாக உணர்ந்து, அதே அணுகுமுறையைப் பின்பற்றி வருபவர் 'திராவிட மாடல்' ஆட்சியின் முதல்வர் மு.க.ஸ்டாலின்.**

**பிரதமராக வேண்டும் என்ற பேராசையோ, நிரந்தர முதல்வர் என்ற நினைப்போ, கிஞ்சிற்றும் அற்றவர் நமது முதல்வர்.**

**அவர், ' தந்தை வழித் தனயனே' தவிர; போவோன், வருவோன், புறம்போக்குகள் எல்லாம் கொம்பு சீவி விடுவதற்கு இடம் கொடுக்கும் எடுப்பார் கைப் பிள்ளை அல்ல என்பதை, "தினமலர்" உள்ளிட்ட மதவெறிப் பிரிவினைச் சக்திகள், உள்ளத்தில் கொள்ள வேண்டும் !**

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** தம்பி....! இந்தியப் பண வீக்கம் விரைவில் குறைந்து விடுமாமே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா,கடந்த 15 மாதங்களில் இல்லாத அளவுக்கு உச்சத்தை எட்டிவிட்டது பண வீக்கம். அதுதான் குறையும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார் ஒன்றிய நிதித்துறைச் செயலாளர்.**

**முக்கியமாக அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைந்தால் தானே, பண வீக்கம் குறையும் ! விலைவாசி இறக்கை கட்டிக் கொண்டு விண்ணில் பறக்கிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசு, கைகளைக் கட்டிக் கொண்டு அதை வேடிக்கை பார்க்கிறதே தவிர, குறைப்பதற்கான நடவடிக்கை கொஞ்சமும் இல்லை!**

**ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில், அதிகரித்தது எதுவும் குறையவில்லை. இந்தியாவில் அதிகமான ஊழல் குறையவில்லை. பா.ஜ.க.வினரின் மத துவேஷம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. மக்களைப் பிளவுபடுத்தும் ஆர்.எஸ்.எஸ். மனோபாவம், மேலும் மேலும் பெரிதாகிக் கொண்டே இருக்கிறது. சிறுபான்மையினர் மீது ஏவப்படும் வன்முறைக் கொடுமைகள், கொலைகள் குறைந்தபாடில்லை.**

**விவசாயத்தையும், விவசாயிகளையும் வஞ்சித்து, நசுக்கும் செயல்பாடுகளை அதிகமாகச் செய்துவிட்டு; அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைந்து, அதனையொட்டி, பண வீக்கம் குறையும் என்று சொல்லுவது முரண்பாடானது அல்லவா ?**

**எது அதிகரித்தாலும், குறைந்தாலும், நாட்டு மக்களுக்கு ஒன்றிய பா.ஜ.க.வினர் ஒவ்வொரு நாளும் அள்ளிவிடும் உறுதி மொழிகள் மட்டும் குறையப் போவதே இல்லை!**

## மண்டபம் மீனவர் குடியிருப்பிற்கு

# முதல்வர் திடீர் வருகை - கலந்துரையாடல்! மக்கள் மகிழ்ச்சி!

*இராமேசுவரம், ஆக. 20-*

இராமநாதபுரம் கூட்டத்தை முடித்த பின் பாம்பன் பகுதியில் உள்ள மீனவர் காலனிக்குள் நேற்று முன்தினம் மாலை சென்ற முதல்வர் மு,க. ஸ்டாலின், மீனவர்களிடம் கலந்துரையாடினார். முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக 3 நாள் பயணமாக தென்மாவட்டங்களுக்கு சென்று உள்ளார். நேற்று முன்தினம் மாலை இராமநாதபுரத்தில் நடந்த தி.மு.க. வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சி பாசறை கூட்டத்தில் பங்கேற்றார். பின்னர், முதல்வர் மு.க.ஸ்டாலின் இராமேசுவரத்தில் தங்க உள்ள தனியார் விடுதிக்கு காரில் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் பாம்பன் பகுதியை கார் கடந்து சென்ற போது, தேசிய நெடுஞ்சாலை பகுதியில் இருந்து அக்காமடம் மீனவர் காலனிக்குள் முதல்வரின் கார் திரும்பியது. இதை உடன் வந்தவர்களும், பொதுமக்களும் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

இந்த குடியிருப்புக்குள் மீனவர் மரிய ஹட்சன் என்பவரது வீட்டிற்கு முன், முதல்வரின் கார் நின்றதும், வீட்டிலிருந்தவர்களும், குடியிருப்புவாசிகளும் ஆச்சர்யத்தில் திளைத்தனர். முதல்வர் தங்கள் குடியிருப்பு பகுதிக்கே தேடி வந்ததால் பெண்களும், ஆண்களும் என ஏராளமானோர் அங்கு திரண்டனர். அவர்களிடம், "எப்படி இருக்கிறீர்கள்'' என நலம் விசாரித்து விட்டு, "உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கிறது? எல்லா நலத்திட்டங்களும் முறையாக கிடைக்கிறதா'' என முதல்வர் கேட்டறிந்தார். அனைவரும், "எல்லா வசதிகளும் கிடைக்கிறது. எதிர்பார்க்கவே இல்லை ஐயா. நீங்கள் எங்களைத் தேடி வந்தது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது'' என்றனர். பின்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறிது நேரம் மீனவ மக்களுடன் கலந்துரையாடி விட்டு அங்கிருந்து கிளம்பி வீட்டுக்குச் சென்றார்.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் மண்டபத்தில் நடக்கும் மீனவர்கள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து மீன்வளத்துறை உள்ளிட்ட அரசின் முக்கிய துறைகளின் சார்பில் பொதுமக்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார். பகல் 12.30 மணிக்கு விழா முடிந்ததும் இராமநாதபுரம் அரசு விருந்தினர் மாளிகைக்கு அவர் சிறிது ஓய்விற்கு பிறகு பிற்பகலில் மதுரைக்கு புறப்பட்டுச் செல்கின்றனர்.

'மோடியின் 9 ஆண்டு ஆட்சியில் வாழ்வாதாரம் இழந்த மீனவர்கள்'

இராமநாதபுரத்தில் நடந்த திமுக வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், "மோடியின் 9 ஆண்டுகால ஆட்சியில் மீனவர்கள் தாக்கப்படுவது, சிறைபிடிக்கப்படுவது, படகு, வலைகள் சேதப்படுத்தப்படுவது, துப்பாக்கியால் சுடுவது என தொடர்ந்து நடந்து வருகிறது. 2017ல் தங்கச்சிமடம் மீனவர் பிரிட்ஜோ படுகொலை, 2021ல் 4 மீனவர்கள் படுகொலை என தொடர்ந்து தாக்குதல் நடந்து வருகிறது. மோடி அரசால் பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்து விட்டனர்.

2015ல் அருண் ஜெட்லி நிதியமைச்சராக இருந்தபோது மதுரை எய்ம்ஸ் அறிவிக்கப்பட்டது. 8 ஆண்டு காலமாக இந்த திட்டம் டெல்லியிலிருந்து நடந்தே தான் வருகிறது. 2024க்குள்ளாவது நிறைவேறுமா? இப்போது தான் ஏதோ டெண்டர் விடப்படுவதாக அறிந்தேன்'' என்றார்.

## 'நீட்' தேர்வு - மாணவர்கள் வாழ்க்கையில் விளையாடும்

# தமிழ்நாடு - புதுச்சேரி ஆளுநர்களின் துரோகம்!

## புதுவை முன்னாள் முதல்வர் நாராயணசாமி குற்றச்சாட்டு!

*புதுச்சேரி, ஆக. 20-*

தமிழ்நாடு மாணவர்களின் வாழ்க்கையில் ஆளுநர்கள் விளையாடுவதாக புதுவை முன்னாள் முதல்வர் நாராயணசாமி குற்றம்சாட்டி உள்ளார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'கடந்த 9 ஆண்டுகளில் தலைவர்களின் பெயர்களை மாற்றுவதும், கடந்த கால சரித்திரத்தை மறைப்பது போன்ற வேலையை பிரதமர் மோடி செய்து வருகிறார். நீட் தேர்வால் தமிழ்நாடு மாணவர்கள் பலனடைந்துள்ளனர் என்று அப்பட்டமான பொய்யை ஆளுநர் ஆர்.என். ரவி கூறியுள்ளார். இளைஞர்களின் வாழ்க்கையில் தமிழ்நாடு ஆளுநர் விளையாடி இருக்கிறார். புதுச்சேரி ஆளுநர் தமிழிசையும், நீட் தேர்வு விவகாரத்தில் அரசியல் செய்ய வேண்டாம்.



நீட் தேர்வால் மாணவர்கள் பலனடைந்துள்ளனர் என்று மிகப்பெரிய பொய்யை கூறியுள்ளார். தமிழக மாணவர்களுக்கு தமிழ் நாடு ஆளுநர் துரோகி என்றால், புதுச்சேரி கவர்னர் தமிழிசையும் மாணவர்களுக்கு எதிரியாக இருக்கிறார். ஆளுநர் தமிழிசை அதிகார துஷ்பிரயோகம் செய்கிறார். புதுச்சேரி, தமிழ்நாடு ஆளுநர்கள், தமிழ்நாட்டின் மாண வர்களின் வாழ்க்கையில் விளையாடுகின்றனர். பொறுப்பு கொடுத்த தெலங்கானாவுக்கு தமிழிசை செல்வதில்லை. புதுச்சேரியில் இருந்து தமிழ்நாடு சென்று அரசியல் பேசுகிறார்.

இது ஆளுநருக்கு அழகல்ல. தமிழ்நாடு புதுச்சேரி பிரச்சினையில் பொது கருத்துகளை வெளியிட விரும்பினால் தமிழிசை தன் பதவியை ராஜினாமா செய்துவிட்டு கருத்து தெரிவிக்கலாம். இவர்கள் அமித் ஷாவின் கைப்பாவையாக செயல்படுகிறார்கள். முதல்வர் ரங்கசாமி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாநில அந்தஸ்து பெறுவோம் என்று கூறுவார். அவருக்கு பிரச்சினை வரும் போதெல்லாம் இதனை கையில் எடுத்துக்கொள்வார். ரங்கசாமி முதல்வராக இருக்கும் வரை, அவரால் மாநில அந்தஸ்து பெற முடியாது'

இவ்வாறு நாராயணசாமி குற்றம் சாட்டினார்.

**எதிர்காலச் சந்ததிகளையும் காப்பாற்ற தமிழகத்தில் இருந்து எழக்கூடிய குரல், தளபதியின் குரல்! அவர் பின்னால் அணிவகுப்போம்!**

# பா.ஜ.க.வை - சனாதன சக்திகளை இந்த மண்ணில் இருந்து தூக்கி எறிவோம்!

## இராமநாதபுரத்தில் நடைபெற்ற பாகப் பொறுப்பாளர்கள் கூட்டத்தில் - கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

இராமநாதபுரம், ஆக. 20-

**தி.மு.க.வின் தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டம் ராமநாதபுரம் மாவட்டம் பாகனூரில் ஆகஸ்டு 17-ஆம் தேதி நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர், திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் தொடர்ந்து நினைவுபடுத்த வேண்டும். சனாதன சக்திகள் தூக்கி எறியப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.**

இக்கூட்டத்தில் அவர் பேசியதாவது:-

இராமநாதபுரம் மாவட்டம் என்பது பல்வேறு சிறப்புகளை பெற்ற மாவட்டம். தலைவர் கலைஞரின் மனதில் நீங்காத இடம்பெற்ற மாவட்டம் ராமநாதபுரம் மாவட்டம். தலைவர் கலைஞரின் உதய சூரியன் நாடகம் முதன் முதலில் 1958 ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது இந்த ராமநாதபுரம் மாவட்டத்தில் தான். அந்த நாடகம் அரங்கேற்றப்பட்ட சில நாட்களிலேயே உதயசூரியன் சின்னமும் நம் இயக்கத்துக்கு கிடைத்தது.

### குதிரை வண்டிக்காரரை வெற்றி பெற வைத்த தி.மு.க.!

இந்த மாவட்டத்தில் தான் இந்தத் தொகுதியில்தான் டெல்லியில் இருந்து யாரோ போட்டியிடப் போகிறார்கள் என்று செய்திகள் வந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு ஒரே ஒரு செய்தியை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1952, 57, 62 ஆகிய மூன்று தேர்தல்களிலும் இங்கே அரசராக இருந்த சண்முக ராஜேஸ்வர சேதுபதி போட்டி யின்றி வெற்றி பெற்றார். அமைச்சரவையிலும் இருந்தார்.

1967 தேர்தல் வருகிறது. அந்தத் தேர்தலில் பேரறிஞர் அண்ணாவும் தலைவர் கலைஞரும் சேர்ந்து ராஜாவுக்கு எதிராக தங்கப்பன் என்ற வேட்பாளரை நிறுத்துகிறார்கள். தங்கப்பன் யார் என்றால், அரசரின் அரண்மனை வாசலிலே குதிரை வண்டி ஓட்டிக் கொண்டிருக்கும் ஒரு சாமானிய மனிதர். அந்தத் தேர்தலில் வெற்றி பெற்றது அரசர் இல்லை. அந்த சாமானியர்தான். அவரை வெற்றி பெறச் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம். இங்கே வரவேண்டும் போட்டியிட வேண்டும் என்று நினைப்பவர்கள் இந்தத் தமிழ்நாட்டை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாட்டை பற்றி தெரிந்துகொள்ளுங்கள் என்றால் அவர்களுக்கு கோபம் வருகிறது. நமக்கு பதில் தருகிறேன் என்று சொல்லிக் கொண்டு தப்புத் தப்பான செய்திகளை எல்லாம் சொல்லுகிறார்கள். இது தலைவர் கலைஞரின் மண், பேரறிஞர் அண்ணாவின் மண், தந்தை பெரியாரின் மண். தளபதி அவர்களால் முன்னெடுத்து வழிநடத்தக் கூடிய மண். பிரிவினைவாதம் செய்து மக்களை பிரித்து அரசியல் செய்பவர்களுக்கு இங்கே இடமில்லை என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இந்த வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்திலே பேசியவர்கள் நீங்கள் எப்படி பணியாற்ற வேண்டும் என்பதை தெளிவாக, ஆழமாக, விரிவாக உங்களுக்கு எடுத்துரைத்திருக்கிறார்கள். நான் உங்களுக்கு வைப்பது ஒரே ஒரு கோரிக்கைதான். நமது முதல்வர் தளபதி குறிப்பிட்டதைப் போல ஒவ்வொரு நாளும் ஒரு திட்டத்தை மக்களுக்குச் செய்து கொண்டே இருக்கும் அரசு நமது திமுக அரசு. இந்த செய்திகளை நாம் மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும். மக்களுக்கு மறதி அதிகம். தொடர்ந்து கெடுதல் செய்தவர்களையும் மறந்து மன்னித்து விடுகிறார்கள். தொடர்ந்து நன்மை செய்பவர்களையும் மக்கள் மறந்துவிடுகிறார்கள். தமிழ்நாட்டிலேயே இருப்பவர்களுக்கு நாம் எவ்வளவு நல்ல மாநிலத்தில் வாழ்ந்து கொண்டிருக் கிறோம் என்று பல நேரங்களில் புரிவதில்லை. ஆனால் வெளி மாநிலங்களுக்கு சென்று குறிப்பாக வட மாநிலங்களுக்கு சென்று பார்த்தால் சாலை வசதிகள் அவ்வளவு மோசம். பால்வாடிகள் கூட அவ்வளவு மோசமாக பராமரிக்கப்படு கின்றன. பள்ளிக் கூடங்கள் இல்லை. வாழ்வதற்கான வாய்ப்புகள் இல்லை. அதையெல்லாம் பார்க்கும்போதுதான் நாம் திராவிட மாடல் ஆட்சியால் எவ்வளவு பயன்களைப் பெற்றிருக்கிறோம் என்று தெரிகிறது. இதை மக்களிடம் சொல்ல வேண்டியது உங்களின் (பாகப் பொறுப்பாளர்களின்) முக்கிய கடமை. நாளையில் இருந்து அல்ல... இன்றிலிருந்தே நீங்கள் இதைத் தொடங்க வேண்டும்.

### ஒன்றிய அரசின் வெற்று விளம்பர செலவு ரூ.3000 கோடி!

ஒன்றிய பாஜக அரசு கடந்த சில ஆண்டுகளில் மட்டும் விளம்பரத்துக்காக செய்திருக்கக் கூடிய செலவு மூவாயிரம் கோடி ரூபாய். தலைவர் கலைஞராக இருக்கட்டும், அண்ணன் தளபதியாக இருக்கட்டும்... விளம்பரத்துக்கு இவ்வளவு செலவாகும் என்றால் வேண்டாம், அந்த நிதியில் நான் பள்ளிக் கூடங்கள் கட்டுவேன், ஆஸ்பத்திரிகள் கட்டுவேன், சாலை வசதி செய்வேன் என்று சொல்லுவார்கள். ஆனால் மூவாயிரம் கோடி ரூபாயை தொலைக்காட்சிகளுக்கும் செய்தித் தாள்களுக்கும் அள்ளிக் கொடுத்து, அதுவும் செய்யாத பணிகளுக்கு விளம்பரம், செய்து முடிக்காத திட்டங்களுக்கு விளம்பரம் என்று தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளக் கூடிய ஆட்சிதான் ஒன்றிய ஆட்சி. எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுகிறேன் கட்டுகிறேன் என்று சொல்லி இன்னும் கட்டவில்லை. சுமார் 2 ஆயிரம் கோடி செலவில் ஜப்பான் கடன் மூலம் எய்ம்ஸ் கட்டப் போவதாக அம்மையார் நிர்மலா சீதாராமன் பாராளுமன்றத்திலே தெரிவித்திருக்கிறார். இந்த விளம்பரத்துக்கு செலவழித்த மூவாயிரம் கோடியை மிச்சப்படுத்தியிருந்தால் அதில் இருந்தே எய்ம்ஸை கட்டியிருக்கலாம், மருத்துவ மாணவர்கள் ராமநாதபுரம் வந்து படிக்க வேண்டாம், மதுரை எய்ம்ஸ் கட்டிடத்தி லேயே படித்திருப்பார்கள்.

இந்த விளம்பர உத்திகள் நமக்குத் தெரியாது, தேவையும் இல்லை. மக்களை சந்திக்கக் கூடிய பாகப் பொறுப்பாளர்களாகிய நீங்கள் மக்களுக்கு நாம்



தொடர்ந்து செய்துகொண்டிருக்கக் கூடிய திட்டங்களை எடுத்துச் சொல்ல வேண்டும். நம் வீட்டிலே இருக்கக் கூடிய தாய்மார்கள் என்ன பண்றீங்க என கேட்டால், சும்மா இருக்கேன் என்பார்கள். எந்தத் தாயும் எந்த சகோதரியும் வீட்டிலே சும்மா இருப்பதில்லை. ஆனால் அவர்கள் செய்யக் கூடிய வேலைகள் நம் கண்களில் படாது. குழம்பில் உப்பு இல்லையென்றால் இல்லை என்று சொல்லுவோம். நல்லா வைத்தால் அது நமக்கு ஞாபகமே வராது. குப்பை இருந்தால் பெருக்கச் சொல்லுவோம். ஆனால் அந்த குப்பையை பெருக்கி வைத்திருந்தால், இந்த வேலையை ஒரு பெண் செய்திருக்கிறாள் என்று எண்ணியேபார்ப்பதில்லை. இப்படி இல்லங்களிலே தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய தாய்மார்களுக்கும் சகோதரிகளுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை அறிவித்தவர் அண்ணன் தளபதி. விரைவிலே மாதம் ஆயிரம் ரூபாய் என்ற அந்த உரிமைத் தொகை ஒரு கோடி சகோதரிகளை சென்றடையப் போகிறது. அவர்கள் முதல் மாதம் ஞாபகம் வைத்திருப்பார்கள், இரண்டாம் மாதம் ஞாபகம் வைத்திருப்பார்கள், மூன்றாம் மாதம் மறந்துவிடுவார்கள். நாம் தான் அவர்களிடம் சென்று ஞாபகப்படுத்த வேண்டும். அது மிக முக்கியமான கடமை.

### இல்லத்தரசிகளின் உள்ளம் கவர்ந்த விடியல் பயணம்!

அதேபோல மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத்துக்கு அழகான பெயராக விடியல் பயணம் என்று பெயர் சூட்டியிருக்கிறார் முதல்வர். ஏனென்றால் பெண்கள் வெளியே செல்வதற்காக பேருந்துக்கு வீட்டில் காசு கேட்டால், 'தேவையில்லாமல் ஏன் ஊரை சுற்றுகிறாய்?' என்ற கேள்வி வரும். ஆனால் இன்றைக்கு வெளியே சென்று பஸ்ஸில் பயணம் சகோதரி ஒரு மாசத்துக்கு 850 ரூபாய் மிச்சம் செய்கிறார். ஒரு நாளைக்கு 50 லட்சம் சகோதரிகள் விடியல் பயணம் மூலம் இலவச பேருந்து பயணம் செய்கிறார்கள். இதை நாம் தொடர்ந்து மக்களிடம் நினைவுபடுத்த வேண்டும்.

இதைத் தாண்டி இன்னும் முக்கியமானது... இல்லம் தேடிக் கல்வி. ஒன்றிய அரசாங்கம் புதிய கல்விக் கொள்கையை கொண்டு வந்துள்ளது. கல்வியை கார்ப்பரேட் மயமாக்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் திராவிட மாடல் ஆட்சியில் ஒரே ஒரு மாணவனுக்கு கல்வி தேவை என்றால் கூட அவனுக்காக அந்த பள்ளி இயங்கும். தலைவர் கலைஞர் ஆட்சியிலே ஒரு கிலோ மீட்டர் சுற்றளவிலே தொடக்கப் பள்ளி, 3 கிலோ மீட்டர் சுற்றளவிலே ஒரு நடுநிலைப் பள்ளி, 5 கிலோ மீட்டர் சுற்றளவிலே உயர் நிலைப் பள்ளி, 7 கிலோ மீட்டர் சுற்றளவிலே மேல் நிலைப்பள்ளி என்ற அளவிலே ஒரு மாணவனோ, பத்து மாணவர்களோ பள்ளிகளை மூடாமல் நடத்துவதுதான் நமது இலக்கு. மாணவர்கள் போதவில்லை என்றால் பள்ளிகளை மூடிவிடலாம் என்று சொல்லுவது புதிய கல்விக் கொள்கை. இதை நாம் எதிர்க்க வேண்டும். கோவிட் நேரத்தில் பள்ளிக்கு செல்ல முடியாத பிள்ளைகளுக்காக இல்லம் தேடிக் கல்வி என்ற திட்டத்தை செயல்படுத்தி லட்சக்கணக்கான குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்திக் காட்டியது அண்ணன் தளபதியின் ஆட்சி.

அமெரிக்காவில் கூட முக்கிய மருத்துவரின் அப்பாயின்மென்ட்டுக்கு மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. வளர்ந்த நாடுகளில் கூட இல்லாத அளவுக்கு நமது அண்ணன் தளபதியின் ஆட்சியில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மருந்து, மாத்திரைகள், ஊசிகள், பிசியோதெரபி உள்ளிட்ட மருத்துவ சிகிச்சைகளை கொடுக்கும் ஆட்சி நமது அண்ணன் தளபதியின் ஆட்சி.

மீனவர்களுக்கு மீன்பிடித் தடைக்காலத்தில் நிவாரணம் வழங்கியது தலைவர் கலைஞரின் ஆட்சி. அதேபோல உப்பளத் தொழிலாளர் களுக்கு மழைக் காலத்தில் நிவாரணம் வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். 5 ஆயிரம் ரூபாய் கொடுத்து அதை நிறை வேற்றியவர் நமது முதலமைச்சர். தொழில் முதலீடுகள், நான் முதல்வன் திட்டம் என்று ஒவ்வொரு நாளும் திட்டங்களைக் கொண்டு வந்து தந்து கொண்டிருக்கக் கூடிய ஆட்சி நமது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

ஆனால் மோடி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு என்ன சொன்னார்? 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கித் தருகிறேன் என்று சொன்னார். ஆனால் வேலை கேட்டால், 'பகோடா போடுவதும் வேலை வாய்ப்புதான்'என்று திமிராக பதில் சொல்கிறார்கள். நம்மைப் பார்த்து ஊழல் ஊழல் என்று சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். ஆனால் சமீபத்தில் வெளியான சி.ஏ.ஜி. ரிப்போர்ட்டில் 5 டோல்களில் 132 கோடி ஊழல் நடந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். துவாரகா எக்ஸ்பிரஸ் வே சாலைக்காக ஒரு கிலோ மீட்டர் ரோட்டுக்கு 250 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். ஒரு வேலை தங்கத்தை காய்ச்சி ஊற்றியிருக்கிறார்களா? ஆயுஷ் மான் என்ற திட்டம். தேசிய நல்வாழ்வு பாதுகாப்பு திட்டம். அதில் ஏழரை லட்சம் பயனாளிகளுக்கு ஒரே நம்பர் தான் இருக்கிறது. இதில் யாரை ஏமாற்றுகிறீர்கள்? மக்களுக்கு ஏதாவது நன்மை நடந்தி ருக்கிறதா? மக்களை ஏமாற்றி மக்களை சுரண்டி, ஊழலை ஒழிப்பேன் என்று சொல்லி ஊழலை மட்டுமே செய்து கொண்டிருக்கக் கூடிய ஆட்சிதான் பிஜேபி ஆட்சி.

### ஒன்றிய அரசுக்கு பயத்தை உருவாக்கிய 'இந்தியா' கூட்டணி!

ஏன் பிஜேபி ஆட்சி நாட்டுக்கு வந்துவிடக் கூடாது என்பதை நாம் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். நம்முடைய அண்ணன் தளபதி அவர்கள் முன்னெடுத்துச் செல்லக் கூடிய இந்தியா கூட்டணியின் மீது ஏற்பட்டுள்ள பயத்தால் பிரதமர் மோடி இப்போது இந்தியா என்றே சொல்லுவதில்லை. இந்தியாவுக்கு எதிராக ஒரு இந்திய பிரதமரே செயல்பட்டு வருவதைப் பார்க்கிறோம்.

கலைக்கல்லூரிகளுக்கு நுழைவுத்தேர்வு கொண்டுவருகிறது மோடி அரசு. ஏனென்றால் நம் பிள்ளைகள் யாரும் அங்கேயும் சென்று படித்துவிடக் கூடாது. இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று சொல்லிக் கொண்டே இந்தியை படிக்கச் சொல்லி வலியுறுத்துகிறார்கள். என்.ஆர். இளங்கோ பல நீதி மன்றங்களில் வாதாடியவர்,. சட்டம் தெரிந்தவர். ஆனால் இனிமேல் சட்டங்களின் பெயரை எல்லாம் இந்தியில் மாற்றப் போகிறார்கள். நாடாளு மன்றத்தில் அரசின் திட்டங்களை கூட இந்தியில்தான் வைத்திருக்கிறார்கள். அவற்றைப் புரிந்து கொள்ளவே இன்னொருவரிடம் கேட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

பாரத் சாக்ஷிய சங்கேதன் என்பதற்கு என்ன அர்த்தம்? எங்கேயாவது கச்சேரிக்கு போகிறார்களா? இதற்கு இந்திய சாட்சிகள் சட்டம் என்று பெயர். இது எப்படி நமக்கு புரியும்? நாம் கொடுக்கும் வரிப் பணத்தில்தான் திட்டம் துவங்குகிறீர்கள். எல்லா மாநிலங்களில் இருந்தும்தானே வரி வாங்குகிறீர்கள்? எல்லா மாநில மொழி களிலும் திட்டத்துக்கு பெயர் வையுங்கள். சமீபத்தில் நேரு அருங்காட்சியகம் பெயரை மாற்றிவிட்டார்கள். இந்த அளவுக்கு கீழ்த்தர செயல்பாடுகளுக்கு என்ன அவசியம்?

பாராளுமன்றத்துக்கு ஒரு பிரதமரை வரவழைக்கவே நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவரவேண்டும் என்றால்... நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவந்தால்தான் ஒரு பிரதமர் பாராளு மன்றத்துக்கு வருவார் என்றால் அப்படிப் பட்ட பிரதமர் நாட்டுக்கு எதற்கு? பாராளுமன்றத்துக்கு வராத நீங்கள் எதற்கு தேர்தலில் நிற்கிறீர்கள்? அங்கே மணிப்பூர் பற்றி எரிகிறது. இரு சகோதரிகள் ஆடைகள் இல்லாமல் இழுத்துச் செல்லப்படுகிறார்கள். வன்கொடுமை நடக்கிறது. உலகம் முழுதும் பதறுகிறது. ஆனால் பிரதமர் நாடாளுமன்றத்துக்குள் வராமல், வெளியே நின்று ஊடகங்களிடம் பேசிச் செல்வது வெட்கக் கேடானது இல்லையா?

ஆனால் அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஜெயலலிதா சட்டமன்றத்தில் அவமானப் படுத்தப்பட்டது பற்றி பேசுகிறார். இத்தனை நாட்களாக அவைக்கு வரும் நிர்மலா சீதாராமனுக்கு ஏன் இது தெரியவில்லை? திமுகவோடு அவர்கள் கூட்டணி வைத்திருந்தபோது இதுபற்றி குரல் கொடுத்திருக்கிறீர்களா? இத்தனை நாள் அமைதியாக இருந்துவிட்டு இப்போது ஜெயலலிதாவை கேடயமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். மணிப்பூர் பெண்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயம் என்ன? மணிப்பூர் பெண்களை வன்முறை கும்பலிடம் பிடித்துக் கொடுத்த போலீஸுக்கு எதிரான நடவடிக்கை என்ன?

### தமிழ்நாடு மணிப்பூருக்கு உதவுவதை தவிர்க்கச் செய்த பா.ஜ.க.!

நான் மணிப்பூருக்கு தளபதி அவர்களால் அனுப்பப்பட்டேன். 45 ஆயிரம் பேர் முகாம்களில் வாழ்கிறார்கள். முகாம்களில் உணவு இல்லை. தண்ணீர் இல்லை, சுகாதாரக் கேடு, மருத்துவ வசதி இல்லை தாய்மார்கள் கதறுகிறார்கள். என்னிடம் பேசிய ஒரு பெண், 'நீங்க வந்திருக்கீங்க. பிரதமர் ஏன் வரலை?' என்று கேள்வி கேட்கிறார். விஸ்வ குரு என்று தன்னைத் தானே அழைத்துக் கொள்ளக் கூடிய பிரதமருக்கு வெளிநாடுகள் சுற்ற நேரம் இருக்கிறதே தவிர மணிப்பூருக்கு செல்ல நேரம் இல்லை. இப்படிப்பட்ட நிலையில்தான் தமிழ்நாடு முதலமைச்சர் மணிப்பூர் முகாம்களில் வாழும் மக்களுக்கு 10 கோடி ரூபாய் மதிப்பில் உணவுகள், மருந்துகள் வழங்கத் தயார் என்று அறிவித்தார். ஆனால் அதற்கும் மௌனம்தான் பதில்.

இப்படி தொடர்ந்து மணிப்பூரில் அதிகாரம் வேண்டும் என்பதற்காக குகி இன மக்களுக்கும், மெய்தீ மக்களுக்கும் இடையே ஒரு அரசியலை உருவாக்குகிறீர்கள். குக்கிகளை பற்றி பா.ஜ.க. முதல்வர் தொடர்ந்து அவதூறு கிளப்பி வந்தார். அதன் விளைவாகத்தான் இந்த கலவரம் வெடித்து நிற்கிறது. குஜராத்தில் பில்கிஸ் பானு என்ற பெண் மோடி முதல்வராக இருந்தபோது அவரது 3 வயது குழந்தை உட்பட குடும்பத் தினர் கொல்லப்பட்டனர். அவர்களைக் கொன்றவர்களை குஜராத் அரசு விடுதலை செய்தது. இவர்கள் இந்த நாட்டுப் பெண்களை காக்கக் கூடியவர்களா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மணிப்பூரிலே இரு பெண்கள் மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான பெண்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களுக்கு இடையே காழ்ப்பை வெறுப்பை விதைத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாரும் ஒன்றாய் மனிதர்களாய் வாழ வேண்டும் என்பதுதான் திராவிடம். மனிதர்களை அரசியலுக்காக பிரித்து, அரசியல் ஆதாயத்துக்காக அவர்களின் உயிரைக் கூட துச்சமாக நினைப்பவர்கள்தான் இந்துத்வா சக்திகள். இவர்கள் இனி எப்போதும் ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது.

இன்று மட்டுமல்ல நமது எதிர்கால சந்ததிகளையும் காப்பாற்றுவதற்காக தமிழகத்தில் இருந்து எழக் கூடிய குரல் தளபதியின் குரல். அவர் பின்னால் அணிவகுப்போம். பிஜேபியை சனாதன சக்திகளை இந்த மண்ணில் இருந்து தூக்கி எறிவோம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

---

### மணிப்பூரில் வன்முறை குறைந்தபாடில்லை

## துப்பாக்கிச் சூட்டில் 3 இளைஞர்கள் சுட்டுக்கொலை!

*இம்பால், ஆக. 20 -*

*மணிப்பூர் மாநிலம் உக்ருல் மாவட்டத்தில் உள்ள குகி தோவாய் என்கிற கிராமத்தில் ஏற்பட்ட கடுமையான துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் மூன்று இளைஞர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். லிட்டன் காவல் நிலையத்திற்கு உட்பட்ட கிராமத்தில் இருந்து கடுமையான துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டுள்ளது. இதையடுத்து, குகி தோவாய் கிராமம் மற்றும் வனப்பகுதிகளில் போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.*

*அப்போது அங்கு 24 வயது முதல் 35 வயதுக்குட்பட்ட மூன்று இளைஞர்களின் உடல்களை அதிகாரிகள் கண்டெடுத்தனர். மேலும், மூன்று பேரின் உடல்களிலும் துப்பாக்கி குண்டு காயங்கள் இருந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.*

*சம்பவம் குறித்து மேற்கொண்டு விசாரணை நடத்தப்பட்டு வருவதாக கூறினர். மணிப்பூர் மாநிலத்தில் ஏற்கனவே இரு சமூகத்திற்கு இடையே ஏற்பட்ட வன்முறையால் 160க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் நடந்த துப்பாக்கிச் சூடு சண்டையால் மேலும் 3 பேர் உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*

---

### செங்கல்பட்டு மாவட்டம் - பல்லவபுரம் வட்டம் - செயின்ட் தாமஸ் மவுண்ட் கிராமத்தில்

## 100 கோடி ரூபாய் மதிப்புள்ள அரசு நிலம் மீட்பு!

*செங்கல்பட்டு, ஆக.20-*

*செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டம், செயின்ட் தாமஸ் மவுண்ட் கிராமத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த 41,952 சதுர அடி நிலம் மாவட்ட நிர்வாகத்தால் மீட்கப்பட்டது.*

*இந்த நிலமானது வருவாய் பதிவேட்டில் காலம் கடந்த குத்தகை நிலம் எனத் தாக்கலாகியுள்ளது. இதனை கோயில் பயன்பாட்டிற்கு தற்காலிகமாகப் பயன்படுத்திக்கொள்ள காசிவிஸ்வநாதர் தேவஸ்தானத்திற்கு தமிழக அரசால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பின்னர் இவ்விடம் கோயில் பயன்பாட்டிற்கு பயன்படாமல் பிற நபர்களால் 'வன்னியர் சங்கக் கட்டடம்' என்ற பெயரில் கட்டடம் கட்டி ஆக்கிரமிக்கப்பட்டதோடு அதன் மூலம் அரசிற்கு குத்தகை தொகை எதுவும் செலுத்தப்படாமலும் இருந்து வருகிறது.*

*எனவே, மேற்படி அரசு நிலத்தில் பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு உள்ளவற்றை அகற்றிட தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905 பிரிவு 7 மற்றும் 6ஆகியவற்றின் கீழான அறிவிக்கை பல்லாவரம் வட்டாட்சியர் அலுவலகம் மூலம் 28.11.2022 மற்றும் 6.3.2023 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்டன. ஆக்கிரம்பு செய்தவர்கள் மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றிக்கொள்ளாத நிலையில், வருவாய் நிலையாணை எண்.29ன் பிரிவு 13ன் படி, மேற்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட சுமார் ரூபாய் 100 கோடி மதிப்புள்ள, சுமார் ஒரு ஏக்கர் நிலத்தினை பல்லாவரம் வட்டாட்சியர் மூலம் 18.8.2023 அன்று அரசின் வசம் கொண்டு வரும் பொருட்டு பூட்டி சீலிட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.*

*இவ்விடம் தற்பொழுது சென்னை மெட்ரோ ரயில் பணிகளுக்கு பயன்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ராகுல் நாத், தெரிவித்துள்ளார்.*

---

### சாதி, மத அடிப்படையில்

## மக்களை பிளவுபடுத்தித் துண்டாடும் ஒன்றிய பா.ஜ.க. அரசு!

### சரத்பவார் சாடல்!

மும்பை, ஆக. 20-

ஒன்றிய அரசு சாதி, மத அடிப்படையில் மக்களை பிளவுபடுத்தி வருகிறது. நிலையான அரசு என்று தங்களைக் கூறிக் கொண்டாலும், எதிர்க்கட்சி மாநிலங்களில் ஆட்சியை உருக்குலைக்கின்றனர் என, சரத்பவார் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு நாடாளுமன்றத்துக்கும், மகாராஷ்டிர சட்டப்பேரவைக்கும் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், கட்சியை வலுப்படுத்தும் வகையில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

பீட் மாவட்டத்தில் நடந்த பேரணியில் சரத்பவார்



பேசியதாவது:-

பிரதமர் நரேந்திர மோடி மணிப்பூருக்குச் சென்று, அங்கு என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும். வடகிழக்கு மாநில மக்களின் வலியை உணர வேண்டும். கடந்த மே மாதத்தில் இருந்த அந்த மாநிலத்தில் கலவரங்கள் நடந்து வருகின்றன. ஒன்றிய பா.ஜ.க. அரசு சமுதாயத்தை, மக்களை சாதி, மத அடிப்படையில் பிளவுபடுத்தி துண்டாடுகிறது. ஸ்திரமான அரசு என்று தன்னைக் கூறிக் கொள்கிறது. ஆனால், மாநிலத்தில் உள்ள ஆட்சியை சீர்குலைத்து வருகிறது.

பிரதமர் நரேந்திர மோடி தனது சுதந்திர தின உரையில், "நான் மீண்டும் வெற்றி பெற்று வருவேன்" என கூறியுள்ளார். அவர், மகாராஷ்டிர துணை முதல்வர் தேவேந்திர பட்நாவிஸ் வழியைப் பின்பற்றி, அவரைப் போல் கூறியுள்ளார்.

காரணம், கடந்த 2019-ஆம் ஆண்டு நடந்த மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தலுக்கு முன்பு, 'நான் மீண்டும் முதல்வராக வருவேன்' என்று பட்நாவிஸ் கூறினார். ஆனால், உண்மையில் என்ன நடந்தது? அவரால் வர முடிந்ததா? எனவே, பிரதமர் என்னவாக திரும்பி வரப்போகிறார் என்று ஆச்சரியமாக இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் ஏற்கெனவே இருந்ததை விட குறைவான பதவியில்தான் பட்நாவிஸ் இப்போது இருக்கிறார். உரத்தின் விலை உயர்ந்து விட்டது. ஆனால் ஒன்றிய அரசு விவசாயிகளைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை.

இவ்வாறு சரத்பவார் பேசினார்.

## இராமநாதபுரம் மாவட்டத்தில்

# சிறந்த சமூக சேவையாற்றிய அரசுத்துறை பணியாளர்கள் - தொண்டு நிறுவனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நினைவுப் பரிசுகள் வழங்கி பாராட்டு!

இராமநாதபுரம், ஆக.20–

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (18.08.2023) இராமநாதபுரம் ஆய்வு மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறப்பாகப் பணியாற்றி சிறந்த சமூக சேவையாற்றிய அரசுத் துறையைச் சேர்ந்த 10 பணியாளர்கள் மற்றும் சிறந்த முறையில் சமூகத் தொண்டாற்றிய 5 தொண்டு நிறுவனங்களின் நிர்வாகிகள் ஆகியோரை பாராட்டி, நினைவுப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.**

**சிறந்த சமூக சேவையாற்றிய அரசுத் துறைப் பணியாளர்கள்**

இராமநாதபுரம் மாவட்டம், தொண்டி பேரூராட்சி அலுவலகத்தில் வரி தாண்டலராக பணிபுரிந்து வரும் திரு.எஸ்.மங்களநாத சேதுபதி அவர்கள் மற்றவர்களுக்கு உதவி செய்வதை வழக்கமாக கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருவதுடன், கடந்த 15 ஆண்டுகளாக தனது சொந்த செலவில் நாள்தோறும் 30 நபர்களுக்கு மதிய உணவு வழங்கி வருகிறார். மேலும் ஊரணிகளை சுத்தம் செய்தல், மரக்கன்று நடுதல், பிளாஸ்டிக் ஒழிப்பு, கொரோனா காலகட்டத்தில் அரிசி, காய்கறி, முகக்கவசம் உள்ளிட்ட பொருட்களை வழங்கியது, பள்ளி மாணவர்களுக்கு செல்போன் வழங்குதல் மற்றும் ரத்ததான முகாம் நடத்துதல் போன்ற சேவைகளை தொடர்ந்து செய்து வருகிறார்.

பட்டணம் காத்தான் முதல்நிலை ஊராட்சியில் தற்காலிக துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.உடையார் அவர்கள், கொரோனா காலத்தில், கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு சென்று தூய்மை பணிகளை சிறப்பாக மேற்கொண்டதோடு, அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் துப்புரவு பணிகளை சிறப்பாக மேற்கொண்டு அனைவரிடமும் நற்பெயர் பெற்று வருகிறார்.

பரமக்குடி நகராட்சியில் ஓட்டுநராக பணிபுரிந்து வரும் திரு.ராஜேந்திரன் அவர்கள் நகராட்சிக்கு வரும் ஏழை எளிய மக்கள் மற்றும் எழுதப் படிக்கத் தெரியாத மக்களுக்கு உதவிகள் செய்து வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். இவர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஓட்டுநராக பணியாற்றினாலும், இடைப்பட்ட நேரத்தில் குப்பை அள்ளும் இயந்திரம் உள்ளிட்ட வாகனங்களையும் இயக்கி உதவிகள் செய்து வருகிறார். இவர் அலுவலக நேரங்கள் தவிர மற்ற நேரங்களில் பொதுமக்கள் புகாரின் பேரில் கழிவுநீர் குழாய்கள் சரி செய்தல் உள்ளிட்ட சேவைகளை செய்து வருகிறார். இவர் கொரோனா காலகட்டத்தில் ஜேசிபி உள்ளிட்ட வாகனங்களை இயக்கி இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய உதவியாக இருந்துள்ளார்.

பந்தப்பனேந்தல் ஊராட்சிய ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தலைமை ஆசிரியையாக பணிபுரிந்து வரும் திருமதி. சரவண பூபதி அவர்கள் கொரோனா காலகட்டத்தில் இலவசமாக முகக்கவசம் வழங்கியும், 100 நபர்களுக்கு ஐந்து மாதங்கள் தினமும் உணவு வழங்கியும் உள்ளார். இவர் யோகா, கிராமிய நடனம், ஆங்கிலம் பேசுதல், தையல் பயிற்சி ஆகியவற்றை தான் பணிபுரியும் பள்ளியைச் சுற்றியுள்ளள மாணவ, மாணவியர்களுக்கு இலவசமாக கற்றுக் கொடுத்து வருகிறார். பள்ளி செல்லா குழந்தைகளை கண்டறிந்து பள்ளியில் சேர்ப்பது, பத்தாம் வகுப்பு 12ஆம் வகுப்பு தேர்வில் தோல்வியடைந்தவர்களை கண்டறிந்து அவர்கள் படிப்பதற்கும், மேற்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு உதவி செய்வதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார்.

இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வரும் திருமதி புவணி அவர்கள், கொரோனா காலகட்டங்களில் சிறப்பாகப் பணிபுரிந்து, ஏழை எளிய மக்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் போது உணவு வழங்குவதையும், ஆதரவில்லாமல் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு உதவி செய்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். இவரது சிறப்பான பணி காரணமாக தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக அவசர சிகிச்சை பிரிவில் பணிபுரிந்து வருகிறார். பெரும்பாலான நேரங்களில் பணி நேரம் முடிந்த பின்னரும் விபத்தில் சிக்கி சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறார். இதற்காக இவர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பாராட்டு சான்றிதழ் பெற்றுள்ளார்.

நயினார் கோயில் ஒன்றியம், பனிதவயல் அங்கன்வாடி மையத்தில் அங்கன்வாடி பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி. ரீட்டா அவர்கள், அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளிடம் அன்பாகவும் பாசமாகவும், குழந்தைகள் மீது அதீத அக்கறை கொண்டவராகவும், அனைத்து குழந்தைகளிடமும் நன்கு பழகும் இயல்புடையவராகவும் இருந்து வருகிறார். இவர் அரசு திட்டங்களை பெறுவதற்காக மாற்றுத்திறனாளிகளை அரசு அலுவலகங்களுக்கு உடன் அழைத்துச் சென்று திட்டங்களை பெற்று தருவதற்கான உதவிகளை செய்து வருகிறார்.

இராமேஸ்வரம் மீன்வளத்துறையில் மீன்வள மேற்பார்வையாளராக பணிபுரிந்து வரும் நடேஷ்பாபு அவர்கள், கடல்பாசி திட்டம் சிறப்பாக செயல்படுத்துவதற்கும், இறால் பண்ணைகளை அரசு வரையறைப்படி ஒழுங்குமுறைப்படுத்தியும், நீர்வள நிலவள திட்டத்தின் மூலம் மீனவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, அதிகமானோர் பயன்பெற நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

கீழக்கரை கிராம உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.பாண்டி அவர்கள், இதற்கு முன் காஞ்சிரங்குடி உள்ளிட்ட இடங்களில் பணிபுரிந்த போது பொதுமக்கள், வருவாய்த் துறை மற்றும் காவல் துறையினருக்கு உதவியாக இருந்துள்ளார். கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வயதானவர்களுக்கு உணவு உள்ளிட்ட பொருள்களை நேரம் காலம் கருதாமல் வாங்கிக் கொடுத்து பாராட்டுகளை பெற்றுள்ளார்.

இராமேஸ்வரம் போக்குவரத்து காவல் நிலையத்தில், தலைமை காவலராக பணிபுரிந்து வரும் யுவராஜ் அவர்கள், பணிபுரியும் இடங்களில் தனது சொந்த பணத்திலிருந்து ஏழைகளுக்கு தினமும் உணவு வழங்குவது மற்றும் உதவிகள் செய்வதை வழக்கமாக கொண்டு உள்ளார். மேலும் அலுவல் நேரத்தை கணக்கிடாமல் தொடர்ந்து சிறப்பாக பணிபுரிந்து வருகிறார்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில், கமுதியில் தீயணைப்பவராக பணிபுரிந்து வரும் திரு.பழனி அவர்கள், தீ விபத்து மற்றும் மீட்பு அழைப்புகளின் போதும், சம்பவ இடத்திற்கு உடனே சென்று பொதுமக்கள் மற்றும் உயர் அதிகாரிகளின் பாராட்டுகளை பெற்றுள்ளார். தீயணைப்பு வாகனங்கள் செல்ல முடியாத இடங்களில் கூட இரு சக்கர வாகனங்களில் சென்று மீட்பு பணிகளை மேற்கொண்டுள்ளார். இவர் ஏர்வாடி மற்றும் சாயல்குடியில் பணிபுரிந்த போது கிணற்றில் விழுந்தவரை உயிருடன் மீட்டும், உச்சநத்தம் கிராமம், காட்டாற்று வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட போது நீந்தி சென்று கிராம மக்களை வருவாய்த்துறை அதிகாரிகளிடம் தொடர்பு கொள்ள செய்து பாராட்டுகளை பெற்றுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறப்பாகப் பணியாற்றிய அரசுத் துறையைச் சேர்ந்த எஸ்.மங்களநாத சேதுபதி, உடையார், ராஜேந்திரன், திருமதி. சரவணபூபதி, திருமதி புவணி, திருமதி ரீட்டா, நடேஷ்பாபு, பாண்டி, யுவராஜ், பழனி ஆகியோரது சேவைகளைப் பாராட்டி முதலமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

**சிறந்த சமூக சேவையாற்றிய தொண்டு நிறுவனங்களின் நிர்வாகிகள்!**

இராமநாதபுரத்தில் அப்பாஸ் அலி அறக்கட்டளை என்ற தொண்டு நிறுவனத்தை நடத்தி வரும் அமீர் ஹம்ஷா மூன்று ஆம்புலன்ஸ்கள் மூலம் ஏழைகளிடம் பணம் பெற்றுக் கொள்ளாமல் மருத்துவமனைகளுக்கு அழைத்து செல்வது, இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய உதவுவது, இரத்ததானம் செய்தல், மனநலம் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து அவர்களை அரசு மனநல காப்பகத்தில் சேர்ப்பது போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

இராமநாதபுரத்தில் வள்ளலார் யுனிவெர்சல் மிஷன் டிரஸ்ட் என்ற அறக்கட்டளையை நடத்தி வரும் ராஜவீர் அவர்கள், தினமும் 15 நபர்களுக்கு மூன்றுவேளை உணவும், புதன்கிழமை மட்டும் மதியம் 50 நபர்களுக்கு உணவும் அளித்து வருவதோடு, இலவச கண் சிகிச்சை முகாமையும் நடத்தி வருகிறார்.

Voice From Heart என்ற அமைப்பை நடத்தி வரும் செல்வி லிடியா அவர்கள், 200 இளைஞர்களை அமைப்பில் இணைத்து, அந்த அமைப்பின் மூலம் குறவர், காட்டுநாயக்கர் சமுதாயத்தைச் சேர்ந்த பள்ளி செல்லா குழந்தைகளை கண்டறிந்து அவர்களை பள்ளியில் சேர்ப்பது, இரத்ததான முகாம் மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்துதல், முதியோர்களுக்கு உணவு வழங்குதல், மாற்றுத் திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல் போன்ற சமுதாய நலப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

இராமேஸ்வரம் மாற்றுத்திறனாளிகள் நலச் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளரான திருமதி தில்லை பாக்கியம் அவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை, இலவச உபகரணங்கள் கிடைக்க உதவி செய்தல், மனநலம் குன்றிய நபர்களுக்கு அரசு உதவித்தொகை பெற உதவி செய்தல்,

மீனவர்களுக்கு அடையாள அட்டை பெறுவதற்கு உதவி செய்தல் போன்ற சமூகப் பணிகளை செய்து வருகிறார்.

பரமக்குடியில் தங்கம்மாள் ரஹீம் அறக்கட்டளை என்ற அமைப்பின் மூலம் திரு. முகமது அலி ஜின்னா அவர்கள், அனாதை உடல்களை அடக்கம் செய்தல், இலவச கண் சிகிச்சை முகாம், இரத்ததர்ன முகாம், உடலுறுப்புகள் தான நிகழ்ச்சிகள், ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்கதல், நன்கொடை வழங்குதல் போன்ற சமூக நலப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறந்த முறையில் சமூகத் தொண்டாற்றி வரும் அமீர் ஹம்ஷா, ராஜவீர், செல்வி லிடியா, திருமதி தில்லை பாக்கியம், முகமது அலி ஜின்னா ஆகியோரது சேவைகளைப் பாராட்டி முதலமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா.விஷ்ணு சந்திரன் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியும், அரசியல் மாமேதையுமான முரசொலி மாறன் அவர்களின் 90வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டக் கழக அலுவலகத்தில் முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### ‘நீட்’ தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசு - ஆளுநரைக் கண்டித்து

# நாகையில் உண்ணாவிரதம்: கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் - மன்னை சோழராஜன் கண்டன உரை!

## கழகத்தினர் பெருமளவில் பங்கேற்க - என்.கௌதமன் வேண்டுகோள்!

நாகை, ஆக. 20 -

நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க் கொல்லியாக நீட் தேர்வு உருவெடுத்திருக்கிறது.

மாணவர்களை மட்டுமின்றி பெற்றோரையும் மரணக்குழியில் தள்ளும் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின் படி தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் மாவட்டந் தோறும் உண்ணாவிரத அறப்போரை நடத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரியலூர் அனிதாவில் ஆரம்பித்த நீட் மரணம் குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன், அவரது தந்தை செல்வசேகர் வரை தொடர்கிறது. இந்த மரணங்கள் அனைத்திற்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசும், தமிழ்நாடு ஆளுநர் ரவியுமே காரணம்.

எத்தனை மரணங்கள் நிகழ்ந்தாலும் நீட் தேர்வு நடக்கும் என்ற எதேச்சதிகாரப் போக்கில் உள்ள ஒன்றிய அரசையும், இல்லாத அதிகாரம் இருப்பதுபோல் கொக்கரிக்கும் ஆளுநரையும் கண்டித்து நாகை மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்தவர் அணி சார்பில் இன்று (20.08.2023 - ஞாயிறு) காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நாகை அவுரித்திடல் புதிய பேருந்து நிலையம் அருகில் மாபெரும் உண்ணாவிரத அறப்போர் என் தலைமையிலும், இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்தவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் முன்னிலையிலும் நடைபெறுகிறது.



இந்த உண்ணாவிரத அறப்போராட்டத்தில் கழக செய்தித் தொடர்புச் செயலாளர் கான்ஸ்டன்டைன் இரவீந்திரன், கழக மாணவர் அணி துணைச் செயலாளர் மன்னை த.சோழராஜன், மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர் நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும், தமிழ்நாடு ஆளுநர் ரவியும் கண்டித்து இந்த மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றியடைய செய்திட வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் கூறியுள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக முரசொலி மாறன் அவர்களின் 90வது பிறந்தநாளை முன்னிட்டு தாராபுரம் நகர கழக அலுவலகத்தில் அவரது திருவுருவப்படத்திற்கு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில், நகர கழக செயலாளர், நகர்மன்ற உறுப்பினர் சு.முருகானந்தம் முன்னிலையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாவட்ட, நகர, ஒன்றிய, வார்டு கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நீட்: திருப்பத்தூரில் உண்ணாவிரத அறப்போர்!

## க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பத்தூர், ஆக.20-

திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனைப்படி தமிழ்நாடு மாணவர்களின் மருத்துவராகும் கனவை சிதைத்து அவர்களின் உயிரை பறிக்கின்ற உயிர்க்கொல்லியாக நீட் தேர்வு உருவெடுத்திருக்கிறது. அரியலூர் அனிதாவில் ஆரம்பித்து நீட் மரணம் குரோம் பேட்டை ஜெகதீஸ்வரன், அவரது தந்தை செல்வசேகர் வரை தொடர்கிறது.

இந்த மரணங்கள் அனைத்திற்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, துணை போகும் அதிமுக மற்றும் தமிழ்நாடு ஆளுநரே காரணம். ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்கள் எண்ணத்தின் வெளிப்பாடாக நீட் தேர்வுக்கு விலக்கு பெறும் முயற்சிகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

ஆனால் அந்த நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு ஆளுநர் ரவி முட்டுக்கட்டை போட்டு வருகிறார். நம் மாணவச் செல்வங்களின் மரணம் ஆளுநரையோ, அவரை இங்கு அனுப்பியுள்ள ஆரிய மாடல் ஆட்களையோ துளியும் பாதிக்கவில்லை.

ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது வராத நீட், எடப்பாடி பழனிச்சாமியின் ஆட்சியின் போது தமிழ்நாட்டுக்குள் வந்தது. நீட் விலக்கிற்காக 2017ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசு நிறைவேற்றி அனுப்பிய சட்ட மசோதாவை, குடியரசுத் தலைவர் நிராகரித்ததை 21 மாதங்கள் வரை தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு தெரிவிக்காமல் அ.தி.மு.க.வினர் மறைத்தனர்.

ஒரு மாநில அரசால் நீட்டை ரத்து செய்ய என்னென்ன நடவடிக்கைஎடுக்க முடியுமோ அவை அனைத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலின் படி தி.மு.க.வின் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணிகளின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்ட அறிக்கையின் படி இந்த நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய பாஜக அரசு மற்றும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்து திருப்பத்தூர் மாவட்ட திமுகவின் இளைஞர் அணி, மாணவர் அணி,

மருத்துவர் அணி சார்பில் இன்று (20.8.2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரை திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் எதிரில்



நடைபெற உள்ள உண்ணாவிரத அறப் போரை திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும் ஜோலார் பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்.

இந்த அறப்போரில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகி கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர மன்ற தலைவர்கள், ஒன்றிய குழு தலை வர்கள், பேரூராட்சி தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள்,

மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பெருந்திரளாக பங்கேற்று நீட் தேர்வை ஒழித்து தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையும் விலை மதிப்பில்லா உயிரையும் காக்க ஓரணியில் திரள்வோம் என்று தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.

## ‘வாட்ஸ் அப்’பில் வரும் செய்தி!




பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி தலைவர்
சென்னை மேற்கு மாவட்டம்,
அண்ணாநகர் தெற்கு பகுதி கழக செயலாளர்
ந.இராமலிங்கம் M.C.
அவர்கள்
இல்லத் திருமண விழா
மண விழா தலைமை
தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத்தலைவர்
மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்
முன்னிலை
மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
கழக இளைஞர்அணி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மணமக்கள்
Dr.கோ.ஹேமலதா M.B.B.S.,
Dr.வே.ராஜராஜன் M.B.B.S.,
மணநாள்
20.08.2023, ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 - 10.30 மணி
இடம்
விஜய் ஸ்ரீ மஹால் A/C
அண்ணாநகர், சென்னை - 600 040.
(காந்தி நகர், புறநகர் மருத்துவமனை எதிரில்)
வரவேற்புரை
நே.சிற்றரசு M.A.,M.Phill.,M.C.
சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர்
தயாநிதிமாறன் M.P. ◆ M.K.மோகன் M.L.A. ◆ ச.பரமசிவம் ◆ கார்த்திக்மோகன்
தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் / தலைமை செயற்குழு உறுப்பினர் / அண்ணாநகர் வடக்கு பகுதி கழக செயலாளர் / மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைசெயலாளர்
வாழ்த்துரை
திரு. ஆற்காடு நா.வீராசாமி ◆ மாண்புமிகு துரைமுருகன் ◆ மாண்புமிகு K.N.நேரு ◆ திரு. T.R.பாலு M.P. ◆ மாண்புமிகு ஐ.பெரியசாமி
மாண்புமிகு க.பொன்முடி ◆ மாண்புமிகு மா.சுப்பிரமணியன் ◆ மாண்புமிகு P.K.சேகர்பாபு ◆ திரு. ஆ.ராசா M.P. ◆ திருமதி கனிமொழி M.P.
அந்தியூர் ப.செல்வராஜ் M.P. ◆ மாண்புமிகு எ.வ.வேலு ◆ மாண்புமிகு M.R.K.பன்னீர்செல்வம் ◆ மாண்புமிகு K.R.பெரியகருப்பன்
மாண்புமிகு S.ரகுபதி ◆ மாண்புமிகு சு.முத்துசாமி ◆ மாண்புமிகு தா.மோ.அன்பரசன் ◆ மாண்புமிகு R.S.ராஜகண்ணப்பன்
மாண்புமிகு ஆர்.காந்தி ◆ மாண்புமிகு செஞ்சி K.S.மஸ்தான் ◆ மாண்புமிகு அன்பில்மகேஸ்பொய்யாமொழி
மாண்புமிகு T.R.B.ராஜா ◆ டாக்டர் S.ஜெகத்ரட்சகன் M.P. ◆ அரசு கொறடா முனைவர் கோ.வி.செழியன் ◆ ஆலந்தூர் R.S.பாரதி Ex.M.P. ◆ A.K.S.விஜயன் Ex.M.P.
சென்னை மேயர் பிரியாராஜன் ◆ துணை மேயர் மு.மகேஷ்குமார் ◆ முரசொலி செல்வம் ◆ மு.க.தமிழரசு ◆ அன்பகம்கலை ◆ டாக்டர் கலாநிதி வீராசாமி M.P.
மற்றும் தலைமை கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற இந்நாள்- முன்னாள் உறுப்பினர்கள், சட்டமன்ற இந்நாள்- முன்னாள் உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள்,வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள்,கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.
அன்புடன்
ந.இராமலிங்கம் M.C.
பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி தலைவர்
பகுதி கழக செயலாளர்
அண்ணாநகர் தெற்கு பகுதி தி.மு.க. - சென்னை மேற்கு மாவட்டம்


ஒரத்தநாடு
மு.காந்தி இல்ல மணவிழா...
தலைமையேற்று நடத்தி வைக்க வருகை தரும்
கழகத்தின் பொருளாளர் – நாடாளுமன்ற குழுத் தலைவர்
மாண்புமிகு. T.R.பாலு MP அவர்களையும்
முன்னிலையேற்க வருகை தரும் திருவாளர்கள்
மாண்புமிகு. அன்பில்.மகேஷ் பொய்யாமொழி
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
மாண்புமிகு. முனைவர் டி.ஆர்.பி.ராஜா
தொழில்துறை அமைச்சர்
துரை.சந்திரசேகரன் MLA
தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர்
எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் MP
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
எல்.கணேசன் Ex.MP
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
மாண்புமிகு. கோவி.செழியன் MLA
அரசு தலைமை கொறடா
சு.கல்யாணசுந்தரம் MP
தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர்
டி.கே.எஸ்.இளங்கோவன் MP
கழக செய்தித் தொடர்பு தலைவர்
ஏ.கே.எஸ்.விஜயன் MP
தமிழக அரசின் டெல்லி பிரதிநிதி
பூண்டி கே.கலைவாணன் MLA
திருவாரூர் மாவட்டச் செயலாளர்
கா.அண்ணாதுரை MLA
தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர்
செ.இராமலிங்கம் MP
மயிலாடுதுறை
மற்றும் வருகை தரும் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்...
மணமக்கள் :
மு.கா.கார்த்திக் D.E.E.E.,
தஞ்சை மத்திய மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்
க.சந்திரபிரியா B.Tech
நாள் : 20.08.2023 ஞாயிற்றுக்கிழமை
தெலுங்கன் குடிகாடு மண்டபம், ஒரத்தநாடு.
இரா.ஜெயசீலன் B.E., (TCS. UK) – கவிபாரதி காந்தி B.Tech., (UK)
மு.கா.கரிகாலன் B.Tech.,
Petrofac Pvt Ltd, Chennai
ஜெயகவி.அதீதன்


தி.மு.க கழக இளைஞரணி - மாணவரணி - மருத்துவர் அணி சார்பில்
நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசு மற்றும் ஆளுநரை கண்டித்து
மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம்
நாள் : 20.08.2023 ஞாயிற்றுக்கிழமை, காலை : 8.00 மணி, இடம் : BSNL அலுவலகம் அருகில், தருமபுரி.
தலைமை
தடங்கம் பெ.சுப்ரமணி Ex.M.L.A
மாவட்ட கழக செயலாளர், தருமபுரி கிழக்கு
முனைவர் பி.பழனியப்பன் M.Sc., Ph.D.,
மாவட்ட கழக செயலாளர், தருமபுரி மேற்கு
முன்னிலை
M.G.S.வெங்கடேஸ்வரன்
மாவட்ட இளைரணி அமைப்பாளர், தருமபுரி கிழக்கு
ஆர்.சிவகுரு B.A.,
மாவட்ட இளைரணி அமைப்பாளர், தருமபுரி மேற்கு
நாட்டான் M.மாது
நகர கழக செயலாளர், தருமபுரி
N.P.பெரியண்ணன் M.A.,M.Ed.,
மாவட்ட மாணவரணி அமைப்பாளர், தருமபுரி கிழக்கு
M.சந்தர் B.E.,
மாவட்ட மாணவரணி அமைப்பாளர், தருமபுரி மேற்கு
Dr.T.பழனிசாமி M.B.B.S.,
மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர், தருமபுரி மேற்கு
அது சமயம் நடைபெற உள்ள உண்ணாவிரத அறப்போராட்டத்தில் முன்னாள்,இந்நாள் நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள்,மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகராட்சி,பேரூராட்சி செயலாளர்கள் மற்றும் தலைவர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகள்,கவுன்சிலர்கள் மற்றும் தி.மு.கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக உடன் பிறப்புகள், கல்லூரி மாணவ,மாணவிகள் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரும் பங்கேற்று இந்த உண்ணாவிரத அறப்போராட்டம் வெற்றி பெறச் செய்ய வேண்டுகிறோம்.
நன்றியுரை
N.பெருமாள் M.A.,
மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர், தருமபுரி கிழக்கு
இங்ஙனம் :
திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி
ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டம்



தி.மு.கழக உயர்நிலை
செயல்திட்டக்குழு உறுப்பினர்

# அ.இரகுமான்கான்

மூன்றாம் ஆண்டு நினைவு நாள்.

ஆகஸ்ட்
20



அன்பானவரே...

இயக்கமே உயிர் மூச்சென வாழ்ந்தவரே...

இன்று...

இந்தியாவுக்கே விடியல் தரவிருக்கும்

# பாசத்தலைவரின்

பாதையில்
எங்கள் வாழ்நாள் பயணம்...

டாக்டர் **அ.சுபேர்கான்**
எம்.எஸ் (ஆர்த்தோ)
மாநிலச் செயலாளர் –
சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு
திராவிட முன்னேற்றக் கழகம்.

**ரியாஸ் ரகுமான்கான்**
B.E., MBA.,

மற்றும் குடும்பத்தினர்.



தேனி வடக்கு மாவட்ட திமுக செயலாளர்
தங்கதமிழ்செல்வன்
M.A.,Ex.MLA,Ex.MP அவர்கள்
இல்ல திருமண விழா
நாள் : 20-8-2023 ஞாயிறு
நேரம் : காலை 9.00 - 10.00 மணி
இடம் : பி.எல்.ஏ. திடல், கம்பம், தேனி மாவட்டம்
மாண்புமிகு கழகத்தலைவர்
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களின் நல்லாசியுடன்
மாண்புமிகு
மாநில இளைஞர் அணி செயலாளர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களின் வாழ்த்துகளுடன்
மாண்புமிகு. K.N.நேரு அவர்கள்
கழக முதன்மை செயலாளர், நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர்
மாண்புமிகு. I.பெரியசாமி B.A., BGL., அவர்கள்
கழக துணைப்பொதுச் செயலாளர், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்
மாண்புமிகு. அர.சக்கரபாணி B.A., அவர்கள்
உணவுத்துறை அமைச்சர்
திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர்
மாண்புமிகு. P.மூர்த்தி B.A., அவர்கள்
வணிகவரி மற்றும் பத்திரபதிவுத்துறை அமைச்சர்,
மதுரை வடக்கு மாவட்ட செயலாளர்
மாண்புமிகு. PTR.பழனிவேல் தியாகராஜன் Ph.D., அவர்கள்
தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர்
கழக சொத்து பாதுகாப்புக்குழு மாநில செயலாளர்
மாண்புமிகு. N.இராமகிருஷ்ணன் M.A.,MLA, அவர்கள்
தேனி தெற்கு மாவட்ட செயலாளர்
திரு. பெ.செல்வேந்திரன் B.A., அவர்கள்
மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர்
திரு. M.மணிமாறன் B.A., அவர்கள்
மதுரை மாநகர் மாவட்ட செயலாளர்
திரு. O.R.இராமச்சந்திரன் M.A.,B.L., அவர்கள்
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
திரு. I.P.செந்தில்குமார் M.A.,B.L., MLA, அவர்கள்
திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர்
திரு. P.V.கதிரவன் B.A.,B.L., அவர்கள்
அகில இந்திய பார்வர்டு பிளாக் பொதுச்செயலாளர்
திரு. கோ.தளபதி MLA, அவர்கள்
மாவட்ட மாநகர் மாவட்ட செயலாளர்
திரு. M.ஜெயக்குமார் B.A., அவர்கள்
மாநில தீர்மானக்குழு இணைச்செயலாளர்
திரு. L.மூக்கையா அவர்கள்
மாநில உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்
திரு. K.S.சரவணக்குமார் B.E.,MBA.,MLA, அவர்கள்
தெற்கு ஒன்றிய செயலாளர், பெரியகுளம்
திரு. S.காந்திராஜன் B.A.,B.L., அவர்கள்
வேடசந்தூர், சட்டமன்ற உறுப்பினர்
திரு. PLA.ஜெகநாத்மிஸ்ரா அவர்கள்
சேர்மன், பாலமுத்தழகு குழுமம்
திரு. A.லாசர் Ex.MLA அவர்கள்
மாநிலக்குழு உறுப்பினர், CPI(M)
திரு. ஆ.மகாராஜன் அவர்கள்
ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர்
திரு. A.வெங்கடேசன் MLA அவர்கள்
மாவட்ட கழக துணை செயலாளர், சோழவந்தான்
திரு. R.இராஜாங்கம் அவர்கள்
சேர்மன், RR இண்டர்நேசனல் ஸ்கூல், கம்பம்
மணமக்கள் :
Dr.A.சுப்ரமணியன்
M.B.B.S., DNB (Ortho)
Dr.T.T.சாந்தினி
M.B.B.S., M.D., (Paediatrics)
மற்றும் கழக நிர்வாகிகள்,
தோழமை கட்சி பொறுப்பாளர்கள்
மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள்,
சார்பு அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள்,
உள்ளாட்சி பிரதிநிதிகள், உறவினர்கள்,
நண்பர்கள் அனைவரையும் வருக வருக
அன்புடன் வரவேற்கின்றேன்...!
தங்கதமிழ்செல்வன்
M.A.,Ex.MLA,Ex.MP
தேனி வடக்கு மாவட்ட திமுக செயலாளர்
தேனி வடக்கு மாவட்ட தி.மு.க.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2023) இராமநாதபுரம் ஆய்வு மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இராமநாதபுரம் மாவட்டத்தில் பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் ஒரு கோடி மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை பயனாளிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை தந்த போது, முதுகுளத்தூரைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி நாககுமரன் அவர்கள் வேலை வேண்டி நேற்று முன்தினம் முதலமைச்சர் அவர்களிடம் மனு அளித்தார். அம்மனு மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு நேற்று முன்தினம் (18.08.2023) இராமநாதபுரம் ஆய்வு மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சித் துறையில் தற்காலிக பணிக்கான பணி நியமன ஆணையினை வழங்கினார். இந்த நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மருத்துவத்துறையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி

# தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக திகழச் செய்துள்ளார் முதல்வர்!

### இராமநாதபுரத்தில் - மருத்துவக் கட்டிடங்களைத் திறந்துவைத்து - அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

இராமநாதபுரம், ஆக.20-

இராமநாதபுரம் மாவட்டத்தில் பொது சுகாதாரத்துறையின் மூலம் ரூ.2.59 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட துணை சுகாதார நிலையம் மற்றும் வெளி நோயாளி பிரிவு கட்டடங்களைத் திறந்து வைத்துப் பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவத்துறைக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி முதன்மை மாநிலமாக திகழச் செய்துள்ளார் என, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் புகழாரம் சூட்டினார்.

இராமநாதபுரம் மாவட்டம், உச்சிப்புளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று (18.08.2023) பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறையின் மூலம் புதிதாக கட்டப்பட்ட துணை சுகாதார நிலையங்கள், வெளி நோயாளிகள் பிரிவு, செவிலியர் குடியிருப்பு மற்றும் கண் அறுவை சிகிச்சை அரங்கம் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி முன்னிலை வகித்தார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையேற்று புதிதாக கட்டப்பட்ட மருத்துவக் கட்டடங்களை திறந்து வைத்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டங்களால் தமிழகம் பொது சுகாதாரத்துறையில் முதன்மை மாநிலமாக இருந்து வருகிறது. இது மட்டுமின்றி பல்வேறு திட்டங்களை மக்களின் தேவைகளை உணர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், கலைஞர் வருமுன் காப்போம் போன்ற திட்டங்கள் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிகிணங்க இராமநாதபுரம், பரமக்குடி பகுதியில் 1 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு இருந்து வருகிறது. இராமநாதபுரத்தில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டி சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ரூ1.20 கோடி மதிப்பீட்டில் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தை பொறுத்தவரை 267 துணை சுகாதார நிலையங்கள், 59 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 2 வட்டம் சாரா மருத்துவமனைகள், 7 வட்டார மருத்துவமனைகள், 1 மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, 1 மண்டல மனநல மருத்துவமனை இருந்து வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் எய்ம்ஸ் மருத்துவக்கல்லூரி சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. இப்பகுதியில் உள்ள மாணவ, மாணவிகள் நன்றாகப் படித்து எய்ம்ஸ் மருத்துவக்கல்லூரியில் படிக்கும் நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.


முதலமைச்சர் அவர்கள் மானியக்கோரிக்கையில் இதயம் காப்போம் திட்டம் துவங்க உத்தரவிட்டு அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இருதய பாதுகாப்பு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. இதன் நோக்கம் மாரடைப்பு நோயை கட்டுப்படுத்தி பாதுகாப்பதே ஆகும். தற்பொழுது இத்திட்டத்தினால் கிராம பகுதியில் இருதயம் பாதுகாப்பு சிகிச்சைக்கு நாள்தோறும் மக்கள் சென்று மருத்துவரிடம் ஆலோசனை பெற்று வருவதுடன் நெஞ்சு வலி உள்ள நபர்களுக்கு அப்பொழுது கொடுக்க வேண்டிய 14 வகை மாத்திரைகள் உடனடியாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் மாரடைப்பு தடுக்கப்பட்டு பாதுகாக்கும் நிலை உருவாகிறது. இதே போல் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நாய் கடிக்கான தடுப்பூசி வழங்கப்படுகிறது. இதே போல் கண் அறுவை சிகிச்சைக்கும் உரிய மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மக்களின் தேவைக்கேற்ப மருத்துவ சிகிச்சைகள் உடனுக்குடன் வழங்கிடும் வகையில் அனைத்து மருத்துவமனைகளும் போதிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

முன்னதாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உச்சிப்புளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட வெளி நோயாளி பிரிவு, மண்டபத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் செவிலியர் குடியிருப்பு, மண்டபம் கேம்பில் ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம், காந்திநகரில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம், சூசையப்பர் பட்டினத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம், மூக்கையூரில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம், இராமசாமி பட்டியில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் செவிலியர் குடியிருப்பு, பரமக்குடியில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கண் அறுவை சிகிச்சை கட்டடம் என மொத்தம் ரூ.2.59 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கட்டிடங்களை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் 25 கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பரிசு பெட்டகத்தினை அமைச்சர் மா. சுப்பிரமணியன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜன், பரமக்குடி சார் ஆட்சியர் அப்தாப் ரசூல், பொது சுகாதாரத்துறை துணை இயக்குநர்கள் மரு.அர்ஜுன் குமார் (இராமநாதபுரம்), மரு.இந்திரா (பரமக்குடி), மருத்துவ இணை இயக்குநர் மரு.சகாய ஸ்டீபன் ராஜ், உதவி ஆட்சியர் (பயிற்சி) சிவானந்தம், மண்டபம் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் திருமதி.சுப்புலட்சுமி ஜீவானந்தம் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கரூர் மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் கலைஞரின் மனசாட்சி முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் படத்திற்கு 90 வது பிறந்த நாளை முன்னிட்டு கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

### கழக விவசாய அணி மாநில துணைச் செயலாளர்

# டி.எம்.அரியப்பன் புதல்வர் மணவிழா!

### முதல்வர் இல்லத்தில் நடைபெறுகிறது!

சென்னை, ஆக.20-

கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஒன்றியம் இராயக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த கழக விவசாய அணி மாநில துணைச் செயலாளர் டி.எம்.அரியப்பன், - சாந்தி அரியப்பன் புதல்வர் அ.அன்பானந்தம், தொட்டபூவந்தி ஊராட்சியைச் சேர்ந்த நினைவில் வாழும் ஜி.வெங்கடசாமி - ஜானகி ஆகியோரது புதல்வி வெ.சொர்ணப்பிரியா ஆகியோரது திருமணம் இன்று (20.8.2023-ஞாயிறு) காலை 7.45 மணி அளவில் கழகத் தலைவர் இல்லத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைக்கிறார்.



கழக இளைஞர் அணிச் செயலாளரும் விளை யாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்கிறார்.

கழக பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் முன்னிலை வகிக்கிறார்.

இம்மணவிழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, க. பொன்முடி, நாடாளுமன்ற கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி, அ.இராசா எம்.பி.,, அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், ஆர்.எஸ். பாரதி, அன்பகம் கலை, ப.தாயகம்கவி, எஸ். ஆஸ்டின், டி.கே.எஸ். இளங்கோவன், பூச்சி முருகன், துறைமுகம் காஜா, ஆர். பத்ம நாபன், என்.ஜெயக்குமார், கு.க.செல்வம், என். ஆர்.இளங்கோ எம்.பி., கார்த்திக் மோகன், ஆர்.கிரிராஜன் எம்.பி., ஐ.பரந்தாமன் எம்.எல்.ஏ., அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழாவில் அமைச்சர்கள் எ.வ.வேலு, ஆர்.காந்தி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சு.முத்துசாமி, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ்பொய்யாமொழி, மு.பெ.சாமிநாதன், எஸ். எஸ்.சிவசங்கர், கீதா ஜீவன், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, தா. மோ.அன்பரசன், கே.ஆர். பெரியகருப்பன், டி.ஆர்.பி,. ராஜா, செஞ்சி மஸ்தான், அரசுகொறடா கோவி.செழியன், பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி,

மாவட்டச் செயலாளர்கள் டி.மதியழகன், மயிலை த.வேலு, தடங்கம் சுப்பிரமணி, நே.சிற்றரசு, பி.பழனியப்பன், ஏ.பி.நந்தகுமார், காங்கிரஸ் எம்.பி.ஏ செல்லக்குமார், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டி.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., டி.செங்குட்டுவன், இ.ஜி.சுகவனம், எம்.வி.வெற்றிச்செல்வன், மேயர் எஸ்.ஏ.சத்யா, ஆ. யுவராஜ், பி.எஸ்.சீனிவாசன், பி. முருகன், பி.விஜயகுமார், தா. சுகுமாரன், டேம் வெங்கடேசன், டி.சந்திரசேகர், சூடப்பட்டி சுப்பிரமணி, பி.டி. அன்பரசன், பி.எம்.முனிராஜ், எம்.பொன்னுசாமி, வெங்கடேசன், ஏ.பி.ரவி, ஏ.வேதவள்ளி, ஆர்.ஜெயபாலன் உள்ளிட்ட கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் வாழ்த்துகின்றனர்.

அறிவானந்தம் அரியப்பன் நன்றி கூறுகிறார்.

### நீட் : ஒன்றிய அரசு மற்றும் ஆளுநரைக் கண்டித்து

# பெரம்பலூர் மாவட்டத்தில் உண்ணாவிரதம் : ஆ.இராசா எம்.பி. கண்டன உரை!

### மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் அறிக்கை!

பெரம்பலூர்,ஆக,20

நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், துணை போகும் தமிழக கவர்னரை கண்டித்தும், இன்று (ஆக. 20-ஞாயிற்றுக்கிழமை), காலை 7.00 மணி முதல் , மாலை 5.00 மணி வரை, பாலக்கரையில் உள்ள, மாவட்ட ஆட்சியர் அலுவலக சாலையில் உண்ணாவிரத அறப்போர் நடைபெறுகிறது.



தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவரணி சார்பில் நடைபெறும் இந்த உண்ணாவிரதத்திற்கு, மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில மருத்துவ அணி துணை செயலாளர் டாக்டர் செ.வல்லபன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்த உண்ணாவிரத அறப்போரில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்.பி., கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இதில் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் ,நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ‘நீட்’ - ஒன்றிய அரசு - தமிழ்நாடு ஆளுநரைக் கண்டித்து

# சேலத்தில் இன்று மாபெரும் உண்ணாவிரத அறப்போர்!

### மாவட்டச் செயலாளர் ஆர்.இராஜேந்திரன் - எஸ்.ஆர்.சிவலிங்கம் - டி.எம்.செல்வகணபதி கூட்டறிக்கை!

சேலம், ஆக. 20-

சேலம் மாவட்டச் செயலாளர்கள் ஆர்.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., எஸ்.ஆர். சிவலிங்கம், டி.எம்.செல்வகணபதி ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-







மருத்தவப் படிப்பில் சேருவதற்கு தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு நீட் எழுதுவதால். அனைத்து மாணவர்களும் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகி வருகின்றார்கள்.

ஏழை. நடுத்தரவர்க்க மாணவர்களின் பெற்றோர். நுழைவுத் தேர்வுக்கு தங்கள் பிள்ளைகளை தயார்படுத்துவதற்காக பயிற்சிப் பள்ளிகளில் பல இலட்சம் ரு:பாய் செலவு செய்து தோல்வி ஏற்படும் போது மன உளைச்சலில் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள், மாணவி அரியலூர் அனிதா தொடங்கி சென்னை மாணவர் ஜெகதீஸ்வரன் வரை இதுவரை 19 மாணவ - மாணவிகள் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர், சில பெற்றோர்களும் தற்கொலை செய்து கொள்ளும் சூழலில் நமது மாநில கவர்னர் பல மாதங்கள் சட்டமன்றத் தீர்மானத்தை குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் காலந் தாழ்த்தி பின்னர் கடுமையான போராட்டத்திற்கு பின் அனைத்துக் கட்சிகளின் எதிர்ப்புக்குப்பின் தற்போது குடியரசு தலைவருக்கு அனுப்பப்பட்டு மீண்டும் கிடப்பில் போடப்பட்டுள்ளது,

பாதிப்பை அனைத்து அரசியல் கட்சிகளும் உணர்ந்து இருந்தாலும் பா.ஜ.க. கட்சியும். ஒன்றிய ஆட்சியும் தங்கள் ஆர்.எஸ்.எஸ். கொள்கையை நிலைநாட்ட வேண்டி தமிழ்நாட்டு மக்களுக்கும். மாணவர்களுக்கும் கேடு விளைவிக்கும் நீட் மசோதாவுக்கு எதிர் பிரச்சாரம் செய்து வருகின்றார்கள்,

ஒவ்வொரு ஆண்டும் தற்கொலைகள் தொடர்ந்தாலும். சட்டத்தின் ஆட்சியையும். அரசியல் அமைப்பு சட்டத்தையும் மதிக்காமல் ஆளுநர் காலம் தாழ்த்தியதைப் போல். தற்போது குடியரசு தலைவரும் காலம் தாழ்த்தி வருவது குறித்து மிகவும் வேதனையோடு தமிழ்நாடு முதல்வர். கழகத் தலைவர் அவர்கள் நினைவூட்டல் கடிதம் எழுதியும். இதுவரை அதற்கான முற்றுப்புள்ளி வைக்கப்படாமல் இருப்பதை மக்கள் மன்றத்திற்கு கொண்டு சென்று தமிழ்நாடு அரசால் நிறைவேற்றப்பட்ட நீ;ட் மசோதாவுக்கு விரைவில் ஒப்புதல் பெற்றிட வேண்டி நடைபெறவுள்ள உண்ணாவிரத அறப்போராட்டத்திற்கு அனைத்து மக்களும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறோம்,

நீட் மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் உடனடியாக தலையிட்டு ஒப்புதல் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் இன்று (20.8.2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 08.00 மணி முதல் மாலை 05,00 மணி வரை நடைபெற உள்ள உண்ணாவிரத போராட்டத்தில் சேலம் ஒருங்கிணைந்த மாவட்டத்தை சேர்ந்த இளைஞர் அணி. மாணவர் அணி. மருத்துவ அணியை சார்ந்த தோழர்களும். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் கட்சி சார்பின்றி திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

### ‘நீட்’ தேர்வு ஒன்றிய அரசு - ஆளுநரைக் கண்டித்து

# மயிலாடுதுறையில் இன்று மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம்!

### திருச்சி சிவா எம்.பி. கண்டன உரை! நிவேதா எம்.முருகன் வேண்டுகோள்!

நாகை. ஆக.20-

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.



தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க்கொல்லியாக நீட் தேர்வு உருவெடுத்திருக்கிறது. மாணவர்களை மட்டுமின்றி பெற்றோரையும் மரணக்குழியில் தள்ளும் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் மாவட்டம் தோறும் உண்ணாவிரத அறப்போரை நடத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்தவர் அணி சார்பில் இன்று (ஆக.20-ஞாயிறு காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மயிலாடுதுறை தலைமை தபால் நிலையம் எதிரில் கிட்டப்பா அங்காடி அருகே மாபெரும் உண்ணாவிரத அறப்போர் என் தலைமையிலும், இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

இந்த அறப்போராட்டத்தில் கழகக் கொள்கை பரப்புச் செயலாளர், மாநிலங்களவைக்குழுத் தலைவர் திருச்சி என்.சிவா, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராம லிங்கம், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். இந்த உண்ணாவிரப் போராட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு உண்ணாவிரதப்போராட்டத்தை வெற்றியடையச் செய்திட வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கூறியுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் - மீனவர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா:

# ரூ.88.90 கோடி மதிப்பில் 14 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி தொடக்கி வைத்தார்!

இராமேஸ்வரம், ஆக. 20 - மீனவர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ரூ.88.90 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 14,000 பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2023) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு மாநிலத் தலைமை மீனவர் கூட்டுறவு இணையம் மற்றும் மீனவ சங்கங்கள் இணைந்து நடத்தும் மீனவர் நல மாநாடு மற்றும் மீனவர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், 14,000 பயனாளிகளுக்கு 88 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 60 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மீன் வளத்தை பாதுகாத்தல், நிலைக்கத்தக்க மீன்பிடிப்பு, மீன் வளர்ப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல், மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்பிடி இடத்திலிருந்து அதன் நுகர்வு வரை சுகாதாரமான முறையில் கையாளப்படுவதை உறுதி செய்வதற்கும் மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்கள், கரையோர வசதிகள், மீன் சந்தைகள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மீன்பிடி தடைகாலங்களில் மீனவர்களுக்கு நிதியுதவி, மீன்பிடி படகுகளுக்கு வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்குதல், பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல், புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலை விசைப்படகுகளை வாங்கிட மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் இராமநாதபுரம், இராமேஸ்வரம், கீழக்கரை, திருவாடனை, ஆர்.எஸ். மங்கலம் ஆகிய வட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மானியத்தில் சூரை மீன்பிடி கட்டுதல் மற்றும் பிரதமரின் மத்ஸ்ய சம்பதா யோஜனா திட்டங்கள், கிசான் கடன் அட்டைகள், கடற்பாசி வளர்ப்பு, மீனவர் நல வாரிய அட்டைகள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் புதிய தொழில்முனைவோர் தொழில் மேம்பாட்டு திட்டத்தில் நிதியுதவி, கூட்டுறவுத் துறை சார்பில் பயனாளிகளுக்கு மகளிர் சுயஉதவிக் குழு கடனுதவி, கே.சி.சி. கடற்பாசி வளர்ப்புக் கடனுதவி, மகளிர் திட்டத்தின் சார்பில் கூட்டு பொறுப்புக் குழு கடனுதவி, மகளிர் சுயஉதவிக் குழு கடனுதவி என மொத்தம் 14,000 பயனாளிகளுக்கு மொத்தம் 88 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 60 பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முன்னதாக, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்கங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்த விழாவில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ.முருகேசன், இராம. கருமாணிக்கம், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந. கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மீன்வளத்துறை ஆணையர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ சங்கங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

'எய்ம்ஸ்' அரசியல் : எதிர்த்துக் குரலெழுப்பும்

# மாநிலங்களை அரசியல் காழ்ப்புணர்ச்சியால் முடக்கும் ஒன்றிய அரசு!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஆக. 20-
ஒன்றிய அரசு மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை விஷயத்தில் மட்டுமல்ல; தனக்கெதிராக எந்தெந்த மாநிலங்கள் குரலெழுப்புக்கிறதோ அந்த மாநிலங்களை அரசியல் காழ்ப்புணர்ச்சியால் முடக்குகிறது என "தினகரன்" நாளேடு 18.8.2023 தேதியிட்ட இதழில் "எய்ம்ஸ் அரசியல்" என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.




அது வருமாறு:-

நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் உயர்தர மருத்துவ சிகிச்சைக்காக எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும் என்று ஒன்றிய பா.ஜ. அரசு முதன்முதலாக பதவியேற்ற ஓராண்டில் அறிவித்தது. அதன்படி, தமிழ்நாட்டில் தஞ்சாவூர் உள்பட பல இடங்கள் பேசப்பட்டு இறுதியில் மதுரையில் அமைப்பதுதான் சரியானது என்று பல்வேறு அரசியல்கட்சி தலைவர்கள் வலியுறுத்தியதை தொடர்ந்து மதுரை மாநகரத்தில் எய்ம்ஸ் அமைக்கப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்தது. இந்த அறிவிப்பு வெற்று அறிவிப்பாகவே 8 ஆண்டுகளாக தொடர்ந்து வரும் நிலையில், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப்பணிகள் மதுரையில் தொடங்காததை சுட்டிக்காட்டி ஒன்றிய அரசை கடுமையாக விமர்சித்தனர்.

அப்படி விமர்சனம் எழும்போது அந்தந்த நேரத்துக்கு தகுந்த பொய்யை ஒன்றிய பா.ஜ. தலைவர்களும், தமிழக பா.ஜ. தலைவர்களும் அவிழ்த்துவிட்டனர்.

வேலைகளே தொடங்காத எய்ம்ஸ் மருத்துவமனைகள் வந்துவிட்டதாக பிரதமர் மோடியே கூசாமல் பொய் கூறியுள்ளதும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. மதுரையில் மட்டுமல்ல, பீகார் மாநிலம் தர்பங்கா மாவட்டத்திலும் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு அப்படியே காலி நிலமாகவே கிடக்கிறது. இதற்கு பின்னணியிலும் பா.ஜ.வின் அரசியல் சூழ்ச்சி அமைந்துள்ளது.

தர்பங்கா மாவட்டத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைந்துவிட்டதாகவே உருவகப்படுத்திய மோடிக்கு பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ், 'பிரதமரிடம் இருந்து நாடு உண்மையை எதிர்பார்க்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார். இதன் பிறகு பீகார் மாநில அரசு எய்ம்ஸ் மருத்துவமனைக்காக வழங்கிய நிலம் ஏற்றதாக இல்லை என்று ஒன்றிய அரசு கடிதம் எழுதி தாமதத்துக்கு காரணம் பீகார் மாநில அரசுதான் என்று குற்றம்சாட்டியது.

ஆனால், உண்மை நிலவரம் என்னவென்றால், ஐக்கிய ஜனதா தள தலைவர் நிதிஷ்குமார் பா.ஜ.வுடன் கூட்டணியில் இருந்த போது எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க அனுமதி பெறப்பட்டது. தற்போது அவர் பா.ஜ. கூட்டணியில் இருந்து வெளியேறிவிட்டதால் எய்ம்ஸ் மருத்துவமனை அமைத்தால் ஏற்படும் நற்பெயர் அவருக்கு சென்றுவிடும் என்று ஒன்றிய பா.ஜ. அரசு தாமதப்படுத்தி அரசியல் செய்கிறது. தர்பங்கா மாவட்டத்தில் எய்ம்ஸ் மருத்துவமனைக்காக 151 ஏக்கர் நிலத்தை பீகார் மாநில அரசு வழங்கியுள்ளது. இந்த நிலம் தாழ்வாக இருப்பதாக ஒன்றிய அரசு நொண்டி சாக்கு கூறியதால், பீகார் மாநில அரசே முன்வந்து அந்த நிலத்தை மேடாக்கும் பணிகளை மேற்கொண்டு அதற்கான செலவினங்களையும் ஏற்றுக்கொண்டது.

எனவே, ஒன்றிய அரசு மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை விஷயத்தில் மட்டுமல்ல, நாடு முழுவதும் எந்தெந்த மாநிலங்கள் ஒன்றிய அரசுக்கு எதிராக குரல் எழுப்புகிறதோ அந்த மாநிலங்களில் ஒன்றிய அரசு திட்டப்பணிகளை அரசியல் காழ்ப்புணர்ச்சியால் முடக்கி வருகிறது. இதுகுறித்து மாநில அரசு கேள்வி கேட்டால் நேரத்துக்கு தகுந்தாற்போன்று பொய்களை அவிழ்த்துவிடுவதை ஒன்றிய அரசும், ஒன்றிய அமைச்சர்களும் வாடிக்கையாக கொண்டுள்ளனர் என்று அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'நீட்' திணிப்பு!

# ஒன்றிய அரசு - ஆளுநரைக் கண்டித்து புதுக்கோட்டையில் உண்ணாவிரத அறப்போர்!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!

புதுக்கோட்டை, ஆக20
புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:





கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி தமிழ்நாட்டு மாணவர்களின் மருதத்துவராகும் கனவைச் சிதைத்து அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க்கொல்லியாக நீட் தேர்வு உருவெடுத்திருக்கிறது. அரியலூர் அனிதாவில் ஆரம்பித்த நீட் மரணம், குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன். அவரது தந்தை செல்வசேகர் வரை தொடர்கிறது. இந்த மரணங்கள் அனைத்திற்கும், ஒன்றிய பா.ஜ.க அரசு, துணை போகும் அ.தி.மு.க. மற்றும் தமிழ்நாடு ஆளுநரே காரணம், ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்கள் எண்ணத்தின் வெளிப்பாடாக நீட் நேர்வுக்கு விளக்கு பெறும் முயற்சியினை தமிழ்நாடு அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. ஆனால், அந்த நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு ஆளுநர் முட்டுக் கட்டை போட்டு வருகிறார். தம் மாணவச் செல்வங்களின் மரணம். ஆளுநரையோ, அவரை இங்கு அனுப்பியுள்ள ஆரிய மாடல் ஆட்களையோ துளியும் பாதிக்கவில்லை.

ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது வராத நீட், எடப்பாடி பழனிச்சாமியின் ஆட்சியின் போது தமிழ்நாட்டுக்குள் வந்தது. நீட் விலக்கிற்காக 2017ஆம் ஆண்டு அதிமுக அரசு நிறைவேற்றி அனுப்பிய சட்ட மசோதாவை, குடியரசுத் தலைவர் நிராகரித்ததை. 21 மாதங்கள் வரை தமிழ் நாடு சட்டப்பேரவைக்கு தெரிவிக்காமல் அதிமுக வினர் மறைத்தனர்.

ஒரு மாநில அரசால் நீட்டை ரத்து செய்ய என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ, அவை அனைத்தையும் தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்.

கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.க., வின் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணிகளின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக் கையின்படி, இந்த "நீட்" தேர்வை புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில், இன்று (20.08.23 - ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை புதுக்கோட்டை திலகர் திடலில் உண்ணாவிரத அறப்போர் நடைபெற உள்ளது

அதுசமயம் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஒன்றியக்குழு தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட, ஒன்றிய கவுன்சிலர்கள், மாணவ, மாணவியர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள், கழக முன்னோடிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், பாக முகவர்கள் திரளாக கலந்து கொண்டு உண்ணாவிரத அறப்போராட்டத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டுமாய கேட்டுக் கொள்கிறோம்.

நீட் தேர்வை ஒழித்து. தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையையும் விலை மதிப்பில்லா உயிரையும் காக்க ஓரணியில் திரள்வோம்.

இவ்வாறு தங்களது அறிக்கையில் கூறியுள்ளனர்.

# 2023 ஆம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை கால நீட்டிப்பு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஆக.20 -
தமிழ்மொழி வளர்ச்சிக்கெனத் தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பல்வேறு கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன், தமிழ் முதுகலை (M.A. Tamil) மற்றும் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலை பட்டப்படிப்பு (Five Year Integrated M.A. Tamil) ஆகியன இந்நிறுவனத்தில் ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றது. 2023 24ஆம் கல்வியாண்டிற்கான இப்பட்டப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை மாணவர்கள் நலன் கருதி 22.09.2023 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டு நேரடி சேர்க்கை (Spot Admission) தற்பொழுது நடைபெற்று வருகிறது.

மேற்கண்ட படிப்புகளில் பயில விரும்புவோர் சேர்க்கைத் தொடர்பான விதிமுறைகள்/தகவல்கள் மற்றும்விண்ணப்பங்களை www.ulakaththamizh.in என்ற இணைய முகவரியில் பதிவிறக்கம் செய்து தெரிந்துக் கொள்ளலாம்.

இருபாலருக்கெனத் தனித்தனியே கட்டணம் இல்லா தங்கும் விடுதி வசதி உள்ளன. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நேரில் இறுதியாகப் படித்த கல்விச் சான்று மற்றும் மாற்றுச்சான்றிதழ் (சான்றொப்பமிடப்பட்டது) நகலுடன் இணைத்து இயக்குநர் (கூ.பொ.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை600113 (தொலைபேசி 044 22542992) என்ற முகவரியில் அளித்தல் வேண்டும். மேலும் தகவல் பெற மேற்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'நீட் தேர்வை எதிர்த்து உண்ணாவிரத அறப்போராட்டம்!

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணியினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்ட அமைப்பாளர் டி.லோகேஷ் வேண்டுகோள்!

சென்னை, ஆக. 20-
சென்னை கிழக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளர் டி.லோகேஷ் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான பி.கே. சேகர் பாபு பங்கேற்று ஒன்றிய அரசின் நீட் தேர்வை திணிப்பதை எதிர்த்து இன்று (20.8.2023 -ஞாயிற்றுக்கிழமை) உண்ணாவிரத அறப்போராட்டம் கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் சென்னை கிழக்கு மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்குமாறு ஆலோசனைகள் வழங்கினார்.

இந்த ஆலோசனைக்கேற்ப மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.லோகேஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அனைத்து மதுக்கடைகளிலும்

# கண்காணிப்பு கேமரா, விலைப்பட்டியல் பொருத்தப்படும்!

## அமைச்சர் சு.முத்துசாமி பேட்டி!

சென்னை, ஆக. 20-
மதுவிற்கு கூடுதல் கட்டணமாக ஒரு ரூபாய் கூட வசூலிக்க கூடாது எனவும் அனைத்து கடைகளிலும் கண்காணிப்பு கேமரா மற்றும் விலைப்பட்டியல் பொருத்தப்படும் எனவும் அமைச்சர் முத்துசாமி தெரிவித்துள்ளார்.



சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் டாஸ்மாக் சங்கத்தினருடன் அமைச்சர் முத்துசாமி பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த கூட்டத்தில் டாஸ்மாக் சங்கங்களின் கோரிக்கைகள், கடைகளை சுகாதாரமாக வைக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும், மதுபானங்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்யாமல் இருப்பவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இதுகுறித்து செய்தியாளரிடம் பேசிய அமைச்சர் முத்துசாமி "21 சங்கங்கள் எழுத்துப்பூர்வமாக மொத்தம் 55 கோரிக்கைகள் வைத்துள்ளனர். இதில் 39 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. மற்ற கோரிக்கைகள் குறித்து வரும் கூட்டங்களில் ஆலோசிக்கப்படும். மதுகடைகள் இருக்கும் இடத்தில் வாடகை பிரச்னை பெரும் பிரச்னையாக உள்ளது. அதற்கு வாடகையை ஒழுங்கு செய்து தொழில்களில் பாதிப்பு இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படும்.

மின்சார கட்டணத்தை பொருத்தவரை பல கடைகளில் அதற்கான தனி மீட்டர் இல்லாமல் இருந்தது. மின்கட்டணம் அதிகமானால் தொழிலாளிகள் பணம் கட்டும் நிலைமை இருந்தது. அந்தநிலை மாற்றியமைக்கப்படும். தற்போது 3,500 கடைகளில் கண்காணிப்பு கேமரா உள்ளது. இதுபோல் மேலும் 500 கடைகளில் கேமரா பொறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

பணத்தை வைக்க பாதுகாப்பு பெட்டகம் வரும் காலத்தில் அனைத்து கடைகளிலும் வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். டாஸ்மாக் கடைகளில் தொழிலாளர்களுக்கு அனைத்து பாதுகாப்பும் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறுவயதில் இருப்பவர்கள் முதல் முறை கடைக்கு வருபவர்களை அந்த பழக்கத்தில் இருந்து தடுக்க வேண்டும் என்பதால், அந்த நபரின் நம்பரை மாவட்ட நிர்வாகத்திடம் கொடுத்து விட்டால் அந்த நபர்களுக்கு இரண்டு முறை கவுன்சிலிங் கொடுக்கப்படும். இதை யார் செய்கிறார்களோ அவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் நடத்தும் ஏதாவது ஒரு நிகழ்ச்சியில் ஊக்கத்தொகை கொடுக்கப்படும்.

விலை பட்டியல் அனைத்து மது கடைகளிலும் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. பெரிய திட்டமாக எல்லா நடவடிக்கைகளும் கம்ப்யூட்டர் மூலம் கண்காணிக்கப்படும். இனிமேல் கூடுதல் கட்டணம் வசூலிக்க கூடாது என்று திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு ரூபாய் கூட வாங்க கூடாது என்று சொல்லி இருக்கிறோம். டெட்ரா பேக் குறித்து கமிட்டி அமைத்துள்ளோம். அவர்கள் 4 மாநிலங்களுக்கு சென்று ஆய்வு செய்வார்கள். அதன் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்."

இவ்வாறு அமைச்சர் முத்துசாமி தெரிவித்துள்ளார்

# நீட் திணிப்பு ஒன்றிய அரசு - ஆளுநரைக் கண்டித்து திருப்பூரில் உண்ணாவிரத போராட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் க.செல்வராஜ் எம் எல் ஏ., இல.பத்மநாபன் வேண்டுகோள்!

திருப்பூர், ஆக.20-
நீட் திணிப்பு ஒன்றிய அரசு ஆளுநரைக் கண்டித்து திருப்பூரில் உண்ணாவிரத அறப்போர் மாவட்டச் செயலாளர்கள் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து - அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க்கொல்லியாக நீட் தேர்வு உருவெடுத்திருக்கிறது. அரியலூர் அனிதாவில் ஆரம்பித்த நீட் மரணம், குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன், அவரது தந்தை செல்வசேகர் வரை தொடர்கிறது. இந்த மரணங்கள் அனைத்திற்கும், ஒன்றிய பா.ஜ.க. அரசு, துணை போகும் அ.தி.மு.க. மற்றும் தமிழ்நாடு ஆளுநரே காரணம். ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்கள் எண்ணத்தின் வெளிப்பாடாக நீட் தேர்வுக்கு விலக்கு பெறும் முயற்சிகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. ஆனால், அந்த நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு ஆளுநர் ரவி முட்டுக் கட்டை போட்டு வருகிறார். நம் மாணவச்செல்வங்களின் மரணம், ஆளுநரையோ, அவரை இங்கு அனுப்பியுள்ள ஆரிய மாடல் ஆட்களையோ துளியும் பாதிக்கவில்லை. ஜெயலலிதா ஆட்சியில் இருந்த போது வராத நீட், எடப்பாடி பழனிசாமியின் ஆட்சியின் போது தமிழ்நாட்டுக்குள் வந்தது. நீட் விலக்கிற்காக 2017ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசு நிறைவேற்றி அனுப்பிய சட்ட மசோதாவை, குடியரசுத்தலைவர் நிராகரித்ததை, 21 மாதங்கள் வரை, தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தெரிவிக்காமல் அ.தி.மு.க.வினர் மறைத்தனர். ஒரு மாநில அரசால் நீட்டை ரத்து செய்ய என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ, அவை அனைத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். கழகத் தலைவர் , தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.க.வின் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணிகளின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையின் படி, இந்த 'நீட்' தேர்வை திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்து திருப்பூர் வடக்கு, தெற்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் இன்று (20.08.2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை திருப்பூர் இரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா சிலை அருகில் உண்ணாவிரத அறப்போர் நடைபெற உள்ளது

இந்த உண்ணாவிரத அறப்போரில், ஒருங்கிணைந்த மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி, கழக அமைப்புகளில் நிர்வாகப் பொறுப்புகளில் இருக்கக் கூடிய நிர்வாகிகள், ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி கழக, பேரூர் கழக, வட்டக் கழக, வார்டு கழக செயலாளர்கள், மண்டலத் தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், நகரக் கழக, பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர்க் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், பாகமுகவர்கள், செயல் வீரர்கள், கழகத் தொண்டர்கள் மற்றும் மாணவர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும், பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என்று ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்டக் கழகத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்

நீட் தேர்வை ஒழித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையும் - விலைமதிப்பில்லா உயிரையும் காக்க ஓரணியில் திரள்வோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2023) இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், பேக்கரும்பில் உள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினரும் மாவட்டக் கழக செயலாளருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

### நாட்டில் நடைபெறும் பிரச்சினையின் போதெல்லாம் –

# மோடி கடைப்பிடிக்கும் மவுனம்!

## டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் விமர்சனம்!

புதுடெல்லி, ஆக. 20-

நாட்டில் பிரச்னை ஏற்படும் போதெல்லாம் பிரதமர் மோடி எதுவும் பேசாமல் மவுனமாக இருப்பார் என டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் குற்றம் சாட்டினார்.

டெல்லி சட்டபேரவையில் நேற்று முதல்வர் கெஜ்ரிவால் பேசுகையில்,“ பிரதமர் நாட்டின் தலைவர் ஆவார். மணிப்பூரில் இளம் பெண்கள் பாதிக்கப்பட்ட போது, மோடி திரும்பிக் கொண்டார். அவர் தன்னுடைய அறையிலேயே உட்கார்ந்து கொண்டார். அவரது அமைதிக்கான காரணம் குறித்து நாட்டு மக்கள் அனைவரும் கேள்வி கேட்டனர். இது மாதிரி அவர் இருப்பது இது முதல் முறை அல்ல. கடந்த 9 ஆண்டுகளில் இது போல் அவர் பல முறை அமைதி காத்துள்ளார். மல்யுத்த கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும் பா.ஜ.க. எம்பியுமான பிரிஜ்பூஷன் சிங் பாலியல் சீண்டல்களில் ஈடுபட்டார் என குற்றச்சாட்டு எழுந்தது.

பிரிஜ் பூஷன் மீது நடவடிக்கை எடுக்க கோரி மல்யுத்த வீராங்கனைகள் போராட்டங்கள் நடத்தினர். அப்போதும், பிரதமர் அமைதியாக இருந்தார்.



ஆனால், சர்வதேச போட்டிகளில் மல்யுத்த வீராங்கனைகள் பதக்கங்களை வென்று இந்தியா திரும்பிய போது அவர்களுடன் புகைப்படம் எடுக்க அவர் தவறவில்லை. வீராங்கனைகள் எனது மகள் என்று பெருமிதம் பொங்க தெரிவித்தார்.

இந்த சம்பவம் பற்றி விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படும் என அவர் உறுதியளித்திருக்கலாம். அவர்கள் உச்சநீதிமன்றத்துக்கு சென்ற பின்னர்தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மணிப்பூர் கலவரத்திலும் குறைந்தபட்சம் அமைதி ஏற்படுவதற்கு அவர் வேண்டுகோள் விடுத்திருக்கலாம்”

இவ்வாறு அவர் கூறினார்.

### ‘நீட்’ தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி

# திண்டிவனத்தில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம்

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிக்கை

செஞ்சி ஆக 20-

திமுக இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி, சார்பில் நடைபெறும் உண்ணாவிரத போராட்டத்தில் கழகத்தினர்கள், அனைத்து அணி பொறுப்பாளர்கள், பொது மக்கள் பங்கேற்க வேண்டுமென அமைச்சர் செஞ்சி மஸ்தான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது குறித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் தனது அறிக்கையில் கூறுகையில்

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி நீட் தேர்வை ஒன்றிய அரசு ரத்து செய்ய வலியுறுத்தியும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நீட் தேர்வை ரத்து செய்ய தாக்கல் செய்யப்பட்ட மசோதாவைஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்காமல் கிடப்பில் போட்டுள்ள தமிழ்நாடு ஆளுநர் ரவி அவர்களைகண்டித்து கழக இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி, சார்பில் ஆகஸ்ட் 20ஆம் தேதி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட தலை நகரங்களிலும் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

இதையடுத்து விழுப்புரம் வடக்கு மாவட்டம் தி.மு.க. இளைஞரணி,மாணவரணி மருத்துவ அணி சார்பில் திண்டிவனம் வ .உ .சி.திடலில் காலை 8மணி முதல் மாலை 5 மணிவரை மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம்நடைபெறுகிறது.

இந்த உண்ணாவிரத போராட்டத்தில்விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள திமுக இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி, அனைத்து நிர்வாகிகள்,மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் ,ஊராட்சி கழக நிர்வாகிகள் அனைத்து அணி பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மகளிர்கள், பொதுமக்கள் என அனைவரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்க வேண்டுமென தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி4/3424/2023 **மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு மறு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**NSMT (2023-24)**

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோரயமாக (18% GST சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| பல்வேறு மண்டலங்களில் உள்ள 64 எண்ணிக்கையிலான உட்புற தார் மேம்படுத்தும் பணி NSMT (2023-24) | 13, 19, 36, 41, 43 & 50 | குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.77.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.114.00 இலட்சங்கள் | பணியின் மதிப்பு 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **05.09.2023 மாலை 3.00 மணி**

ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.

இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **06.09.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 4613 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி4/3422/2023 **மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு குறுகிய கால மறு ஒப்பம் மின்னணு இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**NSMT (2023-24)**

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோரயமாக (18% GST சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் - 4, 7, 8 & 9ல் உள்ள 27 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் தார், சிமெண்ட் கான்கிரீட் மற்றும் இன்டர்லாக் பேவர் ப்ளாக் சாலைகள் மேம்படுத்தும் பணி NSMT (2023-24) | 9 | பணியின் மதிப்பு ரூ.255.00 இலட்சம் | பணியின் மதிப்பு 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **05.09.2023 மாலை 3.00 மணி**

ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.

இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **06.09.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 4614 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்


### தி.மு.க. வர்த்தகர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

**தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!**

தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 25-8-2023 - வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் எனது (காசி முத்து மாணிக்கம்) தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி, தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி “கலை இரவு” தமிழகம் முழுவதும் நடத்துவது - குறித்து

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 18.8.2023

**காசி முத்துமாணிக்கம்,**
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி

# ஆர்.எஸ்.எஸ்.வழித்தடத்தில் சர்வாதிகார ஆட்சி நடத்தும் மோடி!


**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்




“இந்திய நாட்டின் எல்லைகள்தான் இந்திய ஒற்றுமையை உறுதி செய்கிறது என்பதைவிட இந்திய நாட்டு மக்களின் ஒருமித்த எண்ணங்கள்தான் இந்திய நாட்டின் ஒற்றுமையை காலாகாலத்திற்கும் உறுதிபடுத்தும்”, என்பதை தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தன்னுடைய 77-வது சுதந்திரதின நிகழ்ச்சியில், தேசியக்கொடியினை கோட்டையில் ஏற்றிவைத்துவிட்டு ஆற்றிய உரையில் இந்தக் கருத்தை முத்தாய்ப்பாகத் தெரிவித்துள்ளார்.

இந்தக்கருத்தின் வெளிப்பாடாகத்தான் நாடு விடுதலை பெற்ற காலக்கட்டத்தில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், இந்திய நாட்டின் ஒற்றுமை குறித்து தெரிவிக்கும்பொழுது வேற்றுமையில் ஒற்றுமை (Unity in Diversity) என்றும், பல்வேறு தேசிய இனங்கள் ஒற்றுமையாக ஒன்றுபட்டு வாழ அவர்களின் ஒருமித்த நாட்டுப்பற்றும், ஆங்கில ஆட்சிக்கு எதிரான தேசிய உணர்வும் (Emotional Integration) அடித்தளமாக அமைந்தது என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு முதல்வர் இந்தக் கருத்துகளை எல்லாம் உள்ளடக்கித்தான் பல்வேறு தேசிய இனங்களின் ஒற்றுமை உணர்ச்சியும், எண்ணங்களும்தான் நாட்டின் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் என்பதோடு, ஒன்றிய ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகவும், உரிய காலகட்டத்தில் வெளிப்படுத்தியுள்ளார் என அரசியல் நோக்கர்களும், நாட்டின் ஒற்றுமையிலும், ஜனநாயகத்திலும் நம்பிக்கை கொண்ட மக்கள் கருதுகிறார்கள். ஆனால், ஒன்றிய அரசில் தொடர்ந்து 2014-ஆம் ஆண்டு தொடங்கி பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான பாரதீய ஜனதாக்கட்சியின் ஆட்சி, மதவாத அமைப்பான ஆர்.எஸ்.எஸ். திட்டமிட்ட மதவாத அரசியல் நிகழ்ச்சிநிரலை தொடர்ந்து திரைமறைவில் படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. “ஒரே நாடு” அது “இந்து ராஷ்ட்ரம்”, “ஒரே ஆட்சிமொழி” அது “இந்தி மொழி” என்கின்ற திட்டத்துடன், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற புதிய சட்டங்களானாலும், சட்டத்திருத்தங்களானாலும் இந்திய அரசியல்சட்டத்தின் மீது (Indian Constitution) ஒன்றிய அரசிற்கு நம்பிக்கை இல்லை என்பதையே தெளிவுபடுத்துகிறது.

இந்திய அரசியல்சட்டம் வழங்கியிருக்கின்ற மக்களுக்கான அடிப்படை உரிமைகள், மாநில உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் இந்திய அரசியல்சட்டம் உருவாக்கியிருக்கின்ற தேர்தல் ஆணையம் (Election Commission), ரிசர்வ் வங்கி (Reserve Bank of India), புலனாய்வு அமைப்புகள் (Investigating Agencies) ஆகிய சுயாட்சி அமைப்புகள் அனைத்தையும் ஒன்றிய அரசின் ஆளுமையின் கீழ் கொண்டுவரும் முயற்சியில் கடுமையாக ஒன்றிய அரசு ஈடுபட்டுள்ளது. சமீபத்தில் மழைக்கால நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட 24 மசோதாக்கள், உரிய விவாதமின்றியே நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த 24 மசோதாக்களில் 3 மசோதாக்கள் நாடாளுமன்ற நிலைக்குழுவிற்கு (Parliamentary Standing Committee) அனுப்பப்பட்டுள்ளது.

இந்த மூன்று மசோதாக்களும் இந்திய குற்றவியல் தண்டனைச்சட்டம் (Indian Penal Code), இந்திய குற்றவியல் நடைமுறைச்சட்டம் (Criminal Procedure Code), இந்திய சாட்சியச்சட்டம் (Indian Evidence Act) ஆகிய இந்த மூன்று குற்றவியல் தொடர்பான சட்டங்களுக்கு திருத்தங்களை முன்மொழியும், திருத்த மசோதாக்கள் ஆகும்.

இந்த மூன்று சட்டங்களுக்கும், இந்தியில் புதிதாக பெயர்சூட்டப்பட்டிருக்கிறது. அந்தந்த மாநிலமொழிகளில் இந்த மூன்று சட்டங்களுக்கும் மொழிபெயர்ப்புக்கள் இருக்கும்பொழுது, இந்த மூன்று சட்டங்களுக்கான தலைப்புகளும், முக்கியமான அம்சங்களும், இந்தியில் மாற்றம் செய்வதற்கான காரணம் என்ன? இந்தி மொழியைஎல்லாவழிகளிலும், விளைவுகளைப்பற்றிக் கவலைப்படாமல் புகுத்துவது என்ற சதித்திட்டத்தைத் தவிர வேறு என்ன இயல்பான காரணங்கள் கூறவியலும்?

14.08.2023 தேசிய ஆங்கில இந்து பத்திரிகை இந்த மூன்று குற்றவியல் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வந்தமை குறித்தும், இந்தியில் மொழிமாற்றம் செய்தமை குறித்தும் தலையங்கம் தீட்டியுள்ளது. அதில், ஏற்கனவே குழப்பமாகவுள்ளதும் காலப் பொருத்தமில்லாத சட்டச் சரத்துக்களை, திருத்தங்கள் மூலம் மாற்றியமைப்பது தேவையென்றாலும், பொருத்தமில்லாத; ஆம்! மக்கள் வாழ்வியல் பழக்கவழக்கங்களில் இல்லாத, புதிய சட்டப்பிரிவுகளோடு அறிமுகம் செய்வது சரியாக இருக்காது என்று (Rebooting the Codes - Criminal laws may need reform but not new and unfamiliar names. The Hindu, Page No. : 6) தலையங்கத்தில் விளக்கியுள்ளது. மிகமுக்கியமானதும், ஒவ்வொரு நாளும் இந்திய ஒன்றியப்பகுதி முழுமையும் பயன்பாட்டில் உள்ள சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யும் குற்றவியல் சட்டங்களை இந்திமொழியில் மாற்றம் செய்து அவசரகதியில், நாடாளுமன்ற விவாதங்கள் இல்லாமல், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி, நிலைக்குழுவிற்கு அனுப்பிட வேண்டிய அவசரமோ, அவசியமோ இல்லை.

எனினும் இந்த குற்றவியல் சட்டங்களின் திருத்தங்கள் பற்றிய விவாதங்கள் நாடாளுமன்றத்தில் நடைபெறுவதையும், அந்த விவாதங்களின் விபரங்கள் மக்களுக்குத் தெரியக்கூடாது என்பதிலும் ஒன்றிய அரசு மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்கிறது என்பதைத்தான் இந்த ஒன்றிய அரசின் அணுகுமுறை அறிவுறுத்துகிறது. குற்றவியல் சட்டங்கள் நீண்டகாலமாக தொடக்கத்திலிருந்து ஆங்கிலத்தில்தான் தலைப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த குற்றவியல் சட்டத்திருத்தத்தின் மூலம் இந்திய குற்றவியல் தண்டனைச்சட்டம் (Indian Penal Code) “பாரதீய நியாய சங்கிட்டா” (Bharatiya Niyaya Sanhita) என்றும், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் (Code of Criminal Procedure) “பாரதீய நகாரிக் சுய ராக்சா சான்கிட்டா” என்றும், இந்திய சாட்சிய சட்டம் (Indian Evidence Act) “பாரதீய சாக்சிய மசோதா” (Bharatiya Sakshya Bill) என்றும் இந்தியில் சட்டங்களின் தலைப்புகள் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் நீண்டகாலமாக மக்களின் மத்தியில் அறிமுகமான குற்றவியல் சட்டங்களின் தலைப்புக்களை இந்தி மொழியில் மாற்றம் செய்வதற்கான நோக்கம், ஆங்கில மொழியினை முற்றிலும், அவர்களது கனவான இந்துராஷ்ட்ரத்திலிருந்து அப்புறப்படுத்திவிடும் முயற்சியின் தொடக்க வெளிப்பாடாகவே அறியமுடிகிறது என இந்துப் பத்திரிக்கையின் தலையங்கம் மேலும் அறிவுறுத்துகிறது (The objective to have Hindi names is apparently an attempt to symbolize the deAnglicization of Criminal Law - The Hindu, Dated 14.08.2023).

நாடாளுமன்ற விவாதமின்றி நிறைவேற்றப்பட்ட மசோதாக்களில் இன்னொரு முக்கியத்துவம் வாய்ந்த மசோதா “கணினிமயமாக்கிய தனிப்பட்ட எண்ணத்தரவுகளின் பாதுகாப்பு மசோதா - 2023” (The Digital Personal Data Protection Bill (DPDPB 2023)). இந்த சட்ட மசோதா குறித்து “இந்து” ஆங்கில பத்திரிக்கையில் கடந்த 08.08.2023-ஆம் நாள் தலைநகர் புதுடில்லியில் உள்ள தொழிற்கல்வி நிலையத்தில் பணிபுரியும் பொருளாதாரப் பேராசிரியை ரீட்டிகா கீர் என்பவர் கட்டுரை ஒன்றினை எழுதியுள்ளார். அந்தக் கட்டுரையில் இந்த சட்ட மசோதா சட்டமாக நிறைவேற்றப்படுமானால், மக்களின் தகவல் அறியும் உரிமை பாதிக்கப்படுவதோடு, மக்களின் அந்தரங்க உரிமையும் பெரிதும் பாதிக்கப்படும் என மிகக்கவனமாக ஆய்வு செய்து எச்சரிக்கிறார் (The much awaited DPDP Bill 2023 ends up undermining our right to information, without doing much to protect our right to privacy. The Hindu, Dt. : 08.08.2023, Page No. : 6, “Neither the right to privacy nor the right to Information).

இந்த நாடாளுமன்ற மழைக்காலத் தொடரில் உரிய விவாதமின்றி நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவைகள் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் சில குறிப்பிடத்தக்க மசோதாக்களை மட்டும் இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆர்.எஸ்.எஸ். திட்டங்களை வகுத்து நிறைவேற்ற பொருத்தமான காலத்தை எதிர்பார்த்துப் பதுங்கியிருந்த நிலையில், பாரதீய ஜனதாக்கட்சியின் ஒன்றிய ஆட்சி மூர்க்கத்தனமாகவும், முரட்டுத்தனமாகவும், ஜனநாயக வழிமுறைகளை கிஞ்சிற்றும் மதிக்காமல், நாடாளுமன்றத்தில் புதிய சட்டங்களையும், சட்டத்திருத்தங்களையும் நிறைவேற்றி அதிகாரங்களை முற்றிலுமாக மத்தியில் குவித்து, ஆம்! மையப்படுத்தி தங்களின் செயல்திட்டங்களை நிறைவேற்றும் கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். இந்திய அரசியல்சட்டத்தைப் பற்றி இன்றைய ஒன்றிய அரசு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அனைத்து அரசுத்துறைகளிலும் பாரதீய ஜனதாக்கட்சியின் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டுமே உயர்ந்த நிர்வாகப் பொறுப்புகளுக்கும், நீதித்துறைப் பொறுப்புகளுக்கும் நியமிக்கப்படவேண்டும் என்பதில் சிறப்பு அக்கறை எடுத்துக்கொண்டு தீவிரமாகச் செயல்படுத்துகிறார்கள். இத்தகைய முறையில் அதிகாரங்களை மையப்படுத்தும் முயற்சியும், நீதிமன்றங்களின் அதிகாரங்களை கையகப்படுத்தும் முயற்சியும் தொடர்ந்து திட்டமிட்டே அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இந்த முயற்சிகளின் வெளிப்பாடுதான் சமீபத்தில் நடைபெற்ற மழைக்கால நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் எதிர்க் கட்சிகளால் கொண்டுவரப்பட்ட ஒன்றிய ஆட்சியின் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான, பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், நாடாளுமன்றத்தில் அளித்த விளக்கவுரையே உள் உணர்வின் சாட்சியாக அமையும்.

நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத்தீர்மானம்மணிப்பூர்மாநிலபிரச்சினையாகும். ஆனால், பிரதமர்நரேந்திரமோடிஅவர்கள்நீண்டநேரம் உரையாற்றியுள்ளார். எனினும், அவரது உரையில் ஒன்றரை மணிநேரம் மணிப்பூர் பிரச்சினை பற்றியே குறிப்பிடவில்லை. இதனால், ஆத்திரமடைந்த எதிர்கட்சிகள் வெளிநடப்புச் செய்தபின் சம்பிரதாயத்திற்காக, மணிப்பூர் பிரச்சினை பற்றி சிறிது நேரம், தங்கள் கட்சியைச் சார்ந்த மணிப்பூர் மாநில முதலமைச்சரைப் பாதுகாக்கும் வகையில் பேசிவிட்டு, தன் வரலாற்றுப் பேருரையை, எதிர்க்கட்சிகள் இல்லாமல், நிறைவு செய்திருக்கிறார்!!

இத்தகைய ஒன்றிய ஆளும்கட்சியான பாரதிய ஜனதாக்கட்சியின் நடைமுறைகள் ஜனநாயகத்தில் ஓர் சர்வாதிகாரம் என்ற அவலநிலையை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. அதுமட்டுமல்ல, ஒன்றிய அரசிற்கு அரசியல்சட்டம் உருவாக்கியிருக்கும் ஜனநாயக நிறுவனங்கள் மீது நம்பிக்கையில்லை. எனவேதான் ஒன்றிய அரசு,

★ தாங்கள் கோரிய வண்ணம் பணத்தை விடுவிக்கும் ரிசர்வ் வங்கி

★தங்களுக்கு முழுமையாகக் கட்டுப்படும் சி.பி.ஐ.

★தங்களுக்கு அடிபணிந்து நடக்கும் தகவல் ஆணையம்

★இந்திய அரசியல்சட்டத்தைப் புறந்தள்ளிவிட்டு, இந்துக்களை மட்டும் மதித்து நடக்கும் நீதிமன்றங்கள்

★தாங்கள் இட்ட கட்டளைகளை காரணம் கேட்காமல் உடனே நிறைவேற்றும் அமலாக்கத் துறைகள்

இந்த ஐம்பெரும் கோட்பாடுகளின் அடிப்படையில் நரேந்திரமோடி தலைமையிலான ஒன்றிய அரசு பாசிச, வன்கொடுமை திசை நோக்கிப் பயணிக்கிறது என்பதில் ஐயமில்லை.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் சிருவாடியில் நடைபெற்ற தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டத்தில் கழக நிர்வாகிகளுக்கு சிறுபான்மையினர்நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய பெருந்தலைவர் தயாளன்,துணை சேர்மன் பழனி, ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் உள்ளனர்.

### நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசு ஆளுநரை கண்டித்து -

## தி.மு.க. சார்பில் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம்!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு

*நாமக்கல், ஆக. 20 -*

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து, அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க்கொல்லியாக நீட் தேர்வு உருவெடுத்திருக்கிறது. மாணவர்களை மட்டுமன்றி, பெற்றோரையும் மரணக்குழியில் தள்ளும் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், பொறுப்பற்ற ஆளுநரையும் கண்டித்து, கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பின்படியும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரும் தி.மு.க. கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் மற்றும் கழக மாணவர் அணி செயலாளர், கழக மருத்துவ அணி செயலாளர் ஆகியோரின் கூட்டு அறிக்கைக்கு இணங்க, இன்று (20.08.2023 ஞயிற்றுக்கிழமை) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரம்,



நாமக்கல் பேருந்து நிலையம் அருகில் உள்ள பூங்கா சாலையில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் சி.ஆனந்த்குமார், கழக மருத்துவர் அணி துணைச் செயலாளர் எஸ். ராஜேஸ்பாபு ஆகியோர் முன்னிலையில் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் நடைபெறும் என அறிவித்துள்ளார்.

இம் மாபெரும் உண்ணாவிரத அறப்போரில் வனத்துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் ந. தீபக்குமார், மாவட்ட இளைஞர் அணி, மருத்துவ அணி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் இளைஞர் அணி, மருத்துவ அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு கழக செயலாளர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், கிளை கழக செயலாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள், வார்டு, கிளை இளைஞர் அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், நீட் தேர்வினால் பாதிக்கப்பட்டவர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.



முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 90வது பிறந்த நாளை முன்னிட்டு திருவாரூர் காட்டூரில் கலைஞர் அவர்களின் தாயார் அஞ்சுகத்தம்மையார் நினைவிடத்தில் உள்ள முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். ஒன்றிய செயலாளர் சேகர் கலியபெருமாள், நகர செயலாளர் வாரை.பிரகாஷ், மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் சதீஷ், ஊராட்சி மன்ற தலைவர் விமலா பிரபாகர், கவுன்சிலர் வாசு, வீரபத்திரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## அ. இரகுமான்கான்

### ஆகஸ்ட் 20 (2020)



மாணவப் பருவத்திலேயே தேர்தல் பிரச்சாரம் செய்ததோடு, 1965ஆம் ஆண்டு இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றபோது, கல்லூரி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டைமீறி, போராட்டத்தில் ஈடுபட்டார்.

மதுரையில் கறுப்புக் கொடிப் போராட்டம் நடைபெற்றபோது, இவர்மீது அ.தி.மு.க. அரசால் பொய்வழக்குப் போடப்பட்டு, இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் சென்னை உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

கழகம் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் பங்கு கொண்டு வேலூர், திருச்சி சிறைகளில் இருந்த இவர், இலங்கைத் பிரச்சினைக்காக தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்று, அவருடன் சென்னை மத்திய சிறையில் சிறைவாசம் அனுபவித்தவர்.

1977ல் தொடங்கி ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், 1996ல் தொழிலாளர் நலத்துறை அமைச்சராகவும் – 2006ல் தமிழக அரசின் சிறுசேமிப்புக் குழுத் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

கழகத்தின் அமைப்புச் செயலாளர், தணிக்கைக்குழு உறுப்பினர், தீர்மானக்குழுச் செயலாளர், செய்தித் தொடர்பாளர் ஆகிய பொறுப்புக்களை ஏற்று கழகப் பணியாற்றிய இவருக்கு, 2012ல் தலைமைக் கழகத்தின் சார்பில் 'அண்ணா விருதினை' முத்தமிழறிஞர் கலைஞர் வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ஓட்டுக்காக மக்களை ஏமாற்ற பல திட்டங்களை அறிவிக்கும் ஒன்றிய அரசு!

2024 இல் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் நிலையில் மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், ராஜஸ்தான், தெலுங்கானா, மிசோரம் ஆகிய ஐந்து மாநிலங்களுக்கு நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் உட்பட மக்களின் வாக்கைப் பெறுவதற்காக நாடு முழுவதும் உள்ள கட்சிகள் குறிப்பாக காங்கிரஸ், தி.மு.க. ஆம் ஆத்மி, திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், ஜனதா தளம் உட்பட மாநில அரசியல் கட்சிகள்

பி.ஜே.பி.யை எதிர்க்கும் அனைத்து இயக்கங்களும் ஒன்றிணைந்து வலுவான சக்தியாக 'இந்தியா' என்ற பெயரில் தேர்தலை சந்திப்பதற்கு ஆயத்தமாகி. நடைபெறப் போகிற ஐந்து சட்டமன்றத் தேர்தல்களிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஒன்றுபட்டு செயல்பட்டு இந்தியாவில் இப்பொழுது ஆளும் பி.ஜே.பி. அரசை வீட்டுக்கு அனுப்ப

சர்வாதிகாரப் போக்கோடு, அராஜக போக்கோடு, ஆணவப் போக்கோடு, அகம்பாவ போக்கோடு எதிர்ப்பவர்களை அடக்குவது என்கிற போக்கோடு மக்களை ஏமாற்றும் மனநிலையோடு செயல்படும் பிஜேபியின் இந்த ஜனநாயக விரோத செயல்பாடுகளை முழுமையாக அடக்கி, இந்தியாவில் மக்களாட்சி தத்துவத்தை, மக்களின் உரிமைகளை பேணிக்காத்து ஒட்டுமொத்த இந்தியாவில் மாநில அரசுகளின் உரிமையை நிலைநாட்டி, படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் வறுமையில் வாடிக் கொண்டிருக்கும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த இந்திய நாட்டில் இறையாண்மையை நிலைநாட்ட இந்தியா கூட்டணிக்கு மக்கள் வாக்களிக்க முடிவெடுத்து முழு ஆதரவு தெரிவித்து வருகிறார்கள்

இந்த நிலைப்பாட்டை பார்த்து பி.ஜே.பி. அரசும் பி.ஜே.பி. கட்சியும் பயந்து இப்பொழுது தினசரி புதிய திட்டங்கள் என்ற பெயரில் ஏராளமான திட்டங்களை அறிவித்து வருகிறார்கள்.

இதில் ஒன்று கூட செயல்படுத்த முடியாது காரணம், சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்காத திட்டங்களுக்கு இவர்கள் நிதி ஒதுக்க மாட்டார்கள். சென்ற வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்த எந்த திட்டமும் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை. இன்னும் 7 மாத காலத்தில் எந்த திட்டமும் இவர்கள் நிறைவேற்ற மாட்டார்கள். நிதி ஒதுக்க மாட்டார்கள். மக்களை ஏமாற்றி வாக்கைப் பெறுவதற்கு இவர்கள் ஆரம்பிக்கிற ஏமாற்றுத் திட்டம்

கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் பிஜேபி கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருவதற்காக அறிவித்த ஏராளமான இலவசத் திட்டங்கள், செயல்படுத்த முடியாத திட்டங்கள். கர்நாடகாவில் ஆட்சிக்கு வர முடியாது என்று தெரிந்தே பிஜேபி அறிவித்த அந்த இலவசத் திட்டங்களைப் போலவே இப்பொழுதும் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் அறிவிக்க பிஜேபி தயாராகி விட்டது .

பிரதமர் அவர்கள் இலவசங்களை கடுமையாக எதிர்த்து மக்களை ஏமாற்றுகிறார்கள் என்றெல்லாம் பேசினார். செய்யாததை செய்வதாக தேர்தல் நேரங்களில் போய் வாக்குறுதிகளை கொடுக்காதீர்கள் நம்பாதீர்கள் என்று மக்களுக்கு கூறினார். ஆனால் அதை எல்லாம் மறந்துவிட்டு இப்பொழுது தேர்தலுக்கு மக்கள் மனதை திசை திருப்ப போலியான திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, ரயில்வே விரிவாக்கம் என திட்டமிட்டு 32 ஆயிரத்து 500 கோடி அறிவித்திருக்கிறார்கள் இதற்கு முன்பாக இந்தியா முழுவதும் 540 ரயில் நிலையங்களை புனரமைத்து எல்லா வசதிகளும் செய்வதாக 54,000 கோடி திட்டம் அறிவித்தார்கள்

இப்பொழுது டிஜிட்டல் இந்தியா திட்டத்திற்கு 14 ஆயிரத்து 93 கோடி, விஸ்வகர்மா நகைத் தொழிலாளர்களுக்கு 13,000 கோடி என்று அறிவித்திருக்கிறார்கள். மின்சார பஸ் சேவை திட்டத்திற்கு 57 ஆயிரத்து 613 கோடி அறிவித்து, இதில் 20 ஆயிரம் கோடி நிதியை ஒன்றிய அரசு வழங்கும் 129 நகரங்களில் பத்தாயிரம் மின்சார பஸ்கள் சேவையில் கொண்டுவரப்படும் என்று கூறியுள்ளார்கள்.

இதில் எந்தத் திட்டமும் ஒன்றிய அரசால் இப்பொழுது நிதி ஒதுக்கி செய்து கொடுக்க முடியாது ஆகவே இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதாக இருந்திருந்தால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அறிவித்து செயல்முறைப்படுத்தி இருக்க வேண்டும்.

இது ஒரு ஏமாற்று திட்டம் மத்திய பிரதேசத்திலும் ராஜஸ்தானிலும் ஏராளமான திட்டங்களையும் தெலுங்கானாவில் ஏராளமான திட்டங்களையும் தேர்தலுக்கு இரண்டு மாதம் இருக்கின்ற பொழுது பி.ஜே.பி. அரசு அறிவித்து வருகிறது. இதெல்லாம் நடைமுறைக்கு வராத, செயல்படுத்தாத, தேர்தல் போலி வாக்குறுதிகளாக பி.ஜே.பி. அறிவிக்கிறது

இப்பொழுது பிஜேபி கட்சி எப்படியாவது தேர்தலில் வெற்றி பெற எல்லாவித தவறான நடவடிக்கைகளை கையாளுகிறது. மக்கள் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும்.

ஆனால் எண்ணெய் நிறுவனங்கள் இந்தியாவில் மக்களுக்கு சேவை செய்வதற்கு குறைந்த விலையில் பெட்ரோல், டீசல், எரிவாயு சிலிண்டர் மண்ணெண்ணெய் மக்களுக்கு வழங்கி வருவதற்கு நிறுவப்பட்ட நிறுவனங்கள். நான்கு எண்ணெய் நிறுவனங்கள் சுதந்திரம் வாங்கியதில் இருந்து 14 ஆண்டு வரை உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஏறினால் அதற்கு ஒன்றிய அரசு நிதி உதவிக்கு மானியமாக எண்ணெய் நிறுவனங்களுக்கு கொடுக்கும்


கச்சா எண்ணெய் விலை குறைந்தால் உடனடியாக விலையை குறைத்து மக்களுக்கு வழங்குவார்கள். எந்த சூழ்நிலையிலும் மக்களுக்கு விலை ஏற்றாமல் நடுநிலையோடு வழங்கி வந்தன. எண்ணெய் நிறுவனம் 2014இல் 48 ரூபாய் பெட்ரோல் டீசல் 39 ரூபாய் கேஸ் சிலிண்டர் 450 ரூபாய் என்று விற்பனை செய்யப்பட்டது 2014 வரை ஐந்து ஆண்டுகளில் ஒன்பது முறை ஒன்றிய அரசு உச்சபட்ச கச்சா எண்ணெய் விலை ஏற்றத்தின் பொழுது மானியம் கொடுத்தது. தற்பொழுது பிஜேபி அரசு 2014இல் ஆட்சிக்கு வந்ததிலிருந்து கலால் வரி ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு 32 ரூபாய் 90 காசும் டீசலுக்கு ஒரு லிட்டருக்கு கலால் வரி 31 ரூபாய் 80 பைசாவும் வரியாக வசூலிக்கிறது. இது எல்லாம் போக ஒன்றிய அரசு கூடுதல் செஸ் வரி இருக்கிறது.

2021-22 இல் இருந்து கச்சா எண்ணெய் விலை உலக மார்க்கெட்டில் குறைந்து வருகிறது. இந்திய ஒன்றிய அரசு ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்கிய பொழுது மிகவும் குறைந்த விலைக்கு வாங்கினார்கள். இதன் மூலம் நான்கு எண்ணெய் நிறுவனங்களுக்கும் 2021 இருந்து2022ஆம்ஆண்டு 33 ஆயிரம் கோடி லாபமும் 2022 இருந்து 2023 வரை ஒரு லட்சம் கோடி லாபமும் கடந்த நான்கு மாதத்தில் மட்டும் 33 ஆயிரம் கோடி நிகர லாபமும் சுமார் ஒன்றரை வருடங்களாக இவ்வளவு லாபம் எண்ணெய் கம்பெனிகளுக்கு கிடைத்தும்;பெட்ரோல், டீசல்களுக்கு விலைகளை குறைக்காமல் விற்பனை செய்து வருகிறார்கள் இந்த எண்ணெய் நிறுவனங்கள் வியாபார நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டவை அல்ல; மக்களுக்கு குறைந்த விலையில் வழங்கி இதன் மூலம் விலைவாசிகளை கட்டுப்படுத்தவும். போக்குவரத்து வாகனங்கள் வாடகை குறைய எல்லா மாநில அரசுகளும் பொதுமக்களுக்கு பஸ் போக்குவரத்து இயக்குகிறது. இந்த பஸ் போக்குவரத்துக்கு குறைந்த விலையில் டீசல் வழங்கினால் மக்களுக்கு பஸ் கட்டணம் குறைக்க முடியும். ஆனால் ஒரு ரூபாய் கூட டீசல் பெட்ரோலுக்கு குறைக்காமல் ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது. தற்பொழுது பெட்ரோலுக்கு சுமார் 13 ரூபாயும் டீசலுக்கு 11 ரூபாயும் குறைக்கும் அளவுக்கு கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ளது

உலக நாடுகளில் எரி பொருள் வர்த்தகம் தொடர்பாக ஆய்வு நடத்தி வரும் கிருஸில் ஆய்வு நிறுவனம் இந்திய எண்ணெய் நிறுவனங்கள் லாபம் கிடைத்தும்மக்களுக்கு குறைந்த விலையில் கொடுக்காமல் இருப்பதையும் அறிக்கையாக வெளியிட்டுள்ளது.எரிவாயு சிலிண்டர் 2014 இல் 450 ரூபாய் இருந்தது. தற்பொழுது பிஜேபி அரசு 1150 ரூபாய்க்கு ஒரு எரிவாயு சிலிண்டர் விலையில் விற்பனை செய்து வருகிறது. ஒரு சிலிண்டருக்கு 700 ரூபாய் விலை ஏற்றம். ஒரு ஆண்டுக்கு சுமார் பத்து சிலிண்டர்கள் உபயோகப்படுத்தும் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 7 ஆயிரம் ரூபாய் செலவு அதிகரிக்கிறது. டீசல் விலையைக் குறைக்காததால் பஸ் கட்டணத்தில் மாதம் சுமார் ஆயிரம் ரூபாய் அதிகம் செலுத்துவதால் இந்தியா முழுவதும் ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் செலவு அதிகரிக்கிறது

ஆனால் தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்கள் விடியல் பயணத் திட்டம் 2021 இல் ஆட்சிக்கு வந்ததும் முதல் கையெழுத்தாக மகளிர் பேருந்தும் செய்வதற்கு அறிவித்த திட்டத்தின் மூலம் தினசரி 50 லட்சம் மகளிர் பயணிக்கிறார்கள். இந்தத் திட்டத்தில் இதுவரை 314 கோடி பெண்கள் அரசு பேருந்துகளில் பாதுகாப்பான பயணம் மேற்கொண்டு இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தால் ஒவ்வொரு மாதமும் பெண்கள் சராசரியாக 850 ரூபாய்க்கு மேல் மீதப்படுத்துகிறார்கள்

தற்பொழுது ஹென்லிஅன் பார்ட்னர்ஸ் என்ற வெளிநாட்டு நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்தியாவிலிருந்து சுமார் 6500 கம்பெனிகள் வெளியேற அதாவது சிங்கப்பூர் துபாய், அரபு நாடுகளுக்கு கம்பெனிகளைக் கொண்டு செல்ல முடிவு செய்துள்ளதாகவும். அங்கு கோல்டன் பாஸ்போர்ட், அரபு நாட்டு உதவி. நிலம். வரி வசூல். வலுவான சுற்றுச்சூழல் பாதுகாப்பு. அமைதி. நிதி வங்கிகள் முக்கியம் என்கிறார்கள்



**கோவை கே.செல்வராஜ்**
முன்னாள் எம்.எல்.ஏ.
கழக செய்தித் தொடர்பு
துணைச் செயலாளர்

இந்தியாவில் பாதுகாப்பின்மை, சுகாதாரமின்மை, கால நிலை, போராட்டங்கள், அரசு அதிகாரிகளின் தலையீடு, வரி சட்டம், வெளி நாட்டு பணம் தொடர்பான விதிகள் மாற்றங்கள் நிலையாக நிம்மதியாக கம்பனிகள் நடத்த முடியாத நிலை இருப்பதால் இந்தியாவிலிருந்து வெளியேற முடிவு செய்துள்ளதாககூறுகிறார்கள்.

அந்த நிறுவனங்கள் சிங்கப்பூர், துபாய், அரபு நாடுகளில் தொழிலுக்கும் தொழிலாளர்களின் மூலம் எந்த பிரச்சனையும் இல்லாமல் அமைதியான நிலைப்பாடு முக்கியம் என்ற அடிப்படையில் அவர்கள் வெளியேறுவதற்கு முடிவெடுத்து விட்டார்கள். இதை ஒன்றிய அரசு முக்கியமாகக் கவனிக்க வேண்டும். நிலைப்பாட்டில் எப்படி இந்தியாவை பொருளாதாரத்தில் உலகத்தில் மூன்றாவது இடத்திற்குக் கொண்டுவர முடியும் என்பதனை ஒன்றிய அரசு தெரிவிக்க வேண்டும்

ஒன்றிய பிரதமர் சுதந்திர தின கொடியேற்று விழாவில் ஊழலை முழுமையாக ஒழிப்போம் என்றார். இந்திய அரசினுடைய தலைமை தணிக்கை கணக்காளர் இந்த ஆண்டு வெளியிட்டுள்ள அரசினுடைய திட்டப் பணிகளுக்கு பட்ஜெட்டில் ஒதுக்குகிற நிதியில் என்ன செலவு செய்கிறார்கள், செய்யவில்லை; அந்தத் திட்டம் நடக்கிறதா இல்லையா என்பதை எல்லாம் ஆய்வு செய்து முழு அறிக்கையை சமர்ப்பிக்கிற இந்த தணிக்கை குழு சமர்ப்பித்து உள்ள அறிக்கையில் கூறியுள்ள நிதி மோசடிகள் இவை:-

1) பாரத் மாலா திட்ட காலத்தில் மோசடி! 2) துவாரகா எக்ஸ்பிரஸ் வழித்தடத்தில் குருகாம் ஒரு கிலோமீட்டர்ஸ் சாலை அமைக்க 18 கோடி என நிர்ணயித்த துறை செலவை விட நெடுஞ்சாலைத் துறை செலவிட்டு இருப்பது ஒரு கிலோமீட்டருக்கு 250 கோடி ரூபாய் இதன் மூலம் 29 கிலோமீட்டர் சாலை பணிக்கு 6,758 கோடி ரூபாய் முறைகேடு 3)சுங்க சாவடி விதிகளை மீறி பொதுமக்களிடமிருந்து 132கோடியை வசூல் செய்துள்ளது இந்த பணம் அரசு கணக்குக்கு வராமல் மோசடி 4) ஆயுஸ்மான் பாரத் திட்டத்தில் 7 லட்சத்து 50 ஆயிரம் பயனாளிகள் ஒரே எண்ணில் மீண்டும் இனைக்கப்பட்டுள்ளார்கள் மோசடி 5)அயோத்தி வளர்ச்சி திட்டத்தில் ஒப்பந்ததாரர்களுக்கு தேவையற்ற சலுகைகள் அளித்து நிதி மோசடி!

ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஓய்வூதிய திட்டத்தின் பணத்தை விளம்பரத்திற்காக பல நூறு கோடி செலவிட்டு மோசடி! எச்.ஏ.எல். நிறுவனத்தில் விமான இயந்திரவடிவமைப்பின் ஏற்பட்ட கடுமையான குறைபாட்டுத் தவறுகளால் 154 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு!

2014 வரை இந்திய முழுவதும் திட்ட கமிஷன். திட்ட கமிஷன் குழு அனைத்து மாநில முதலமைச்சர்களும் உறுப்பினர்களால் கொண்ட குழு செயல்பட்டு வந்தது. அந்த குழுவினுடைய தலைவர் முதலமைச்சர் மாநில அரசு நிதித்துறை செயலாளர் உட்பட கலந்து கொண்டு எந்தெந்த துறைக்கு எவ்வளவு ஐந்து ஆண்டு திட்டங்கள் செலவு பணம் ஒதுக்க வேண்டும் என்பது எல்லாம் முடிவு செய்து ஒன்றிய அரசு நிதி ஒதுக்கி வந்தது. அந்த நிலைப்பாட்டை இப்பொழுது மாற்றி விட்டதால், மாநில அரசுகளுக்கு முறையாக ஒன்றிய அரசின் நிதி ஒதுக்காததால், அந்தத் திட்ட கமிஷனையும் கலைத்து விட்டதால் மாநில அரசுகள் மக்கள் நலத் திட்டங்களுக்கு கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதற்கு காரணமே ஐந்தாண்டு திட்டம் நிதி ஒதுக்கிய அந்தத் திட்ட கமிஷனும் திட்டக் குழுவும் இல்லாத நிலைப்பாட்டால்தான்.

பிஜேபிஅரசு 9 ஆண்டுகளில் மாநில அரசினுடைய முழு கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்த போக்குவரத்து, உணவுவிநியோகம்,மின்சாரம்,மருத்துவம், கல்வி போன்ற அனைத்து துறைகளையும் ஒன்றிய அரசினுடைய செயல்பாட்டுக்கு கட்டுப்பாட்டுக்கு வந்ததால் மாநில அரசுகள் அந்த மாநில மக்களுக்கு முழுமையாக துறை ரீதியாக திட்டங்களை கொண்டு வந்து செயல்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

குறிப்பாக உணவுத்துறையில் நியாய விலை கடைகளுக்கு விநியோகிக்கும் அரிசிக்கும். சமையல்எண்ணெய், பருப்பு, கோதுமை, சர்க்கரை போன்றஎல்லா உணவு பொருள்களுக்கும் ஒன்றிய அரசு கொடுத்து வந்த மானியத்தை தடை செய்துவிட்டது. இந்தியா முழுவதும் நியாய விலை கடையில் வழங்கியுள்ள அடையாள அட்டைகளை இப்பொழுது ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் வழங்கி வருகிறார்கள் இதனால் நியாய விலைக் கடைகள் மாநில அரசின் செயல்பாட்டில் செயல்படுவதில் இருந்து இவர்கள் நேரடி கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஒன்றிய அரசு மானியம் கொடுக்காததால் மாநில அரசுக்கு ஆண்டுக்கு சுமார் 5,000 கோடி ரூபாய் அதிகச் செலவு உணவு விநியோகத்துக்கு செய்ய வேண்டியுள்ளது.

மின்சாரத்துறையில் தற்பொழுது இவர்கள் மாற்றி அமைத்த திட்டத்தினால், செயல்பாட்டினால் மிக அதிகமாக மின் கட்டணங்கள் பொதுமக்களுக்கு உயர்த்த வேண்டிய சூழ்நிலையை ஒன்றிய அரசு உருவாக்கி விட்டது.

போக்குவரத்து துறையிலும் ஓட்டுநர்களுக்கு உரிமை அடையாள அட்டை கொடுப்பது இந்தியா முழுவதும் ஒரே நிலைப்பாட்டில் ஒன்றிய அரசு கொண்டு வந்ததும் பஸ் போக்குவரத்துக்கு கட்டண உயர்வு இல்லாமல் மானிய விலையில் டீசலை ஒன்றிய அரசு வழங்க வேண்டும்

கல்வித் துறையில் முழுமையாக தேசிய கல்விக் கொள்கை என்ற அடிப்படையில் அதிகமாக ஒன்றிய அரசின் தலையீடு காரணமாக மாணவர்களுக்கு நிலையான கல்விக் கொள்கை வகுக்க முடியாதநிலை மாநில அரசுக்கு உள்ளது.

ஒன்றிய அரசு நினைத்த பொழுதெல்லாம் நிலைப்பாட்டை மாற்றி அமைக்கிறது குறிப்பாக அந்தந்த மாநில தாய் மொழிகளில் படித்த மாணவ மாணவியர் 12ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில் முழுமையாக படித்து அவர்கள் நல்ல மார்க் எடுத்திருந்தாலும் அந்த மார்க் அடிப்படையில் மருத்துவக் கல்வியும் பொறியியல் கல்வியும்

எந்த ஒரு மேல் படித்துக்கும் செல்ல முடியாத ஒரு பாதிப்புக்கு மாணவர்கள் உள்ளார்கள்

இவர்கள் ஒன்றிய அரசு அவரவர்கள் படித்த பாடத்திட்ட அடிப்படையில் ஆண்டு முழுவதும் படித்த பாடத்தில் கேள்விகள் கேட்காமல் நீட்டென்ற ஒரு நிலைப்பாட்டை இந்தியா முழுவதும் கொண்டு வந்து அதில் இவர்கள் கேட்கிற கேள்வி என்ன என்பதும் படித்த பாடத்திற்கு சம்பந்தமில்லாத கேள்வியாக இருப்பதால் கிராமப்புறத்தில் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர் லட்சக்கணக்கில் செலவு செய்து தனியார் பயிற்சி வகுப்புகளுக்கு சென்று படிக்க முடியாத சூழ்நிலையில் நீட் தேர்வில் இவர்கள் தேர்வாகாமல் பாதிக்கப்படுகிறார்கள்

அந்த மாணவ மாணவியருடைய வாழ்வாதாரமே பாதித்து அவர்களுடைய எதிர்காலமே ஒரு கேள்விக்குறியாகி இப்பொழுது நேற்று தேர்வாகாத மாணவ மாணவியர் ஏராளமானவர்கள் மனம் மாறி தற்கொலைக்கு ஆளாகிறார்கள்

இந்த நிலைப்பாட்டை முழுமையாக மாற்றி கல்வித்துறையில் முழுமையாகவும் மாநில அரசுகளின் கட்டுப்பாட்டுக்கு எப்பொழுதும் போல் கல்வித் துறையை மாநில அரசின் முழு செயல்பாட்டுக்கு மாற்றி அமைக்க வேண்டும். இந்த நிலைப்பாட்டை ஒன்றிய அரசு உடனடியாக எடுக்க வேண்டும்.

இந்த அவல நிலையால் ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும் எல்லா மாநிலத்திலும் மாணவ மாணவியர் பாதிக்கப்பட்டு. இப்படி தலையீடு அதிகமாக ஒன்றிய அரசு செயல்பட்டு வருவதால் மாநில உரிமைகளைப் பறிக்கும் செயலை எதிர்த்து தான் இப்பொழுது 18 வயதில் இருந்து 45 வயதுக்குள் இருக்கும் இளைஞர்கள், மாணவ மாணவியர் 55 சதவீதம் வாக்காளர்களாகவும் இருக்கிறார்கள் அவர்கள் ஒட்டுமொத்தமாக இந்தியா என்கிற அமைப்பின் முழு செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள்.

பிஜேபியின் இந்த அராஜகப் போக்கையும் ஜனநாயக விரோத செயல்பாடு களையும் எதிர்த்து இந்தியாவை காக்க இந்தியாவுக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

இனிமேலும் இந்திய மக்கள் ஏமாறத் தயாராக இல்லை. பத்து ஆண்டுகளில் பாதிக்கப்பட்டது போதும் என பிஜேபி எப்பொழுதும் வேண்டாம் என்கிற நிலைப்பாட்டுக்கு மக்கள் வந்து விட்டார்கள்.

## ‘நீட்’டை திணிக்கும் ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து

# தமிழ்நாடு முழுவதும் இன்று மாபெரும் உண்ணாவிரத அறப்போர்!

## கழக இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி கூட்டறிக்கை !

**சென்னை, ஆக. 20-**

**‘நீட்’டை திணிக்கும் ஒன்றிய அரசு - ஆளுநரைக் கண்டித்து இன்று (ஆக. 20) மாபெரும் உண்ணாவிரத அறப்போர் நடைபெறும் என்று கழக இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

‘நீட்’டை திணிக்கும் ஒன்றிய, அரசு ஆளுநரைக் கண்டித்து மாபெரும் உண்ணா விரத அறப்போர் குறித்து கழக இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி வெளியிட்டுள்ள கூட்டறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து - அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க்கொல்லியாக நீட் தேர்வு உருவெடுத்திருக்கிறது.

மாணவர்களை மட்டுமன்றி, பெற்றோரையும் மரணக்குழியில் தள்ளும் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், பொறுப்பற்ற ஆளுநரையும் கண்டித்து, கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.கழக இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி சார்பில், தமிழ்நாடு முழுவதும், இன்று (ஆகஸ்ட் 20) அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் மாபெரும் உண்ணாவிரத அறப்போரை நடத்தவுள்ளோம்.

**‘நீட்’ மரணங்களுக்கு ஒன்றிய அரசும்**
**‘நீட்’ காவலர் ஆளுநருமே காரணம்!**

அரியலூர் அனிதாவில் ஆரம்பித்த நீட் மரணம், குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன், அவரது தந்தை செல்வசேகர் வரை தொடர்கிறது. செல்வசேகர் அவர்களின் திருவுடலுக்கு மரியாதை செய்யச் சென்றபோது, யாரை தேற்றுவது - யாருக்கு ஆறுதல் சொல்வதென்று கேட்கும் அளவுக்கு அங்கு எல்லோரும் சோகத்தில் உறைந்திருந்தார்கள். நமக்கே அங்கு ஆறுதல் தேவை என்ற நிலைதான் இருந்தது.

இந்த மரணங்கள் அனைத்திற்கும், ஒன்றிய பா.ஜ.க. அரசும் - அவர்களுக்கு அடிமைச்சேவகம் செய்யும் அ.தி.மு.க.வினரும் - நீட் பாதுகாவலர் ஆளுநர் ரவியுமே காரணம்.

ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்கள் எண்ணத்தின் வெளிப்பாடாக நீட் தேர்வுக்கு விலக்கு பெறும் முயற்சிகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

ஆனால், அந்த நடவடிக்கைகளுக்கு எல்லாம் ஆளுநர் ரவி முட்டுக்கட்டை போட்டு வருகிறார்.

நம் மாணவச் செல்வங்களின் மரணம், ஆளுநரையோ, அவரை இங்கு அனுப்பியுள்ள ஆரிய மாடல் ஆட்களையோ துளியும் பாதிக்கவில்லை.

**‘நீட்’ தேர்வுக்கு பல லட்சம் செலவு**
**செய்தவர்களும் அதை எதிர்க்கிறார்கள்!**

“நீட் மசோதாவில் கையெழுத்துப் போட மாட்டேன்” என்று கூறிய ஆளுநரிடம், சேலத்தைச் சேர்ந்த அம்மாசியப்பன் ராமசாமி நேருக்கு நேர் கேள்வி எழுப்பியபோது, அதற்குப் பதில் அளிக்க முடியாத ஆளுநர் அவரிடம் இருந்த மைக்கை பிடுங்கி உட்காரச் சொல்கிறார்.

இத்தனைக்கும் ஆளுநரிடம் கேள்வி எழுப்பிய அம்மாசியப்பன் ராமசாமி அவர்களின் மகள் நீட் தேர்வில் வெற்றி பெற்றுள்ளார். நீட் தேர்வில் வெற்றிபெற்றவர்கள், பயிற்சி மையம் சென்று லட்சங்கள் செலவு செய்து தேர்வில் வென்றவர்கள்கூட நீட்டை எதிர்க்கிறார்கள்.

நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்கு அனுப்பி வைத்த பிறகு, ஆளுநர் எப்படி அதில் கையெழுத்திட முடியும்?

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியின் போது அம்மையார் ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது வராத நீட், எடப்பாடி பழனிச்சாமியின் அடிமை ஆட்சியின்போது தமிழ்நாட்டுக்குள் வந்தது.

நீட் விலக்கிற்காக 2017-ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசு நிறைவேற்றி அனுப்பிய சட்ட மசோதாவை, குடியரசுத்தலைவர் நிராகரித்ததை, 21 மாதங்கள் வரை, தமிழ்நாடு சட்டப்பேரவைக்குத் தெரிவிக்காமல் அ.தி.மு.க. அடிமைகள் மறைத்தனர். ஒன்றிய உள்துறை அமைச்சகம், சென்னை உயர்நீதிமன்றத்தில் கூறியபோது தான், அது தமிழ்நாட்டுக்கே தெரியவந்தது.

இப்படிப்பட்ட துரோக வரலாற்றைக் கொண்ட எடப்பாடி பழனிசாமிக்கோ, பிற அ.தி.மு.க. அடிமைகளுக்கோ நம்மை விமர்சிக்க எந்த அருகதையும் இல்லை.

**‘நீட்’ தேர்வை தொடர்ந்து**
**எதிர்க்கும் தி.மு.கழகம்!**

நீட் தேர்வுக்கு எதிராக, தமிழ்நாட்டில் தொடர்ச்சியாகக் குரல் எழுப்புகிற இயக்கமாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் இருந்து வருகிறது. கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், தி.மு.கழக இளைஞர் அணி - மாணவர் அணி சார்பில் நீட் தேர்வுக்கு எதிராகப் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கல்வி என்பது பொதுப்பட்டியலில் உள்ளது. ஒரு மாநில அரசால் நீட்டை ரத்து செய்ய என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ, அவை அனைத்தையும், முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

மே 2021-ல் கழக அரசு ஆட்சிக்கு வந்தவுடனே, ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் நீட் பாதகங்கள் குறித்து ஆராயச் சிறப்புக்குழு அமைக்கப்பட்டது.

**தமிழ்நாடு சட்டமன்றத்தில்**
**நிறைவேற்றப்பட்ட மசோதா!**

இந்தக்குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில், கடந்த 2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்கும் மசோதா தமிழ்நாடு சட்டமன்றத்தில் இயற்றப்பட்டது.

மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்தி வந்த ஆளுநரிடம், ஒப்புதல் வழங்கும்படி பல்வேறு தருணங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி வந்தார்கள்.

நீட் தேர்வுக்கு விலக்கு கேட்க வேண்டும் என்றும், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றக்கோரியும் அக்டோபர் 4, 2021 அன்று, 12 மாநில முதலமைச்சர்களுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்கள்.

கடந்த 2021-ஆம் ஆண்டு நவம்பர் 27-ஆம் தேதியன்று, முதலமைச்சர் அவர்கள் ஆளுநரை நேரில் சந்தித்து நீட் தேர்வுக்கு விலக்குக் கோரும் சட்டமன்ற மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கும்படி வலியுறுத்தினார்.

முதலமைச்சர் அவர்களின் தொடர் அழுத்தம் - பிற அரசியல் கட்சிகளின் அழுத்தம் - பொதுமக்கள் - மாணவர் இயக்கங்களின் போராட்டத்தின் காரணமாக 5 மாதங்களுக்குப் பிறகு பிப்ரவரி 2, 2022 அன்று நீட் விலக்கு மசோதாவினை ஆளுநர் ரவி சட்டப்பேரவைக்கே திருப்பி அனுப்பினார்.

மசோதாவை திருப்பி அனுப்பியது குறித்து, ஆலோசிப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் தலைமையில், பிப்ரவரி 5, 2022 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சட்டமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி மீண்டும் நீட் விலக்கு மசோதாவை நிறைவேற்ற முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் பிப்ரவரி 8, 2022 அன்று மீண்டும் நீட் விலக்கு மசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப் பட்டது.

இரண்டாவது முறையாக அனுப்பப்பட்ட நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வலியுறுத்தி, மார்ச் 15, 2022 அன்று முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு ஆளுநரை நேரில் சந்தித்து வலியுறுத்தினார்கள்.

**நீட் விலக்கு மசோதாவை**
**குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய ஆளுநர்!**

மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல், மீண்டும் காலம் தாழ்த்தி வந்த ஆளுநரை ஏப்ரல் 22, 2022 அன்று அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மா.சுப்பிர மணியன் அவர்கள், நேரில் சந்தித்து ஒப்புதல் வழங்க வலியுறுத்தினர். இதையடுத்து, நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்கு ஆளுநர் ரவி மே 5, 2022 அன்று அனுப்பி வைத்தார்.

இப்படி தமிழ்நாட்டுக்கு நீட் தேர்வில் இருந்து விலக்குப் பெற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் கழக அரசு ஒருபுறம் எடுத்து வருவதும், ஆளுநர் அதனைத் தடுத்து நிறுத்துவதும் தொடர்ந்து நடைபெறுகிறது.

நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும், நீட் பிரச்சினையை நம் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பி வருகின்றனர். பிரதமர் அவர்கள் தமிழ்நாடு வருகிற போதும், முதலமைச்சர் அவர்கள் டெல்லி செல்கிற போதும், பிரதமரிடம் வைக்கப்படும் முதல் கோரிக்கையே நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு கோருவதுதான்.

கழக இளைஞர் அணி செயலாளர் அவர்கள், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், பிரதமர் மோடி அவர்களை டெல்லியில் பிப்ரவரி 28, 2023 அன்று சந்தித்தார்கள். அப்போதுகூட, பிரதமர் அவர்களிடம், நீட் ஒழிப்பைத்தான் வலியுறுத்தினார்கள்.

இப்படித் தமிழ்நாடு அரசு எத்தனை முறை கோரிக்கை வைத்தாலும் ஒன்றிய பா.ஜ.க. அரசு அதனைப் பொருட்படுத்துவதே கிடையாது.

**‘நீட்’ என்பது நிரந்தரம் அல்ல!**
**முதல்வர் நிச்சயம் அதை ஒழிப்பார்!**

இந்த நேரத்தில் மாணவச் செல்வங்களுக்கு நாங்கள் சொல்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான், நீட் தேர்வு என்பது நிரந்தரம் கிடையாது.

முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் நீட் தேர்வை ஒழிப்பார்கள். அதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை. எனவே, மாணவச் செல்வங்கள் தன்னம்பிக்கையுடனும் - மன உறுதியுடனும் பொறுமை காத்திருக்க வேண்டுகிறோம்.

எத்தனை மரணங்கள் நிகழ்ந்தாலும், நீட் தேர்வு நடக்கும் என்ற எதேச்சதிகாரப் போக்கில் உள்ள ஒன்றிய அரசையும் - இல்லாத அதிகாரம் இருப்பதுபோல் மாளிகையில் கொக்கரிக்கும் ஆளுநரையும் கண்டித்து, இந்த மாபெரும் உண்ணாவிரதம் தமிழ்நாடெங்கும் நடைபெறவுள்ளது.

கழக இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி செயலாளர்கள் சென்னையில் நடக்கின்ற உண்ணாவிரத அறப்போரில் பங்கேற்கவுள்ளனர். அதேபோல, தமிழ்நாட்டில் அந்தந்த மாவட்ட தலைநகரங்களில் நடைபெறவுள்ள இந்த உண்ணாவிரத அறப்போரில் அனைத்துத் தரப்பினரும் திரளாகப் பங்கேற்க அழைக்கின்றோம்.

நீட் தேர்வை ஒழித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையும் - விலை மதிப்பில்லா உயிரையும் காக்க ஓரணியில் திரள்வோம்!

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின்,

கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., கழக மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., மருத்துவ அணியின் தலைவர் கனிமொழி என்.வி.என்.சோமு. கழக மாணவர் அணித் தலைவர் ராஜிவ்காந்தி ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.







# கலைஞரும் நானும் 32

"கலைஞர் புகழுரைகளை மட்டும் கேட்டவரல்ல. விமர்சனங்களுக்கும் வேண்டுகோள்களுக்கும் செவி கொடுப்பவராகவும், எதிர்க்குரல்களை ஏற்பவராகவும் இருந்தவர். ஒரு ஜனநாயகவாதி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு கலைஞர் உதாரணம்" என கலைஞரை சிலாகிக்கிறார் பட்டிமன்ற பேச்சாளர் ராஜா.

■ எஸ்.ராஜா,
பட்டிமன்ற பேச்சாளர்

## "எல்லா மேடையும் அவர் மேடை..!"



"கலைஞர் என்கிற ஆளுமையை முதன்முதலில் நான் அறிந்தது 'பராசக்தி' திரைப்படத்தின் வழியாகத்தான். 1968 -ஆம் ஆண்டில், 'பராசக்தி' மறுவெளியீட்டின்போது, எனக்குப் பத்து வயதிருக்கும். குடும்பத்துடன் அந்தப் படத்துக்குச் சென்றோம்.

என் அப்பா ஆசிரியர், கூடவே திராவிட இயக்கப் பற்று கொண்டவர். அப்போதெல்லாம் ஆசிரியர்கள் பெரும்பாலும் அப்படித்தான் இருந்தனர். அந்தப் படத்தின் பவர்ஃபுல்லான நீதிமன்றக் காட்சி, கம்பீரமான மொழிநடை, தமிழ் எல்லாம் புல்லரிக்க வைத்தன. அந்த வயதில், அவ்வளவுதான் புரிந்துகொள்ள முடிந்தது.



ஓரளவு எனக்கு விவரம் தெரியத் தொடங்கிய, 1972-ஆம் ஆண்டில் கட்சியில் இருந்து எம்.ஜி.ஆர் பிரிந்தபோது, அது எங்கள் வீட்டிலும் எதிரொலித்தது. பள்ளி மாணவர்கள் எம்.ஜி.ஆர் மீது கொண்டிருந்த கவர்ச்சி காரணமாக சில இடங்களில் கலவரமெல்லாம் செய்தனர். எனக்கும், எம்.ஜி.ஆர் மீது சினிமா கவர்ச்சி இருந்தது. இதனால், எனது அப்பா என்மீது கடும்கோபம் கொண்டார். 'சினிமா ஆளு பின்னாடி போகாதீங்கடா, கட்சி கெட்டுப்போகும்' என்பார். அப்படிப்பட்ட நேரங்களில் கலைஞரின் இரண்டு பெருமைகளை யாவது சொல்லிவிடுவார்.

### கலைஞரைச் சந்தித்துப் பார்!

எம்.ஜி.ஆர் பேச்சைக் கேட்க ஒரு கூட்டத்துக்குச் சென்று வந்த அன்று, அப்பா திட்டினார். 'ஒரு நாள், ஒருபொழுதாவது கலைஞரைச் சந்தித்துப் பார். அதன் பின்னர் எந்தக் கவர்ச்சிக்கும் மயங்கமாட்டாய்' என்று கூறினார்.

நான் மேடைப் பேச்சாளனாவேன், எழுதுவேன் என அறியாமலேயே அந்த வார்த்தைகளைச் சொன்னார். உண்மையில், அந்தச் சொற்களுக்கு அப்படியே உயிர் இருந்தது. கலைஞரை முதன்முறையாகப் பார்த்த அன்று, என் அப்பா சொன்ன சொற்கள் எவ்வளவு பொருள்பொதிந்தவை என்பதை உணர்ந்தேன்.

### மேடையைத் தனதாக்கும் வல்லமை

பிற்பாடு இலக்கியம், வாசிப்பு, மேடைப்பேச்சு எனத் தொடங்கிய பின்னர் கலைஞரின் பன்முக ஆற்றல் கண்முன்னால் தெரிந்தது. மேடைப் பேச்சாளர்கள் யாருமே கலைஞர் உரையை, அவரது மேடைப் பேச்சுக் கலையைப் பார்க்காமல், கேட்காமல் வளர முடியாது. ஒரு மேடையை எப்படித் தனதாக்கிக் கொள்வது என்கிற கலையை, கலைஞரைப் பார்த்துக் கற்றுக்கொள்ள முடியும்.

நேரடி விமர்சனமாக இருந்தாலும், அதை நகைச்சுவை, குத்தல், சுட்டிக்காட்டல் எனப் பல வடிவங்களில் செய்வார். பேச்சின் நீளம், ஆழம், பொருள் எனப் பேச்சாளனின் பன்முகத் தன்மையை 60 ஆண்டுகளுக்கும் மேல் மேடையில் நிகழ்த்திய தலைவர் என்றால், அது கலைஞர் மட்டும்தான். அவரது பல கூட்டங்களைக் கேட்டு, அவர் எப்படிக் கடலலை போன்ற கூட்டத்தைத் தனது குரலால் கட்டுப்படுத்துகிறார் என வியந்திருக்கிறேன். அதைப் பார்த்து, கேட்டு உணர்ந்து அனுபவித்தால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும்.

### பரபரப்பிலும் நிதானம்!

நான் மேடைப் பேச்சாளனாக வளர்ந்து வரும்போது, சாலமன் பாப்பையா அவர்களுடன் பட்டிமன்றங்களில் பேசுவதை கலைஞர் பார்த்திருக்கிறார். ஆனால், நேரடியாகச் சந்தித்தது என்றால், 2006-ஆம் ஆண்டில்தான். அமெரிக்க விசா தொடர்பாக, பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களுடன் சென்னை வந்திருந்த அன்றுதான், தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஆகவே, பாப்பையா அய்யா அறிவாலயம் சென்றதால், நானும் அவருடன் சென்றிருந்தேன்.

கலைஞர், பேராசிரியர் மற்றும் இதர தலைவர்கள் எல்லோரும் பரபரப்பாகப் பேசிக்கொண்டிருந்த நேரத்தில், வந்தவர்களையும் சந்தித்தவண்ணம் இருந்தனர். பாப்பையா அய்யா கலைஞரைப் பார்த்து வாழ்த்தியதும், நான் கொஞ்சம் தயங்கியே தூரத்தில் இருந்தபடியே சால்வையைக் கையில் கொடுத்து, வணக்கம் வைத்துவிட்டு நகர்ந்தேன். சால்வையை வாங்கிய கலைஞர் என்னை "இங்க வா" என்பதுபோல அழைத்தார்.

"எவ்வளவு வேலை இருந்தாலும், நீ பேசும்போது கேட்பேன்" என்றார். அந்த நேரத்தில் மறைந்த என் அப்பா நினைவுக்கு வந்தார். எனது கண்கள் நீரால் திரைக் கட்டிவிட்டன. எனது மேடைப் பேச்சுக்குக் கிடைத்த மிகப்பெரிய வாழ்த்தாக கலைஞரின் சொற்கள் இருந்தன. அன்றைக்கு இருந்த சூழ்நிலையில், அதைச் சொல்ல வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஆனால், எந்தப் பரபரப்பிலும் நிதானம் தவறாத அவரது ஆளுமை, இயல்பாக இருக்கும் பண்பு, ஆச்சரியத்தின் உச்சிக்கே என்னைக் கொண்டு சென்றது.

### படித்தால் பேச முடியும்

பாடலாசிரியர் பா.விஜய் எழுதிய 10 நூல்களை ஒரே மேடையில் கலைஞர் வெளியிட்டார். அந்த மேடையில், நானும் ஒரு பேச்சாளராகக் கலந்து கொண்டேன். அப்போது பேசிய பலரும், தாங்கள் பேச நினைத்ததை, முன் பேசியவர்கள் குறிப்பிட்டுவிட்டனர் எனக்கூறி, தாங்கள் பேசுவதற்கு இவ்வளவுதான் இருக்கிறது என முடித்தனர்.

சிறப்புரையாற்றிய கலைஞர், "பத்து நூல்களிலும் பேசுவதற்கு எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. பத்து நூல்களையும் படித்திருந்தால், அவற்றைப் பேச முடியும். இந்த மேடையில், பத்து நூல்களையும் படித்தது நான் ஒருவன் மட்டும்தான்போல" என்றார். அதுதான் உண்மை. நான் உட்பட மேடையில், நூல்களைப் பற்றிப் பேச வந்த எல்லோரும் கை தட்டினோம்.

முதலமைச்சராகப் பல வேலைகள், 'முரசொலி' பணி, 'கட்சிப் பணி' இவற்றுக்கு இடையில் பத்து நூல்களைப் படித்து குறிப்பு எடுக்க, இவருக்கு எப்படி நேரம் கிடைக்கிறது என வியப்பாக இருந்தது.'சிவாஜி' பட 175-வது நாள் விழாவின்போது அவர் கையால் எல்லோருக்கும் விருது வழங்கப்பட்டது. என்னைக் குறிப்பிடுகையில் 'பட்டிமன்ற பாவலர்' என அவர் அழைத்தது மிகப் பெருமையாக உணர வைத்தது.

> "ஒருநாள், ஒருபொழுதாவது கலைஞரைச் சந்தித்துப் பார். அதன் பின்னர் எந்தக் கவர்ச்சிக்கும் மயங்க மாட்டாய்!" என்று எனது அப்பா கூறினார்.

### கல்லூரியைக் காக்க வேகம்

மதுரையில் ஒரு கல்லூரி நிர்வாகப் பிரச்சினை தொடர்பாக, பாப்பையா அய்யா, கலைஞர் அவர்களைச் சந்தித்தார். நானும் உடன் சென்றிருந்தேன். அப்போது சம்பந்தப்பட்ட சில அதிகாரிகளும் வந்திருந்தனர்.

பாப்பையா அய்யா அங்குள்ள பிரச்சினைகளை விளக்கியதும், அதிகாரிகள் தரப்பில் அதை மறுத்து, அங்கு எல்லாமே சுமூகமாக இருக்கிறது எனக் கூறினர். அய்யா அங்குப் பணியாற்றிய தனது அனுபவத்துடன் மீண்டும் எடுத்துக் கூறினாலும், அதிகாரிகள் தவறான தகவலை கலைஞர் அவர்களிடம் கூறிக்கொண்டிருந்தனர்.

சற்றுத் தள்ளி அமர்ந்திருந்த நான், கொஞ்சம் வேகமாக, "அய்யா ஒரு நிமிஷம், நாங்க பட்டிமன்றம் பேசி சம்பாதித்துவிட்டு சும்மா இருக்கலாம். ஆனா, ஒரு நல்ல நிறுவனம் கெட்டுப்போய்விடக்கூடாது என்பதற்காக உங்களத் தேடி வந்திருக்கோம்" எனக் கூறினேன்.

கலைஞர் உடனே சிரித்துக் கொண்டு, அப்போது தலைமைச் செயலாளரை வரச் சொல்லு எனக் கூறிவிட்டு, 'நீங்க புறப்படுங்க' என வழி அனுப்பினார். நாங்கள் பேசிவிட்டு, வீட்டுக்குக் கீழே வருவதற்குள் சன் டிவியில், அந்தக் கல்லூரி விவகாரம் தொடர்பாக, தலைமைச் செயலாளர் தலைமையில் குழு அமைப்பு என 'பிரேக்கிங்' செய்தி வந்தது.

எந்த விவகாரமாக இருந்தாலும், கலைஞரின் கவனத்துக்குக் கொண்டு சென்றால், அதில் விரைவாகத் தீர்வு எட்டப்படும் என்பதை என் அனுபவத்தில் பார்த்த நிகழ்வு அது. தவிர, வேண்டுகோள்களுக்குச் செவி சாய்ப்பது, எதிர்க்குரலை ஏற்பது என கலைஞரின் அந்த ஆளுமை எந்தத் தலைவராலும் பிரதி எடுக்க முடியாத பண்பினை, மற்ற தலைவர்களுடன் ஒப்பிட வைத்தது.

தொடர்ந்து மக்களோடு தொடர்பில் இருந்த தலைவராக அவர் இருந்தார். அவருடன் தொடர்பில் இல்லாதவர்களும், தொடர்புகொள்ள வேண்டும் என ஆசைப்படுபவராக இருந்தார். அவர் இல்லாதபோதும் நமது தொடர்பில் இருப்பவராக இருக்கிறார், என்பதே அவரது ஆளுமைக்கான அடையாளம்.

...பகிர்வார்கள்

## கேள்வி எழுப்பும் கயிறு!



பள்ளி மாணவர்களிடம் சாதி ஆதிக்கம் எனும் நச்சு விதைக்கப்பட்டதன் விளைவு, நாங்குநேரியில் ரத்த சாட்சியாக வெளிப்பட்டுவிட்டது. சமூகநீதி, சனாதன எதிர்ப்பு, ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம், தமிழ் சமூகம் என எத்தனை முனைப்புகளுடன் சமூக மாற்றத்தை விரும்புவோரும், அரசும் செயல்பட்டாலும் சில அரசியல் பிற்போக்கு அநீதி சக்திகள் மக்களைப் பிரித்து ஆதாயம் அடைவதிலேயே குறியாக உள்ளன. அதன் விளைவுதான் மாணவர்கள் மத்தியிலும் விரவிவரும் சாதி என்கிற நச்சு. அதற்கு எதிராக மாணவர்களிடம் எப்படி வினையாற்றுவது, சாதி நச்சுக்கு எதிராக மாணவர்களின் உள்ளத்தை எப்படி தயார்படுத்துவது என பேசுகிறது 'கயிறு' என்கிற சிறார் நூல். வளரிளம் பருவத்தினர் வாசித்து, உணர, கேள்வி எழுப்ப பள்ளிக்கூட மாணவனின் பார்வையிலேயே பேசும் இந்த நூலை எழுதி இருக்கிறார் சிறார் எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணன். 'ஓங்கில்கூட்டம்' வெளியிட்டுள்ள இந்த நூல், காலத்தின் தேவை அறிந்து மாணவர்கள் மத்தியில் கொண்டு சேர்க்க வேண்டியது நமது கடமையாகிறது.

## :ப்ளாஷ்பேக்



## முப்பாலும் மூன்று இயக்கங்களும்!



குமார சுப்பிரமணியம்

திராவிடக் கழகத்தில் சில மாதங்கள் பொதுச் செயலாளராக இருந்த பன்மொழிப் புலவர் அப்பா துரையார் எழுதிய 'முப்பால் ஒளி' என்ற இதழ் ஜனவரி 1, 1966- ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அந்நிகழ்வில் தலைவர் கலைஞர் அவர்கள் வள்ளுவர் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார். நீதிக் கட்சிப் பொதுச்செயலாளர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களும் அதே மேடையில் திருக்குறளின் மேன்மைகளை மேற்கோள் காட்டி உரையாற்றினார். ஒரே மேடையில் நீதிக்கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய அரசியல் இயக்கங்களைச் சார்ந்த தலைவர்கள் இடம் பெற்றுள்ளனர். அவர்களுடன் மேடையில் இடம்பெறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை நினைத்து இந்நேரத்தில் மகிழ்கின்றேன்.

**-குமார சுப்பிரமணியம்,**
**மாவட்ட இலக்கிய அணித் தலைவர்,**
**நெல்லை மத்திய மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### பெரியாருக்குச் சிலை!

**1974 - ஆம் ஆண்டு, கழக ஆட்சியின்போது சென்னை அண்ணா சாலையில், தந்தை பெரியார் சிலையைத் திறந்து வைத்தபோது, எதிர்க்கட்சியாக இருந்த அ.தி.மு.க சார்பில், அதே நாளில் கழகத்துக்குப் போட்டியாக, அண்ணா மேம்பாலத்தருகே பெரியார் சிலைக்கான பீடம் கட்ட அடிக்கல் நாட்டு விழாவினை நடத்தினார்கள். அண்ணா மேம்பாலத்தின் ஒரு பக்கத்தில் வைத்தால் பார்வையாக இருக்காது என்றும், வேறொரு இடத்தைத் தேர்ந்தெடுக்கவும், என அரசின் சார்பில் கூறியபோதும் மறுத்துவிட்டனர். அவர்கள் கொடுத்த வரைபடத்தை ஏற்றுக் கொண்டு கழக அரசு அனுமதி அளித்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 215




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131